
கல்கி
KALKI
15.11.1970
40 காசு

ஆறு மாதங்களுக் கெல்லாம் பங்ஜீ வீட்டெங்கிலும்
தவழ ஆரம்பித்து விட்டான். அவன் எப்போதுமே
சுறுசுறுப்பு; உற்சாகம் துள்ளும் முகத்திலோ திவ்-
யான மலர்ச்சி. அவனுடைய எடை திருப்திகர
மாகவே இருக்கின்றது. பங்ஜீயின் கட்டும்
விறுச்சுடர் தாய்மார்களுக்கு ஒரு அரிய செய்தியை
விடுக்கின்றது. துள்ளும் ஆரோக்கியம். பங்ஜீயின்
இரகசியம்: ஒரு விசேஷ குழந்தை உணவு.

முத்தான குழந்தை



முத்தான குழந்தை உணவு

அறிமுகப் படுத்திய இரண்டாண்டுகளுக்குள்
அமுல்ஸ்ப்ரே விற்பனையில் மற்றெந்த பாலணவையும்
மிஞ்சி, குழந்தை உணவுகளிலே முதலிடத்தைப்
பிடித்துக் கொண்டு விட்டது. விசேஷமான
ஊட்டத்தை அளிப்பதற்காக, அது ஒரு விசேஷ
செய்முறைப்படி விசேஷமான ஆக்க முறையில்
(ஸ்ப்ரே-ட்ரையிங்) தயாரிக்கப் படுகிறது. ஆம்.
உங்களுடைய அருமைக் குழந்தைக்காக, சீரணிக்க
எளிதான அமுல்ஸ்ப்ரே சமவிகித ஊட்டச்சத்தை
வாரி வழங்குகிறது; அவசியமான வைட்டமின்களும்,
கனிப் பொருள்களும்; நோயும் உடலும் நன்கு
வளர்வதற்காக அதிகமான தரம் விருந்த புரதம்.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப் பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.

ASP/AS-14



ஓவியப் படைப்பின் பரவசமூட்டும் விநாடிகள்..
பள்ளிக்கூடத்திலே மாணவருக்கும் சரி
கலைக்கூடத்திலே ஓவியருக்கும் சரி
மாணவர்களுக்கான
ஆயில் மற்றும் வாட்டர் கலர்கள்
ஓவியர்களுக்கான
ஆயில், வாட்டர் மற்றும்
போஸ்டர் கலர்கள்


உலோகம் கனமானது...
ஆனால் பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் இலேசானவை
உலோகத்தின் உறுதி, கண்ணாடியின் எழில், ஆனால் இவற்றின் குறைபாடுகளற்றது—அதுதான் உங்களுக்கான பிளாஸ்டிக். இலேசு, நீடித்த உழைப்பு, வண்ணங்கள், சுத்தம், வசதி, இவையனைத்தையும் உங்களுக்கென அற்புதமாக இணைத்து வழங்குகிறது பிரைட் பிளாஸ்டிக்.
பிரைட் பிளாஸ்டிக்கில் விதவிதமான வகைகள், வகை வகையான பொருட்கள். அளவிலாப் பயனளிக்கும் ஏராளமான சாமான்கள். சீப்புகள், தட்டுகள், சோப்புப் பெட்டிகள், குவளைகள், ஜாடிகள், சாமான் கூடைகள், வாளிகள், பேஸின்கள், டிரேக்கள் இன்னும் பலப்பல.
பிரைட் தான் உங்கள் சரியான தேர்ந்தெடுப்பு!
பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்.,
156A, ஜே. தாதாஜி ரோடு,
பம்பாய்-34.

சாதாரண, ஐப்பசி 29 ○ 1970, நவம்பர் 15

கல்கி

சிபாருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


களைப்பா?
க்ளாக்ஸோஸ்-D
நிமிட நேரத்தில் சக்தி தரும்
நான் சோர்வும் களைப்பும் தோன்றும்போது நான் அருந்துவது க்ளாக்ஸோஸ்-D
அன்றாடம் நீங்கள் களைத்துப் போவது ஏன்? உடலுழைப்பிலும், மூளை வேலையிலும் உங்கள் உடம்பு க்ளுகோஸை நிராகரித்துவிடுவதனால். உடனடியாக அதனை ஈடுசெய்ய க்ளாக்ஸோஸ்-D அருந்துங்கள் குடிநீர், பால், பழச்சாறு ஏதனுடனும் கலந்தோ, தனியாகவோ சாப்பிடலாம். ஒருசில நிமிடங்களில் புத்துணர்ச்சிபெற்று மீண்டும் உற்சாகமுடன் திகழுவீர்கள்.
இன்றே களைத்திடும்போது க்ளாக்ஸோஸ்-D அருந்துங்கள்— குறைந்த விலையில் உடனடி சக்தி தரும் உணவு
dCA/GL/10 Tam

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா --- பாரதியார்



மலர் 30

இதழ் 16

சோஷலிஸம் என்னும் மாயப் பிரசாரம்

இப்போது பிரசார கோஷங்கள் மலிந்துள்ளன. பிரசார கோஷங்கள் என்பவை வெறும் வார்த்தைகளே. விடாத பிரசாரம் காரணமாக அந்த வார்த்தைகள் மக்களிடை தவறான பொருளையும் பெற்று விடுகின்றன. இதனால் ஏற்படும் குழப்பத்தைத் தெளிவிப்பது மிகக் கடினமாக உள்ளது.

சமூக சம நீதியும், பொதுமக்கள் நலனும்தான் எல்லாக் கட்சிகளுக்கும் இலட்சியமாகும். அந்த இலட்சியத்தை அடைவதற்கு ஒரு வழியாகவே சோஷலிஸம் சிலரால் இயற்றப்பட்டது. ஆனால் சோஷலிஸம் என்பது பிரசார கோஷமாக ஆகிவிட்டபடியால் பொதுநலனுக்கு அது ஓர் **உபாயமே** என்ற கருத்துப் போய், பொதுநலம் என்ற **இலட்சியமே** சோஷலிஸம்தான் என்ற எண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணத்தின் தொடர்ச்சியாக, சோஷலிஸத்தை ஏற்காதவர்கள் எல்லாரும் பொது நலனுக்கும், சமூக சமநீதிக்கும் எதிரிகள் என்ற கருத்தும் உண்டாவது இயற்கைதானே? பிரசார வார்த்தைகளைக் கொண்டு குழப்பம் செய்யும் விஷமத்தால் இந்த விளைவு உண்டாகியுள்ளது.

சுதந்திரக் கட்சியானது பொதுமக்களின் நலனையும், சமூக சம நீதியையுமே குறிக்கோளாகக் கொண்ட கட்சி. ஆனால் குறிக்கோளை அடைய 'சோஷலிஸம்' என்ற பெயரில் ஸ்ரீமதி இந்திரா காந்தியால் பின்பற்றப்படும் மார்க்கத்தை அது ஏற்கவில்லை. 'சோஷலிஸம்' என்பது பல மார்க்கங்களில் அதுவும் ஒரு **மார்க்கம்** என்பதற்கு மாறாக, சோஷலிஸம் ஒன்றே சமூக முன்னேற்றம் என்கிற **லட்சியமாகும்** என, விஷய ஞானமற்ற மக்களிடையே வெற்றிகரமாகப் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே பல அரசியல் கட்சித் தலைவர்களும் 'சோஷலிஸம்' என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொள்ளாவிடில் தங்கள் கட்சியானது வாக்காளரிடையே வெற்றி பெறும் வாய்ப்பே இல்லை எனக் கருதுகின்றனர். இந்த அடிப்படைத் தவற்றுடன் சுதந்திரக் கட்சி போராடியாக வேண்டும். ஸ்தாபன காங்கிரஸ்காரர்களும் வேறு பல கட்சிக்காரர்களும் இந்தத் தவற்றுக்கு உடன்பட்டால்தான் ஜீவிக்க முடியும் என்று கருதிவிட்டது போல் சுதந்திரக் கட்சியும் செய்யலாகாது.

பொது நலனுக்கும், சமூக சம நீதிக்கும் ஒரு மார்க்கமாகக் கூறப்படும் சோஷலிஸத்தின் லட்சணம் யாதெனில் சர்க்கார் முதலாளித்துவமும், சர்க்காரின் தொழில் நிர்வாகமுமேயாம். சர்க்கார் முதல் போட்டுத் தொழில் நடத்துவதெனில் அதற்கான முதலை மக்களின் வரிப் பணத்திலிருந்தே திரட்டியாக வேண்டும். இது தவிர உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏராளமாகக் கடன் வாங்கியாக வேண்டும். இவ்விதம் வரியாகவும் கடனாகவும் பணம் திரட்டி நடத்தப்படும் சர்க்கார்த் தொழில் எப்படி இயங்குகிறதெனப் பார்த்தால் இதில் எங்கும் நஷ்டமே உண்டாகிறது என்று அனைவரும் அறிவர். இப்போது கடன்களுக்காகத் தரும் வட்டித் தொகை சர்க்காரின் வருடாந்தரச் செலவில் வெகுவாக ஏறி வருவதையும் அறிவோம்.

சோஷலிஸத்தை ஆட்சேபிப்பவர்கள் என்ன சொல்கிறார்கள்? மக்கள் அனைவரையும் பாதிக்கும் விதத்தில் இவ்விதம் வரிப் பணத்தாலும் கடன் தொகையாலும் நடத்தும் அரசாங்கத் தொழில் நிர்வாகத்தை விட்டுவிட வேண்டும் என்கின்றனர். இதைவிடச் சிறப்பாக நிர்வாகம் நடத்தும் தனியாருக்கே இத்துறையை விட்டுவிடவேண்டும்; அவர்கள் தொழில் நடத்தி லாபமோ நஷ்டமோ அடையச் சுதந்திரமாக விடவேண்டும் என்கின்றனர். சுய ஈடுபாட்டுடன் இவ்வாறு தொழில் நடத்தும் போதுதான் உற்பத்திப் பெருக்கமும், சுபிட்சமும், வேலை வாய்ப்பும் ஏற்படும் என்கின்றனர். இந்த நியாயமான வாதத்தை வெறும் பொறாமை மனப்பான்மை கொண்டு சோஷலிஸவாதிகள் எதிர்க்கிறார்கள். முதல் போடுபவர்கள்

அவ்விதம் முதலீடு செய்யும் போது அது பலனளிக்காமலும் போகக் கூடும் என்ற ஆபத்தை மேற்கொள்கின்றனர்; மேலும் அவர்கள் சுய ஈடுபாடு காரணமாகத் தொழிலைத் திறம்பட நிர்வாகம் செய்கின்றனர். இவ்விரண்டு அம்சங்களை உத்தேசித்து அவர்கள் நியாயமான லாபத்துக்கு உரிமை பெற்றவர்கள். இந்த உண்மையைப் புறக்கணித்து விட்டு, முதலீட்டாளர்கள் யாவரும் சுரண்டல்காரர்கள் என்று சோஷலிஸ்டுகள் வர்ணிக்கிறார்கள்.

தனி முதலாளிகளுக்குப் பதில் சர்க்காரைத் தனியொரு முதலாளியாக்கி விட்டால், ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர் தவிர மற்ற யாவரும் அடிமை நிலையிலேயே வாழ நேரிடும். இதனைக் கம்யூனிஸ நாடுகளில் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். அரசு நேரடியாகத் தானே தொழிலில் பணம் போட்டு, தனது சிப்பந்திகளையே அதில் நிர்வாகிகளாக வைத்த பின், மக்கள் சுதந்திரமாகப் பொருளாதார வாழ்வில் இயங்குவதற்கு அதனால் அனுமதிக்க இயலாது. நாளா வட்டத்தில் மக்களுக்கு இந்த அடிமை நிலையே பழகிப் போய் விடும்; சுதந்திரத்திலுள்ள இயற்கை ஆசையை இழப்பர்; சொந்த முடிவு செய்யாமல் சர்க்காரையே சார்ந்திருக்கும் நிலையை மக்கள் விரும்பி ஏற்கும் நிலையும் உண்டாகும். இப்படிப்பட்ட நிலை கொடுமையானது அல்லவா?

சர்க்காரின் கட்டுப்பாடற்ற அதிகாரத்தால், அடிமை நிலை ஏற்படாமலிருப்பதற்கான உத்தரவாதத்தை நமது அரசியல் சாஸனம் இருபதாண்டுகளுக்குமுன் நம் தேசப் பிரஜைகள் அனைவருக்கும் வழங்கியது. எனவே, இப்போது சோஷலிஸத்தை எதிர்ப்போரைப் 'பிற்போக்குவாதிகள்' என்றால், அரசியல் சாஸனத்தை உறுதியோடு காப்பதே பிற்போக்குத் தன்மை என்றுதான் அர்த்தமாகும். 'சோஷலிஸம்' என்பது போலவே, 'பிற்போக்கு' என்பதும் வெறும் பிரசார வார்த்தைதான். அரசியல் சாஸனத்தைக் காத்து, அது மக்களுக்கு வழங்கும் சுதந்திரங்களை உறுதிப்படுத்துவதில் முனைப்புடன் இருப்பது 'பிற்போக்கு' எனில், 'பிற்போக்கு' என்பதையே நல்ல வார்த்தையாகக் கொள்ளலாம். அந்நிய எதிரிகளை எதிர்த்துப் போரிடுவதென்பது எப்படிப்பட்ட தேசப் பற்று மிக்கக் கடமை உணர்ச்சியோ, அதற்கு இம்மியும் குறைவானதல்ல சாஸனத்தை மாற்றுபவர்களை எதிர்த்துப் போராடி நம் அரசியல் சாஸனத்தைக் காத்து நிற்பது.

(ராஜாஜி ''ஸ்வராஜ்யா''வில் எழுதியது.)

என்ன சேதி?

ரயில் விபத்து

என்ன பயங்கரம்! சென்னைக்கு அருகே பெரம்பூர் ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்த கொச்சின் எக்ஸ்பிரஸ் மீது மங்களூர் மெயில் மோதி, பலர் துர்மரணம் அடைந்த செய்தி கேட்டுத் தமிழகம் நிலைகுலைந்துவிட்டது. சமீப காலத்தில் தமிழகத்தில் இயற்கையின் சீற்றத்தாலன்றி இப்படியொரு ரயில் விபத்து நிகழ்ந்ததில்லை. இந்த விபத்தினால் தந்தையை இழந்தவர், தாயை இழந்தவர், தனயனை இழந்தவர், கொண்ட கணவனை இழந்தவர், பெற்ற சேயை இழந்தவர் என்று தென்னகமெங்கும் நூற்றுக்கணக்கானவர்கள் ஆறாத் துயரத்தில் அழுந்தி யிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் நமது உளமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நடன நிபுணரின் மறைவு

'கதக்' என்பது தென்னகத்துப் பரத நாட்டியம் போலவே தொன்மை நிறைந்த வடஇந்திய ஆடற் கலையாகும். இவ்வரிய கலையில் அற்புதத் தேர்ச்சி பெற்று முடிசூடா மன்னனாக விளங்கிவந்தவர் ஸ்ரீ சம்பு மகராஜ். அவரது ஆடல் வன்மையையும் கற்பனை வளத்தையும் கண்டு வித்வான்களும் வியந்துள்ளனர். 'கதக்' என்று சொன்னவுடன் சம்பு மகராஜைத்தான் நினைக்கத் தோன்றும். புகழ் கொண்ட இம் மேதையின் மறைவு பாரதத்தின் கலையுலகுக்கு மகத்தான இழப்பாகும்.

அந்தோ பரிதாபம்!

பஞ்சாபில் மோகா என்ற ஊரில், கெட்டுப் போன மருந்தை உட்கொண்டதால் குறைந்த பட்சம் இருபத்தைந்து குழந்தைகளாவது இறந்திருக்கும் எனத் தெரிகிறது. அக்கம் பக்கம் கிராமக் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டால் இறந்தோர் எண்ணிக்கை நூற்றுக்கு மேல் இருக்குமாம்! வைத்தியப் படிப்பில் லைசென்ஸ் பெறாத ஒருவர் கொடுத்த மருந்தின் காரணமாக இப்படிப் பல குழந்தைகள் இறந்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தப் பரிதாபகரமான சம்பவத்திலிருந்து மக்கள் எச்சரிக்கை பெற்று, தக்கோரிடமே மருத்துவத்துக்குச் செல்ல வேண்டும்.

ஆகாச துர்கை ஆலயப் பணி

''கதிர் வேய்ந்த மங்கலம்'' எனக் கவிச் சக்கரவர்த்தி கம்பரால் குறிப்பிடப்பெறும் பெருமை பெற்ற ஊர், கதிராமங்கலம். இங்கு மார்க்கண்டேயரின் தந்தையான மிருகண்டு மகரிஷி தவமிருந்ததாக வரலாறு. நவதுர்கை எனப்படும் ஒன்பது அனுக்கிரக சக்திகளைக் குறித்து ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் அவர் தவமிருந்ததாகவும், இவற்றில் கதிராமங்கலம் வனதுர்கா க்ஷேத்திரம் என்றும் கூறுவர். இங்குள்ள வரப்பிரசாதினியான துர்கா பரமேசுவரியைப் பொதுவில் ஆகாய துர்கையம்மன் எனக் கூறி வழிபடுகின்றனர். அம்பாளின் ஆலயம் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. யாத்ரீகர்கள் தங்க மண்டபமும் எழுப்பப்படுகிறது. பக்தர்கள் இயன்ற பொருளுதவி புரிந்து துர்காம்பிகையின் அருள் பெறவேணும். திரவியம் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கே. ஸ்ரீநிவாசன், பொருளாளர், ஸ்ரீ துர்கா பரமேச்வரி ஆலயத் திருப்பணிக் கமிட்டி, கதிராமங்கலம், தஞ்சை மாவட்டம்.

[illegible]

மகா வித்வான்களின் வரிசையில் திகழ்ந்த முதுபெரும் இசைக் கலைஞர் கும்பகோணம் திரு ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களை இழந்து விட்டோம்.

துவாரம் வேங்கடசுவாமி நாயுடு, மைசூர் சௌடய்யா, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை ஆகிய மூவரும் முப்பெரும் வயலின் விற்பன்னர்களாகத் திகழ்ந்த சகாப்தம் ஒன்று கர்நாடக இசையுலகில் உண்டு. பிள்ளையவர்களின் மறைவோடு அந்த அத்தியாயம் முடிந்து விட்டது.

புகழ்கொண்ட திருக்கோடிகாவல் கிருஷ்ண அய்யர் அவர்களது சீடரான ராமசுவாமி அய்யரின் சீடர் திரு ராஜமாணிக்கம் பிள்ளை. அயராத அப்பியாசம், வளமான கற்பனை இவற்றின் காரணமாக இள வயதிலேயே தேர்ந்த திறமை பெற்ருர். தனியாக (ஸோலோ) கச்சேரி செய்ததுடன், பிரபல வித்வான்களுக்குப் பக்கவாத்தியமும் வாசித்தார். "எல்லா வித்வான்களும் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களையே தமது கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியமாக ஏற்பாடு செய்து கொள்வதற்கு விரும்பி வந்தார்கள்" என இன்று செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் கூறும்படியான சிறப்பு ஸ்தானத்தை வகித்தார். இவ்விதம் பக்கவாத்தியத்தில் சகலராலும் தேர்ந்தெடுக்கப்படுவதில் ஒரு விசேஷம் உண்டு. பக்கவாத்தியக் கலைஞர் எவ்வளவு மனோதர்மம் பெற்றவராக இருப்பினும், பாடகரின் மனோதர்மம் பொலிவதற்கு அநுசரணையாக அடக்கத்துடன் அவரைப் போஷித்து, உற்சாகமூட்டி வாசிப்பது கலையுலகில் மகத்தான பண்பாகும். இந்தப் பண்பைக் குறைவறப் பெற்றிருந்தவர் திரு பிள்ளையவர்கள். நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நமது இசையரங்குகளில் அமுத கீத மழை பொழிந்து, 'மரபுக்குச் சிறிதும் விரோதமாகச் செல்லாதவர் ; சங்கீதத்தில் கௌரவமானவர்; நடந்துகொள்ளும் விதத்திலும் மிகக் கௌரவமானவர்' என்ற ஏகமனதான மதிப்பீட்டைப் பெற்ருர்.

பெயரும் புகழும் பாராட்டுக்களும் பட்டங்களும் அவரைத் தேடி வந்தன. 'சங்கீத கலாநிதி', 'இசைப் பேரறிஞர்' ஆகிய விருதுகளைப் பெற்ருர். சங்கீத நாடக அகாடமியின் பரிசைப் பெற்ருர். திருவிதாங்கூரில் ஆஸ்தான வித்வானுக அணி செய்தார். அப்போது ஒரு முறை மன்னர் வெகுமதியாக அளித்த யானையைக் குடந்தைக் கும்பேசர் கோயிலுக்குக் காணிக்கை செலுத்தித் தமது பக்தியை வெளிப்படுத்திஞர்.

பல சீடர்களை நல்ல கலைஞர்களாக உருவாக்கிய பெருமை திரு பிள்ளையவர்களுக்கு உண்டு. எதிர்காலத்திலும் இந்தச் சிஷ்ய பரம்பரை பல்கித் தழைத்து, அவரது தூய, இனிய, சம்பிரதாய சங்கீதத்தைப் பரப்புமாயின் அதுவே திரு பிள்ளையவர்களுக்கு நினைவுச் சின்னமாக விளங்கும்.



ராஜாஜியின் கருத்துக்கள்

இந்திய தேசத்தில் ஒரு ராஜ்யம் தவிர மற்ற அனைத்தும் உற்சாகமாக ஈடுபட்டுள்ள ஒரே 'சர்க்கார் தொழில்' லாட்டரிதான். இதற்காக எல்லா ராஜ்யங்களும் பெருமளவில் விளம்பரம் செய்கின்றன. இந்த சாலை விரோதமான, நெறியற்ற வியாபாரத்தை ஆதரித்து யார் எது சொன்னாலும் சரி, நான் இதனைத் தேசிய ரீதியில் உருவாகிவிட்ட ஒரு மானக்கேடாகவே கருதுகிறேன். உற்பத்திக்கு உதவாத இந்த லாட்டரித் திட்டத்தால் சோஷலிஸத்துக்கு நேர் விரோதமான ஏற்றத் தாழ்வுகள் சிருஷ்டிக்கப்படுகின்றன. ஏழைகளுக்குச் சூதாடுவதற்குச் சபலம் காட்டுவதே இதன் அடிப்படை. இது மக்களின் உழைப்பு மனப்பான்மையைப் பலவீனப்படுத்துவது. அவர்கள் குருட்டு அதிர்ஷ்டத்தைச் சார்ந்திருக்குமாறு செய்வது. மொத்தத்தில் லாட்டரி என்பது தேசத்தின் தார்மிக உணர்வையே நலிவு செய்யும் விவகாரம்.

போகிற போக்கைப் பார்த்தால் சொத்துக்கு வரம்பு விதிப்பதற்காகச் சட்டம் செய்யும் சர்க்கார்கள், லாட்டரியால் கிடைத்த சொத்துக்களுக்கு விலக்குக்கூட அளிக்கலாம்!

★

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து, தங்கள் நாடு உட்பட உலகு அனைத்துக்கும் தீங்கு இழைக்கும் தற்கொலைக் கொள்கையை ஸ்ரீ லெஸ்லி பியர்ஸன், ஸ்ரீமதி விஜய லக்ஷ்மி பண்டிட், ஸ்ரீ கார்லஸ் ரோமுலோ ஆகியோர் கண்டனம் செய்துள்ளனர். சிறிய அளவில் இதே போல் ஒரு தற்கொலைத் திட்டத்தைத்தான் நமது பிரதமரை ஆதரிக்கும் தொழிலதிபர் சமுதாயமும் பின்பற்றுகிறது. ஸ்ரீமதி இந்திராவின் அதிகாரம் நீடிப்பதற்குத் தேவைப்படும் கோடிக்கணக்கான ரூபாய்களை அளிக்கும் தொழில் துறையினர், தேசத்தை நாசம் செய்வதோடு அவர்களையும் பலி இடுகின்ற அதிகார பீடத்துக்குப் பலம் அளித்து வருகின்றனர். எப்படியும் தங்கள் வாழ்வு தீர்ந்து விட்டது என்ற தீர்மானத்தில், அடக்கவொண்ணு வேட்கையுடன் விட்டில் பூச்சிகள் விளக்கில் வீழ்ந்து மாய்வது போலவே நம் நாட்டில் வர்த்தக சமூகம் நடந்து கொள்கிறது.

தொழில் துறையினர் தனித்துப் பேசுகையில் பிரதமரின் கொள்கைகளுக்காகவும் செயல்களுக்காகவும் அவரைச் சபிக்கின்றனர். ஆயினும், அவருக்கு இரகசியமாக ஏராள நிதியம் நன்கொடை தந்து தங்களுக்கே நாசத்தை விளைவித்துக் கொள்கின்றனர்.

★

''சோஷலிஸம்'' என்ற வெற்று வார்த்தைப் பிரசாரம் போலவே, தேசத்தைப் பிடித்துள்ள இன்னொரு பிரசார வார்த்தை, ''நிலச் சீர்திருத்தம்'' என்பதாகும். நன்கு உற்பத்தி செய்யும் பண்ணைகளைச் சின்னாபின்னம் செய்து, முதலீடு செய்ய வசதியற்றவர்களிடம் துண்டாடுவதும், அவர்கள் அந்த நிலத்தை அற்பத் தொகைக்கு விற்று அல்லது அடமானம் வைத்து, அப்பணத்தைப் பல விதங்களில் செலவழித்து விடுவதும்தான் ''நிலச் சீர்திருத்தம்'' எனப்படுவது.

ஒருபுறம், டிராக்டர்களைக் கொண்டு உழுது உற்பத்தியைப் பெருக்குவது பற்றிப் பேச்சு; மறுபுறமோ, அதற்கு முற்றும் முரணாக, விலை உயர்ந்த டிராக்டர்களுக்காக முதலீடு செய்ய இயலாத அளவில் நிலங்களுக்கு வரம்பு விதிக்கிறார்கள்.

ஏழைகளுக்கு வழங்கப்படும் நில உரிமைப் பத்திரங்கள் உற்பத்திக்கு உதவும் உரமோ, ஏரோ, காளையோ அல்ல. அவை தேர்தலில் அரசியல்வாதிகளுக்கு வோட்டுப் பெற்றுத் தரும் காகிதங்களே. 'நாங்கள் நிலப்பறியில் இறங்கினதால்தான் ஏழைகளுக்கு இந்தப் பட்டா கிடைத்திருக்கிறது' என்று கம்யூனிஸ்டுகள் உரிமை கொண்டாடி, அறியா மக்கள் மீது தங்கள் செல்வாக்கை அதிகமாக்கிக் கொள்வர். அராஜக முறையில் நிலப்பறி செய்பவர்கள் தலை எடுக்கும் அதே சமயத்தில், ஏழைகளால் சமாளிக்க முடியாத ஒரு பளுவை அந்த ஏழை மக்களுக்கு நன்கொடையாக வழங்குவது அறிவீனம்.

ராஜஸ்தானத்திலுள்ள கோட்டா நகரத்தில் மீரா ஜயந்தி விழா



சங்கீத கலாநிதி

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ... பாட்டு

ஸ்ரீ வி. வி. சுப்பிரமணியம் ... வயலின்

ஸ்ரீ டி. கே. மூர்த்தி ... மிருதங்கம்

ஸ்ரீ வி. நாகராஜன் ... கஞ்சிரா

14-11-70 சனிக்கிழமை மாலை

கோட்டா, ஸ்ரீராம் நகரிலுள்ள ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை அரங்கில்

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

சக்கரவர்த்தியின் கோபம்

மந்தாகினியை மற்ற அரண்மனைப் பெண்டிர் சிற்ப மண்டபத்தில் கண்டு பிடித்த சமயத்தில் சக்கரவர்த்திக்கும் முதன் மந்திரிக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

மலையமான் மகள் அங்கிருந்து சென்றவுடனேயே முதன் மந்திரி அநிருத்தர், "மன்னர் பெரும! பெண்மணிகள் இருக்கும் போது சில விஷயங்கள் சொல்லக் கூடாது என்றிருந்தேன். இப்போது அவற்றைச் சொல்லித் தீரவேண்டியதாயிருக்கிறது. வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகள் இன்னமும் இந்த நாட்டில் மறைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கொடுமையான சபதத்தை நிறைவேற்றுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"இது ஒன்றும் புதிதில்லையே? எனக்குத் தெரிந்த செய்திதானே? பழுவேட்டரையர்கள் அந்தக் காரணத்தைக் கொண்டே எனக்கு இத்தனை பலமான பாதுகாப்பு ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அல்லவா?" என்று சக்கரவர்த்தி ஏளனச் சிரிப்புடன் கூறினார்.

" ஆபத்துதவிகளின் விஷயம் தங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அந்தச் சதிகாரர்களுக்குச் சோழ ராஜ்யத்தின் பொக்கிஷத்திலிருந்தே பொருள் உதவி கிடைத்து வருகிறது என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது!" என்றார் முதன் மந்திரி.

"ஆகா! இது என்ன கட்டுக்கதை !" என்றார் சுந்தர சோழர்.

" இதைக் காட்டிலும் பிரமிப்பான கட்டுக் கதைகள் சிலவற்றையும் தங்களுக்கு நான் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து புதிய பொற்காசுகள் ஆபத்துதவிகள் கூட்டத்தின் மத்தியில் குவியலாகக் கொட்டப்பட்டிருந்தன. கண்ணால் பார்த்தவனாகிய என் சீடன் திருமலை இதோ இருக்கிறான். தாங்கள் பணித்தால் அதைப் பற்றி விவரமாகச் சொல்லுவான்...."

"வேண்டியதில்லை. தலைமுறை தலைமுறையாகச் சோழ குலத்துக்காக உயிரைக் கொடுத்து இரத்தம் சிந்தி வந்தவர்கள் பழுவேட்டரையர்கள். அவர்கள் என்னைக் கொல்லுவதற்காகச் சதி செய்யும் கூட்டத்துக்கு என் பொக்கிஷத்திலிருந்து பொற்காசு கொடுக்கிறார்கள் என்று அரிச்சந்திரனே வந்து சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்."

" மன்னிக்க வேண்டும். பழுவேட்டரையர்கள் மீது அத்தகைய துரோகக் குற்றத்தை நான் சுமத்தவில்லை. அவர்களுக்குத் தெரியாமலே சதிகாரர்களுக்கு நம் பொக்கிஷத்திலிருந்து பொற்காசுகள் போகலாம் அல்லவா ?"

"அது எப்படி முடியும்? யமன் அறியாமல் உயிர் போகக் கூடுமா, என்ன?"

"யமன் ஒருவேளை கிழப் பருவத்தில் இளமங்கை ஒருத்தியை மணம் செய்து கொண்டிருந்தால் அதுவும் சாத்தியமாகலாம், அரசே !"

"பெரிய பழுவேட்டரையர் இந்தப் பிராயத்தில் கலியாணம் செய்து கொண்

டது எனக்கும் பிடிக்கவில்லைதான். அதை அவரிடமே சொல்லியிருக்கிறேன். அதற்காக இம்மாதிரியெல்லாம் அவர்மீது துரோகக் குற்றம் சுமத்துவதை என்னால் சகிக்க முடியாது.''

'' சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் மீது நான் துரோகக் குற்றம் சுமத்தவில்லை. அவர் மணந்து கொண்ட இளைய ராணி மீதுதான் சுமத்துகிறேன்.''

'' ஆண் பிள்ளைகள் மீது குற்றம் சுமத்துவதையாவது பொறுத்துக் கொள்ளலாம். துர்ப்பாக்கியவதியான அபலைப் பெண் ஒருத்தியின் மீது நீர் குற்றம் சுமத்துவது எனக்கு நாராசமாயிருக்கிறது.''

''எவ்வளவு நாராசமாக இருந்தாலும் பழுவூர் இளைய ராணியைப் பற்றிய சில உண்மைகளைத் தங்களுக்கு நான் சொல்லியே தீர வேண்டும். ஒரு தடவை தங்களுக்கு நான் ஓர் உண்மையைச் சரியான சமயத்தில் சொல்லாதது பற்றி எவ்வளவோ வருத்தப்பட நேர்ந்தது. சற்று முன் தாங்களும் கோபித்துக் கொண்டீர்கள். ஆகையால் சிறிது பொறுமையாகக் கேட்க வேண்டும்.''



முதன்மந்திரியின் இந்தச் சாமர்த்தியமான வார்த்தைகளைக் கேட்டுச் சக்கரவர்த்தி புன்னகை புரிந்தார். ''என் வார்த்தையைக் கொண்டே என்னை மடக்குகிறீர்கள். அது என் சொந்தக் காரியம். அதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆயினும் சொல்லுங்கள், கேட்கிறேன்'' என்றார்.

''பழுவூர் பெரிய அரண்மனைக்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் இளைய ராணி நந்தினி தேவி வந்து சேர்ந்தான். அதுமுதல் பழுவூர் அரண்மனைக்குச் சில மந்திரவாதிகள் அடிக்கடி வந்து போகிறார்கள். இது சின்னப் பழுவேட்டரையருக்கும் தெரியும். அவருக்கும் மந்திரவாதிகள் வருவது பிடிக்கவில்லை. ஆனாலும் தமையனை எதிர்த்துப் பேசத்

தைரியமில்லாமல் சும்மா இருந்து வருகிறார்.''

''சகோதரர்கள் என்றால், இப்படி பல்லவா இருக்க வேண்டும்?''


''சகோதர விசுவாசத்தினால் இராஜ்யத்துக்குக் கேடு வரக் கூடாதல்லவா?''

''இப்போது இராஜ்யத்துக்கு என்ன கேடு வந்து விட்டது? ஒரு பேதைப் பெண் யாரோ மந்திரவாதிகளைக் கூப்பிட்டு மந்திரம் போடச் சொல்வதினால் இராஜ்யம் கெட்டுப் போய்விடுமா? பழுவூர் இளையராணி மந்திரம் போட்டுத்தான் எனக்கு நோய் வந்துவிட்டதென்று சொல்லுகிறீர்களா?''

''சக்கரவர்த்தி! பழுவூர் இளையராணியைப் பார்க்க வருகிறவர்கள் உண்மையில் மந்திரவாதிகள் அல்ல. மந்திரவாதிகள் என்று சொல்லிக் கொண்டு வரும் சதிகாரர்கள் என்று சந்தேகிக்கிறேன். அவர்கள் மூலமாக நம் பொக்கிஷத்திலிருந்து பொருள் போய்க் கொண்டிருக்கிறதென்றும் சந்தேகிக்கிறேன்...''

''எதைப் பற்றி வேணுமானாலும், யாரைப் பற்றி வேணுமானாலும் சந்தேகிக்கலாம். ருசு ஏதேனும் உண்டா?''

''மன்னர் மன்னா! இன்றைய தினம் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையையும் பொக்கிஷ நிலவறையையும் சோதனை போட்டால் ஒரு வேளை ருசுக் கிடைக்கலாம்.''



''இதைக் காட்டிலும் எனக்குப் பிரியமில்லாத காரியத்தை இதுவரை யாரும் சொன்னது கிடையாது. அநிருத்தரே! நீர் எனக்கு மட்டும் நண்பர். பழுவேட்

டரையர் எனக்கு முன் மூன்று தலைமுறையைச் சேர்ந்த சோழ சக்கரவர்த்திகளுக்கு உயிருக்குயிரான நண்பர். சோழ குலத்துக்கு இரும்புக் கவசம் போன்றவர். சோழர்களின் பகைவர்களுக்கு இந்திரனின் வஜ்ராயுதம் போன்றவர். அப்படிப்பட்டவருடைய மாளிகையை அவர் இல்லாத போது சோதனை போடுவதா? பழுவேட்டரையர் தம் அரண்மனையில் சதிகாரர்களுக்கு இடங் கொடுக்கிறார் என்று நம்புவதைக் காட்டிலும், மலையமான் மகள் மருந்து என்று சொல்லி எனக்கு நஞ்சைக் கொடுக்கிறாள் என்று நம்புவேன்........''

''சக்கரவர்த்தி! பழுவேட்டரையருக்குத் தெரிந்து இது நடைபெறவில்லை. மோகத்தினால் கண்ணிழந்திருக்கும் பழுவேட்டரையருக்குத் தம் எதிரில் நடப்பதும் தெரியவில்லை. அவர் அறியாமலே அவருடைய மாளிகை சதிகாரர்களின் தலைமை ஸ்தலமாக இருந்து வருகிறது. பழுவூர் இளைய ராணியே சதிகாரர்களோடு சேர்ந்தவள் என்று நம்புவதற்கு இடம் இருக்கிறது.''

'' அந்தப் பேதைப் பெண்ணைக் குறித்து இன்னும் என்ன அவதூறு சொல்லப் போகிறீர்கள் ?''

'' சில நாளைக்கு முன்பு திருப்புறம்பயம் காட்டில் பிருதிவிபதியின் பள்ளிப் படைக்கு அருகில் நள்ளிரவு வேளையில் மகுடாபிஷேக வைபவம் ஒன்று நடந்தது. ஓர் ஐந்து வயதுப் பிள்ளையைச் சிங்காதனத்தில் உட்கார வைத்துப் பாண்டிய மன்னன் என்றும் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி என்றும் பட்டம் சூட்டினார்கள். இந்த மகுடாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் சோழ குலத்தை அடியோடு நிர்மூலம் செய்வதாகவும் சபதம் எடுத்துக் கொண்டார்கள்....''

''முதன் மந்திரி! இந்தச் செய்தியைச் சொல்லி என்னைப் பயப்படுத்தலாம் என்று உத்தேசமா? என் கை கால்கள் நடுங்குமென்று எதிர்பார்த்தீரா?''

''இல்லை, சக்கரவர்த்தி, இல்லை ! அந்தக் கேலிக் கூத்தை நான் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அப்படிச் சபதம் எடுத்துக் கொண்ட சதிகாரர் கூட்டத்தில் பழுவூர் இளையராணியும் இருந்தாள் என்பதைத் தங்களிடம் சொல்ல விரும்பினேன்.''

'' அதையெல்லாம் அருகில் இருந்து பார்த்துவிட்டு வந்து தங்களுக்குத் தெரிவித்த புத்திசாலி ஒற்றன் யார்? அதோ நிற்கிறானே, தங்களுடைய அருமைச் சீடன், அவன்தானே ?''

'' எல்லாம் நடந்து முடிந்த பிறகு இவன் அங்கே போய்ச் சேர்ந்தான். நேரில் பார்த்தவன் வாணர் குலத்து வந்தியத்தேவன்......''

''இங்கே ஒரு தடவை வந்து விட்டுத் தப்பி ஓடிப் போனானே, அந்த ஒற்றனையா சொல்லுகிறீர் ?''

''அவன் ஒற்றன் அல்ல, பிரபு! தங்கள் திருக்குமாரர் ஆதித்த கரிகாலரின் அந்தரங்கத்துக்குரிய நண்பன்.''

''கரிகாலனுக்கு இப்படிப்பட்ட அந்தரங்க நண்பர்கள் எத்தனையோ பேர். ஒருவர் சொன்னதுபோல் இன்னொருவர் சொல்ல மாட்டார்கள். அவன் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். அதற்காக இப்போது செய்யக் கூடியது ஒன்றுமில்லை. பெரிய பழுவேட்டரையரும் இங்கே இல்லை ; அவருடைய இளைய ராணியும் இல்லை. அவர்கள் திரும்பி வந்த பிறகு விசாரித்துக் கொள்ளலாம். முதன் மந்திரி! பழுவூர் இளைய ராணியைப் பற்றி நீங்கள் சொல்லச் சொல்ல, அத்தகைய அதிசயமான பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று எனக்கே ஆர்வமுண்டாகி விட்டது. பழுவேட்டரையர் கலியாணம் செய்து கொண்டு வந்த போது எனக்கு ஏற்பட்ட அருவருப்பினால் அந்தப் பெண்ணை என் முன்னால் அழைத்து வர வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். அதனாலேயே அவளுக்கு ஒருவேளை என் பேரில் கோபம் உண்டாகி விட்டதோ என்னமோ தெரியவில்லை. பெரிய பழுவேட்டரையர் இம்முறை திரும்பி வந்ததும் அவருடைய இளைய ராணியை அழைத்து வரச் செய்து அவளுடைய கோபத்தைத் தீர்க்கப் போகிறேன்....'

''சக்கரவர்த்தி! நான் விரும்புவதும் அதுதான். நந்தினி தேவியின் கோபத்தைத் தணிப்பதற்கு இன்னும் முக்கியமான காரணங்களும் இருக்கின்றன. நந்தினி வந்து சேரும் வரையில் ஈழத்து அரசி நமது அரண்மனையிலே இருப்பதற்கு அநுமதி தர வேண்டும்.....''

''ஆகா! அவளை ஈழத்து அரசியாக முடிசூட்டி விட்டீர்கள் அல்லவா ? போகட்டும் ; அவளுக்கும் பழுவூர் ராணிக்கும் என்ன சம்பந்தம் ?''

''அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும், பிரபு ! இருவரும் நேருக்கு நேர் சந்தித்தால் ஒருவேளை அந்தச் சம்பந்தம் தெரிய வரலாம். நந்தினிதேவி சோழ குலத்தின் மீது கொண்டிருக்கும் பகையும் ஒருவேளை மாறலாம்....''

''மந்திரி! ஒரு பெண்ணின் பகையைக் குறித்து நீங்கள் இவ்வளவு கவலைப் படுவது ஆச்சரியமாயிருக்கிறது....''

''நந்தினிதேவியின் பகைமையைக் குறித்துக் கவலைப்படக் காரணம் இருக்கிறது. அதை நான் சொல்வது உசிதமாயிருக்குமா என்று அஞ்சுகிறேன்.....''

''தாங்கள் சொல்லத் தயங்குவதை வேறு யார் என்னிடம் சொல்ல முடியும்? மிச்சம் வைக்காமல் சொல்லி விடுங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

முதன் மந்திரி சிறிது யோசனை செய்து விட்டுக் கூறினார்:

''மன்னர் பெருமானே! இப்போது நான் கூறப் போவது மிகச் சிக்கலான விஷயம். தங்களுக்கு அது உகந்ததாயிருக்க முடியாது. ஆயினும் பொறுமையுடன் கேட்க வேண்டும். நந்தினி தேவியையும் மந்தாகினி தேவியையும் பார்த்தவர்கள் அனைவரும் அவர்களுடைய தோற்றத்தின் ஒற்றுமையைக் குறித்து அதிசயிக்கிறார்கள்....''

''உலகத்தில் இப்படி எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. ஒரு மரத்தைப் போலவே இன்னொரு மரம் இருக்கிறது. ஒரு பைத்தியத்தைப் போல் இன்னொரு பைத்தியம் இருக்கிறது....''

''ஆனால் ஒரு மரம் இன்னொரு மரத்தைப் போல வேஷம் போட்டு நடிப்பதில்லை. ஒரு பைத்தியம் இன்னொரு பைத்தியத்தின் ஆவியைப் போல் வந்து சக்கரவர்த்தியை இம்சிப்பதில்லை.....''

''என்ன சொல்கிறீர், முதன்மந்திரி?''

''மந்தாகினி தேவியின் ஆவி தங்களை இரவு நேரங்களில் வந்து இம்சிப்பதாக எண்ணித் தாங்கள் வேதனைப்பட்டு வந்தீர்கள்......''

''அவளுடைய ஆவி வரவில்லை, அவளேவந்தாள்என்றுசொல்லுகிறீரா?''

''இல்லை, இல்லை. பழுவூர் இளைய ராணி மந்தாகினியின் ஆவியாக நடித்துத் தங்களை இம்சித்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன்.''

சுந்தர சோழர் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கோப வெறி பொங்க, ''நீங்கள் இப்போது சொல்வது மட்டும் உண்மை என்று ஏற்பட்டால், அந்த ராட்சஸியை என் கையினாலேயே கழுத்தை நெரித்து.....'' என்று கூறுவதற்குள், முதன் மந்திரி குறுக்கிட்டு, ''வேண்டாம், சக்கரவர்த்தி! தங்கள் வாயால் அப்படியொன்றும் சபதம் கூற வேண்டாம்!'' என்று பரபரப்புடன் சொன்னார்.

''ஏன்? அவள் பேரில் என்ன தங்களுக்கு அவ்வளவு இரக்கம்? என்னை அவ்வளவு தூரம் வேதனைப்படுத்தியவளை என்ன செய்தால்தான் என்ன?'' என்று சுந்தர சோழர் பொங்கினார்.

''எவ்வளவுதான் கஷ்டப்படுத்தியிருந்தாலும், கஷ்டப்படுத்தியவர் நெருங்கிய பந்துவாயிருக்கும் பட்சத்தில்.... ஒரு வேளை சொந்தப் புதல்வியாயிருக்கும் பட்சத்தில்....'' என்று முதன் மந்திரி கூறித் தயங்கி நின்றார்.

''முதன் மந்திரி! இது என்ன பிதற்றல்?'' என்றார் சுந்தர சோழர்.

தியாகச் செம்மல்

நவம்பர் 5ந் தேதி தேசபந்து சித்தரஞ்சன தாஸின் நூறாவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

சித்தரஞ்சன தாஸ் தமது சொத்து சுகம் அனைத்தையும் தேசத்துக்கும் தேச மக்களுக்கும் அர்ப்பணித்துவிட்டு நம்பிக்கை என்ற விலை உயர்ந்த பொருளை மட்டும் தமக்கென்று வைத்துக் கொண்டிருந்தார். ''லட்சக் கணக்காகச் சம்பாதித்து லட்சக் கணக்காக அள்ளிக் கொடுத்திருக்கிறார். அவரது தியாகத்துக்கு ஈடு இணை கிடையாது'' என்று காந்திஜி அவரைப் பாராட்டியிருக்கிறார்.

சித்தரஞ்சர் இவ்வளவு சம்பாதித்ததும் தமது வாக்குவன்மையினாலேயே. ஒரு சமயம் அவர் ஒரு வழக்கில் ஆஜராகி வெற்றி பெற்று ரயிலில் முதல் வகுப்பில் வந்து கொண்டிருந்தார். அவர் இருந்த பெட்டியில் ஒரு நாகரிக யுவதியும் பிரயாணம் செய்தாள். தாஸ் தமது பெட்டியைத் திறந்தபோது அதில் ஏராளமாகப் பணம் இருந்ததை அந்த யுவதி பார்த்து விட்டாள். உடனே அவள் ''நான் உங்களைக் காதலிக்கிறேன். என்னை நீங்கள் மணந்து கொள்ள வேண்டும்'' என்று நச்சரிக்க ஆரம்பித்தாள். தாஸ் அவளை லட்சியம் செய்யாமல் இருக்கவே, ''அபாயச் சங்கிலியை இழுத்து நீங்கள் என்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாய்க் கூறி உங்களை அவமானத்துக்குள்ளாக்குகிறேன்'' என்றாள் அவள்.

தாம் ஆபத்தான நிலையில் இருப்பதை தாஸ் உணர்ந்தார். யாரும் பெண் சொல்வதைத்தான் நம்புவார்கள். ஆகவே ஒரு யுக்தி செய்தார். அவள் கூறியது எதுவும் தம் காதில் விழாதது போல் நடித்து, 'ஒரு சீட்டில் எழுதிக் கொடுங்கள்' என்று ஜாடை காட்டினார். அவள் அவரைச் செவிடு என முடிவு கட்டிச் சற்றும் யோசியாமல் சற்று முன் தான் சொன்னதை எழுதிக் கொடுத்தாள். உடனேயே ''நீ என்ன அபாயச் சங்கிலியை இழுப்பது? நானே இழுக்கிறேன்'' என்று சொல்லி வண்டியை நிறுத்தி அவளைப் போலீசாரிடம் ஒப்படைத்தார் தாஸ்.

- நஜன்



''சக்கரவர்த்தி! தங்களுடைய பொறுமையை உண்மையில் சோதித்து விட்டேன். அதற்காக எனக்கு உசிதமான தண்டனையைக் கொடுங்கள். ஆனால் நந்தினி தேவியைத் தண்டிப்பது பற்றிப் பேச வேண்டாம். நந்தினி தேவி தனாதிகாரி பழுவேட்டரையரின் இளைய ராணி மட்டும் அல்ல; மூன்று உலகமும் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. அவரை எந்தக் குற்றத்துக்காக யார்தான் தண்டிக்க முடியும்?'' என்றார் அநிருத்தப் பிரம்மராயர்.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி சிறிது நேரம் முதன் மந்திரியை அளவிலாத வியப்போடு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு கலீர் என்று சிரித்தார்.

''சக்கரவர்த்தி! இன்றைக்கு மிகவும் ஸுதினம். இரண்டு தடவை தாங்கள் சிரிக்கக்கேட்டேன்'' என்றார் அநிருத்தர்.

''பிரம்மராயரே! இந்த அரண்மனையில் இப்போது ஒரு பெண் பைத்தியந்தான் இருக்கிறது என்று நினைத்தேன். நீர் அவளை விடப் பெரிய பைத்தியம் என்று இப்போது அறிந்தேன். அவள் பேசாத ஊமைப் பைத்தியம்; நீர் பேசிப் பிதற்றும் பைத்தியம்!'' என்று கூறிவிட்டுச் சுந்தர சோழர் மறுபடியும் நினைத்து நினைத்துச் சிரித்தார்.

முப்பத்தாறும் அத்தியாயம்

பின்னிரவில்

சுந்தர சோழரின் சிரிப்பு ஒலி கேட்டுக் கொண்டிருக்கும் போதே பெண்மணிகள் அங்கு வந்தார்கள். முன்னால் மகாராணியும், அவளுக்குப் பின்னால் குந்தவை ஒருபக்கமும் வானதி ஒரு பக்கமும் பிடித்து இழுத்துக் கொண்டு வர மந்தாகினியும், அவர்களுக்குப் பின்னால் பூங்குழலியும் ஒரு தாதிப் பெண்ணுமாக ஊர்வலம் போல வந்தார்கள். சுந்தர சோழரின் சிரிப்பு அவர்களுக்கும் சிறிது குதூகலத்தை உண்டுபண்ணியிருந்தது. மந்தாகினி அவரை ஒரு கணம் நிமிர்ந்து பார்ப்பதும் மறுகணம் குனிந்து தரையைப் பார்ப்பதுமா யிருந்தாள். அவளுடைய அலங்காரம் இப்போது பூரணம் அடைந்திருந்தது. குந்தவைப் பிராட்டி அலங்காரக் கலையில் இணையில்லாத தேர்ச்சி பெற்றவள் என்று அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்தாள். அதற்காகவே சிற்றரசர்கள் தங்கள் மகளிரை இளையபிராட்டியின் தோழியாயிருப்பதற்குப் பழையாறைக்கு அனுப்புவது வழக்கம். குந்தவை தன் முழுத் திறமையையும் ஊமை ராணியை அலங்கரிப்பதில் பயன்படுத்தியிருந்தாள். அடி உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஓர் உருத் தெரியாத உணர்ச்சியினால் மந்தாகினியின் தலைக் கூந்தலை நந்தினியைப் போல் ஆண்டாள் கட்டுடன் அலங்கரித்திருந்தாள். இந்த அலங்காரம் முடிந்ததும் பெண்கள் எல்லாருக்குமே அவள் தத்ருபமாக நந்தினியைப் போலிருந்தது தெரிந்துவிட்டது. காட்டிலே அலைந்து திரிந்த தேக ஆரோக்கியமுள்ள மாதரசியானதால் பிராயத்திலே இருந்த இருபத்தைந்து வருஷ வித்தியாசம்கூடத் தெரியவில்லை. மற்றப் பெண்கள் மந்தாகினி தேவியைச் சிறிது பெருமையுடனேயே அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தினால் பெருமை கொண்டிருந்தார்கள்.

இந்தச் சரித்திரம் நிகழ்ந்த நாட்களில் தமிழகத்துப் பேரரசர்களும் குறுநில மன்னர்களும் பல மனைவியரை மணப்பது சகஜமாயிருந்தது. ஓயாமல் போர்கள் நடந்தவண்ணமாயிருந்தன. அரசிளங் குமாரர்களோ போர் முனையில் எப்போதும் முன்னிலையில் இருந்தார்கள். ஆகையால் குலம் நசியாமல் பாதுகாப்பதற்காக அரச குலத்தவர் பெண்கள் பலரை மணப்பது வழக்கமாயிருந்தது. பட்டமகிஷியா யிருப்பவள் மற்ற ராணிகளிடம் அசூயை கொள்ளாமல் அணைத்து ஆதரிப்பது ஒரு சிறந்த நறுங்குணமாகக் கருதப்பட்டது. இந்த முறையிலேயே மலையமான் மகள் உற்சாகமா யிருந்தாள். குந்தவை தன்னுடைய அலங்காரத் திறமையை இவ்வளவு நன்றாகக் காட்ட முடிந்தது பற்றிப் பெருமை கொண்டிருந்தாள். பைத்தியக்காரப் பிச்சியாகத் தோன்றியவளை இணையில்லா அழகு வாய்ந்த இளம் பெண்ணாகத் தோன்றும்படி அல்லவா அவள் செய்து விட்டாள்? பூங்குழலிக்கோ தன் அத்தைக்கு அரண்மனையில் இவ்வளவு இராஜோபசாரங்கள் நடப்பது பற்றிக் களிப்பு உண்டாகியிருந்தது. அவள் எதிர்பார்த்ததற்கெல்லாம் மாறாக இங்கேயுள்ள அரண்மனைப் பெண்கள் நடந்துகொண்டிருந்தார்கள் அல்லவா?

இவ்வாறு பெருமிதம் பொங்க அந்த அறையினுள் பிரவேசித்த பெண்களின் ஊர்வலத்தைச் சக்கரவர்த்தி பார்த்

தார். அவருடைய சிரிப்பு அந்த க்ஷணமே நின்று விட்டது. மந்தாகினியின் புதிய தோற்றம் அவருக்கே அளவில்லாத பிரமிப்பை அளித்தது. தாம் கண் முன்னால் பார்ப்பது உண்மைதானா என்று சந்தேகிப்பவர் போல் கண்களைக் கையினால் சிறிது மூடிக் கொண்டும் பின்னர் திறந்தும் உற்றுப் பார்த்தார். சற்று முன்னால் முதன் மந்திரி சொல்லிக் கொண்டிருந்த விவரங்கள் எல்லாம் அவர் மனத்தில் பதிந்திருந்தன. சில காலமாக நள்ளிரவில் தம் எதிரே தோன்றித் தன்னை வருத்திய பெண் உருவத்துக்கும் மந்தாகினியின் உருவத்துக்கும் உள்ள ஒற்றுமை அவருக்கு நன்கு புலனாயிற்று. அதே சமயத்தில் சில வேற்றுமைகள் இருப்பதையும் கவனித்துக் கொண்டார். இதைப் பற்றிய மர்மத்தை முழுதும் ஆராய்ந்து உண்மையை அறிய வேண்டும் என்னும் ஆசை அவர் உள்ளத்திலும் உதயமாயிற்று.

மந்தாகினியின் மீது அவருக்கு முதலில் ஏற்பட்டிருந்த அருவருப்பு அப்படியே மாறாமல் இருந்தது. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்கத் தீர்மானித்தார்.

அநிருத்தரிடம் அவர், "முதன் மந்திரி! சற்றுமுன் உங்களை நான் பைத்தியம் என்றேன். பிரமை, பைத்தியம் எல்லாம் எனக்குத்தான் என்று தோன்றுகிறது. இனி மேல் தினந்தோறும் வைத்தியன் என்னை வந்து பார்ப்பது மட்டும் போதாது. மாந்தரீகனையும் அனுப்பி வைக்க வேண்டியதுதான். பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வரும் மந்திரவாதியைப் பிடித்து அனுப்பி வைத்தால்கூடப் பாதகமில்லை!" என்றார் மெல்லிய குரலில்.

அநிருத்தரின் உள்ளத்தில் ஒரு சிறிய துணுக்கம் உண்டாயிற்று. 'அந்த மந்திரவாதிகளில் எவனும் சக்கரவர்த்தியை நெருங்காமலிருக்கட்டும்' என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்டார். பிறகு, "மன்னர் பெரும! மந்திரவாதி எதற்கு? வேறு மந்திரந்தான் எதற்கு? ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமத்தைவிடச் சக்தியுள்ள மந்திரம் வேறு ஒன்றுமில்லை!" என்றார்.

குந்தவைப் பிராட்டி, "அப்பா! என்னை அழைத்து வரச் சொன்னீர்களாமே! பழையாறைக்குப் போக வேண்டும் என்றும் கூறினீர்களாமே? நாங்கள் எல்லாருமே போகலாமா?" என்றாள்.

சுந்தர சோழர் அதற்கு மறுமொழி சொல்லாமல் முதன் மந்திரியைப் பார்த்து, "அநிருத்தரே! நான் என் கருத்தை மாற்றிக் கொண்டேன். இந்தப் பெண்கள் எதனாலோ ஒரே உற்சாகமாக இருக்கிறார்கள். வீட்டுக்குப் புதிய மருமகள் வந்தது போலக் களிப்படைந்திருக்கிறார்கள். இச்சமயம் இவர்களைப் பிரிக்க எனக்கு விருப்பமில்லை. தாங்கள் சற்றுமுன் சொன்னது போல் இவர்கள் எல்லாரும் சில நாள் இங்கேயே தங்கியிருக்கட்டும். செம்பியன் மாதேவி தங்களிடம் மிக்க நம்பிக்கையும் மரியாதையும் உள்ளவர். ஆகையால் தாங்களே நேரில் சென்று அவரை அழைத்துக்கொண்டுவாருங்கள். தங்கள் சீடனை நாகைப்பட்டினத்துக்கு அனுப்புங்கள். பெரிய பழுவேட்டரையரையும் அவருடைய இளைய ராணியையும் உடனே அழைத்து வர ஏற்பாடு செய்யும்படி நானே சின்னப் பழுவேட்டரையருக்குச் சொல்கிறேன்" என்றார்.

"அப்படியே செய்யலாம், சக்கரவர்த்தி! ஆனால் எல்லாரும் வந்து

சேருவதற்குச் சில தினங்கள் பிடிக்கலாம். நேற்று அடித்த புயல் மழை காரணமாக நதிகளில் எல்லாம் பூரணப் பிரவாகம் ஓடிக் கொண்டிருக்கிறது!'' என்றார் முதன் மந்திரி.

''அதனால் பாதகம் இல்லை. இத்தனை நாள் பொறுத்த நாம் இன்னும் சில நாள் பொறுத்திருப்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை. கரிகாலனையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்தால் எல்லா விஷயங்களையும் முடிவு செய்துவிடலாம். அவன் இன்னமும் வருவதற்கு மறுத்தால் நானே புறப்பட்டுப் போக வேண்டியதுதான். அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். நீங்கள் நாளைக்கே சென்று பெரிய பிராட்டியை எப்படியாவது கையோடு அழைத்து வாருங்கள்! போகும்போது, புயலினால் கஷ்டத்துக்குள்ளான மக்களைப் பற்றியும் கவனியுங்கள். நம்முடைய குடும்ப விவகாரங்களில் கவனம் செலுத்தி அந்த முக்கியமான காரியத்தை மறந்தே விட்டோம்'' என்றார் சக்கரவர்த்தி.

''இல்லை, பிரபு! அதை நான் மறக்கவே இல்லை. எல்லாக் காரியங்களும் சரிவர நடைபெறும். தாங்கள் நிம்மதியாக இருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு முதன் மந்திரி விடைபெற்றுச் சென்றார்.

* * *

அன்றிரவு சுந்தர சோழர் உண்மையிலேயே இத்தனை காலமும் அநுபவியாத நிம்மதியை அடைந்திருந்தார். கரையர் குலத்து மந்தாகினி இறக்கவில்லை என்னும் செய்தி மெய்யாகவே அவருடைய நெஞ்சத்தில் வெகு காலமாகக் குடிகொண்டிருந்த ஒரு பெரும் பாரத்தை அகற்றி விட்டது. அருள்மொழிவர்மன் நாகைப்பட்டினத்தில் இருக்கிறான் என்ற செய்தியும் அவருக்கு ஆறுதல் அளித்திருந்தது. சூடாமணி விஹாரம் மிகப் பலமான கட்டடமாதலால் அதில் உள்ளவர்களுக்கு அபாயம் ஒன்றும் நேருவதற்கில்லை என்ற தைரியமும் அவருக்கு இருந்தது. பழுவூர் இளையராணி அவருடைய புதல்வியாயிருக்கலாம் என்று அநிருத்தர் குறிப்பிட்டதை நினைக்க நினைக்க அவருக்கு வேடிக்கையாயிருந்தது. இது சக்கரவர்த்தியின் முகத்திலும் அடிக்கடி குறுநகையை உண்டாக்கியது.

மலையமான் மகள் முதலிய பெண்களுடன் அவர் சிறிது நேரம் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார். குந்தவையின் அலங்காரத் திறமையைப் பற்றிப் பாராட்டினார். ''காட்டுமிராண்டி ஜன்மமாகக் காணப்பட்டவளைத் தேவலோகத்து இந்திராணியாக மாற்றிவிட்டாயே? ஆனால் அதற்கெல்லாம் இந்தக் கிழவிதானா அகப்பட்டாள்? வானதியைப் போன்ற சிறு பெண்களிடமல்லவா உன் திறமையைக் காட்ட வேண்டும்?'' என்று பரிகாசமும் செய்தார். பிறகு பூங்குழலியிடம் அருள்மொழி வர்மனைப் பற்றி மேலும் விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அதன் முடிவில் பூங்குழலி, ''சுவாமி! நான் கோடிக்கரைக்குத் திரும்பிப் போக அநுமதி கொடுங்கள். நாளைக்கே நான் புறப்படலாம் அல்லவா? என் அத்தையைப் பற்றிய கவலை இனிமேல் எனக்கு இல்லை!'' என்றாள்.

''உன் அத்தை மகன் ஒருவன் காய்ச்சல் வந்து கிடக்கிறான் என்றாயே? அவனைப் பற்றிக்கூடக் கவலை இல்லையா? போவதற்கு நீ இவ்வளவு அவசரப்பட வேண்டாம். சிலநாள் இருந்து விட்டுப் போ!'' என்றார் சக்கரவர்த்தி. பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

* * *

அன்றிரவு சுந்தர சோழ சக்கரவர்த்தி நிம்மதியாக உறங்கினார். கனவுகள்கூட அதிகம் காணவில்லை. கண்ட கனவுகளும் துர்ச் சொப்பனங்களாக இல்லை; இன்பமான கனவுகள்.

அவருக்குப் பக்கத்து அறையில் படுத்துறங்கிய அரண்மனைப் பெண்டிர்களும் நிம்மதியாகவே தூங்கினார்கள். அவர்களிலே நிம்மதியில்லாமலும் நன்றாகத் தூங்காமல் இருந்தவள் மந்தாகினி ஒருத்திதான். இன்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவளுடைய மனத்தில் பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன. முக்கியமாக அவளுடைய நினைவு பொக்கிஷ நிலவறைக்கும் சுரங்கப் பாதைக்குமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. இராவணனுடைய கரங்களை உடைத்து அந்தச் சுரங்கப் பாதையை மூடி விடுவதற்குத் தான் செய்த முயற்சி பலிக்காமற் போனது பற்றி எண்ணி எண்ணி அவள் மனம் நிம்மதி கொள்ளாமல் தவித்தது. தூங்கா விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டேயிருந்தாள். முக்கியமாக, மேல் மாடங்களின் சாளரங்களை அடிக்கடி உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

நள்ளிரவு கழிந்தது: பின்னிரவு தொடங்கியது. மூன்றாவது ஜாமம் ஏறக்குறைய முடியும் நேரம் ஆகிவிட்டது. அப்போது மேல் மாடத்தின் சாளரம் ஒன்றில் ஒரு தோற்றம் அவளுக்குத் தென்பட்டது. அகோர பயங்கர முகம் ஒன்று அந்தச் சாளரத்தை ஒட்டினாற் போலிருந்து அந்த அறைக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டாள். அந்த முகம் இன்னாருடைய

முகம் என்பதும் ஒருவாறு அவளுக்குத் தெரிந்து விட்டது. தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்து நின்றாள். மறுபடியும் அந்தச் சாளரத்தை உற்றுப் பார்த்தாள். அங்கே அந்த முகத்தைக் காணவில்லை. பக்கத்து அறை வாசற் படி வரையில் மெள்ள நடந்து சென்று எட்டிப் பார்த்தாள். அங்கே சக்கரவர்த்தி நிம்மதியாக உறங்குவதைக் கண்டாள். அந்த அறையில் மேல் மாடச் சாளரங்களையும் உற்றுப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை.

திரும்பி வந்து சிறிதும் சத்தம் செய்யாமல் பூங்குழலியைக் கையினால் தொட்டு அசைத்து எழுப்பினாள். அசந்து தூங்கிய பூங்குழலி கண் விழித்தாள். ஊமை ராணியின் முகத் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டாள். ஊமை ராணி சமிக்ஞையினால் தன்னைத் தொடர்ந்து வரும்படி அவளிடம் சொன்னாள். அத்தையிடம் அளவிலாத பக்தி விசுவாசம் வைத்திருந்த பூங்குழலியும் சத்தம் செய்யாமல் எழுந்து அவளைப் பின்பற்றிச் சென்றாள்.

ஊமை ராணி சிற்ப மண்டபத்தை நோக்கிச் சென்றாள். போகும் போது நடைபாதையில் எரிந்து கொண்டிருந்த தூங்கா விளக்கு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு நடந்தாள்.

சிற்ப மண்டபத்தை அடைந்ததும் பூங்குழலிக்குச் சிறிது கவலை உண்டாயிற்று. மறுபடியும் இவள் இராவணச் சிற்பத்தை உடைக்கப் போகிறாளா, என்ன? அப்படியானால், அதனால் ஏற்படும் சத்தத்தில் அரண்மனையில் உள்ளவர்கள் அத்தனை பேரும் விழித்துக் கொள்வார்களே? தன் அத்தை பைத்தியக்காரிதான் என்று ஊர்ஜிதமல்லவா ஆகிவிடும் ?

அத்தை அந்த முயற்சியில் இறங்கினால் நான் அதைத் தடுத்தேயாக வேண்டும். கத்தியைப் பலவந்தமாகப் பிடுங்கியாவது தடுத்தாக வேண்டும்... இப்படி எண்ணிக் கொண்டே அத்தையைத் தொடர்ந்து சிற்ப மண்டபத்துக்குள் பூங்குழலி பிரவேசித்தாள்.

ஆ! இது என்ன! அந்த இராவணச் சிற்பத்தின் தலை ஒன்று அசைகிறதே ? இல்லை, இல்லை ! இராவணன் தலை அசையவில்லை. இராவணனுடைய தலைகளுக்கும், மேலேயுள்ள கைலாச மலைக்கும் மத்தியில் வேறொரு மனிதனின் தலை மாதிரி தெரிந்தது ! உடனே அது மறைந்து விட்டது. வீண் பிரமை ! தூக்கக் கலக்கம்! விளக்கின் ஒளியில் உண்டாகும் சிற்பங்களின் நிழல் தோற்றமாயிருக்க வேண்டும்!....

மந்தாகினிக்கும் அந்தத் தோற்றம் புலப்பட்டதோ என்னமோ, தெரியவில்லை. ஆனால் அவள் இராவணன் சிலையை நெருங்கித்தான் சென்றாள். நல்ல வேளையாகப் பக்கத்தில் கிடந்த கத்தியின் மீது அவள் கவனம் செல்லவில்லை. இராவணன் தலைகள்—கைகளுக்கும் அவை தாங்கிக் கொண்டிருந்த கைலாசகிரிக்கும் நடுவிலிருந்த இருள் அடர்ந்த பகுதியில் தீபத்தைத் தூக்கிப் பிடித்துக் காட்டினாள். அங்கே ஒரு துவாரம் இருந்தது தெரிந்தது.


பூங்குழலி முன்னமேயே ஊகித்தது சரிதான். அங்கே ஒரு சுரங்கப் பாதையின் வெளித் துவாரம் இருக்கிறது. யாரும் சந்தேகிக்க முடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுரங்கப் பாதையின் துவாரத்தை மூடி விடுவதற்கே முன்னிரவில் தன் அத்தை பிரயத்தனப்பட்டாள். அதை அறிந்து கொள்ளாமல் மற்றவர்கள் தடுத்து விட்டார்கள்.....

இவ்விதம் பூங்குழலி எண்ணிக்கொண்டிருக்கும் போதே ஊமை ராணி தன் மருமகளுக்குத் தன்னைப் பின்பற்றிவரும்படி சமிக்ஞை செய்து விட்டுக் கையில் விளக்குடனே அந்தத் துவாரத்தில் சிரமப்பட்டுப் புகுந்து அதில் இறங்கிச் செல்லத் தொடங்கினாள். சிறிது சிறிதாக அவள் உடம்பு மறைந்து வந்து, தலையும் மறைந்து, கையில் பிடித்திருந்த விளக்கும் மறைந்தது. கொஞ்சம் வெளிச்சம் மட்டும் தெரிந்தது. பிறகு பூங்குழலியும் உடம்பை நெளித்து வளைத்துத் தலையில் மோதிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக அந்தச் சுரங்கத் துவாரத்துக்குள் இறங்கினாள். சில கணங்களுக்கெல்லாம் அவளும் மறைந்தாள். பின்னர், விளக்கின் ஒளியும் மறைந்தது. சிற்ப மண்டபத்தில் அந்தகாரம் குடிகொண்டது.

*　　*　　*

காலையில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் எழுந்து பார்த்த போது ஊமை ராணியையும் பூங்குழலியையும் அவர்கள் படுத்திருந்த இடத்தில் காணாமல் திடுக்கிட்டார்கள். அரண்மனை முழுதும், தோட்டத்திலும், சிற்ப மண்டபத்திலும் தேடிப் பார்த்தும் அவர்கள் அகப்படவில்லை. அவர்கள் எப்படி மாயமாய் மறைந்தார்கள் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியிடம் கூறிய போது முதலில் அவர் சிறிது கவலைப்பட்டார். பின்னர், ''அந்தப் பைத்தியங்கள் போய்த் தொலைந்ததே நல்லது! எப்படித் தொலைந்தால் என்ன?'' என்றார். எனினும், அவர் உள்ளத்தினுள்ளே இனந் தெரியாத கவலையும் பயமும் குடிகொண்டன. (தொடரும்)

அமெரிக்காவில் ஆயுத பூஜை



அமெரிக்கர்களுக்கு இந்திய சங்கீதத்தில் எவ்வளவு ஆர்வம் என்றால் இந்திய பாணி சாப்பாட்டில் எவ்வளவு ஆர்வமோ அத்தனை ஆர்வம் என்று சொல்லலாம்! இல்லாமலா இந்திய பாணி கச்சேரியை ''கர்ரீ கான்ஸர்ட்'' (Curry Concert) என்றே அழைக்கத் துணிகிறார்கள்!

இந்திய பாணியில் அமைந்த ஒரு கச்சேரியைச் சில அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் கேட்க வரும் ரசிகர்களுக்கு அதன் இறுதியில் அநேகமாக இந்திய பாணி சாப்பாடும் கிடைத்து விடுகிறது. அதையும் வெகுவாக ரசிக்கிறார்கள். ஒரு கை என்ன, இரண்டு கையே பார்க்கிறார்கள்!

லாஸ் அன்ஜெலெஸ் நகரில் ''காலிபோர்னியா இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆர்ட்ஸ்'' என்ற நிறுவனம் உள்ளது. இது வளர்க்கும் பல்வேறு கலைகளுள் சங்கீதமும் ஒன்று. இந் நிறுவனத்தின் சங்கீதப் பள்ளியில் அக்டோபர் ஏழாந் தேதி ஒரு நூதனமான கண்காட்சி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மாலை 3-30 முதல் 5-30 வரை இந்தக் கலை நிறுவனத்தின் பல்வேறு கட்டடங்களில் பல்வேறு அறைகளில் சங்கீத நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதுவும் கச்சேரி பாணியில் இல்லாமல் குரு சிஷ்ய பாவத்துடன் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பார்வையாளர்கள் தத்தமக்குப் பிடித்தமான நிகழ்ச்சிக்குப் போய்ப் பார்க்கலாம். அல்லது எல்லாவற்றையுமே, ஒவ்வோரிடத்திலும் பத்து நிமிஷங்களுக்கு மேற்படாமல் தங்கியிருந்து கேட்கலாம்; காணலாம். ஒரு சமயத்தில் ஒரு நிகழ்ச்சியில் சுமார் இருபது பார்வையாளர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

செவிக்கினிய அநுபவங்களுடன் கூடிய இந்தக் கண்காட்சியின் போது ரவிசங்கர் சிதார் வாசிப்பதில் சில நுணுக்கங்களைத் தமது மகனுக்குக் கற்றுக் கொடுத்தார். வேறோர் இடத்தில் குரல் பயிற்சியும் மிருதங்கப் பயிற்சியும் டி. விசுவநாதனும் டி. ரங்கநாதனும் மாணவர்களுக்கு அளித்தனர். இன்னோர் இடத்தில் ராபர்ட் பிரெளன் தமது மாணவர்களுடன் சேர்ந்து ஜாவா தீவுக்கே உரித்தான சங்கீதத்தைப் பார்வையாளர் கேட்க வசதி செய்திருந்தார். கானா தேசத்துச் சங்கீதமும் நாட்டியமும் இன்னொரு பக்கம் நடந்தன. மற்றொரு புறம் பொம்மலாட்டம்; வேறொரு கட்டடத்தில் மேற்கத்திய பாணியில் சாஸ்திரீய இசை.

இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டு கேட்க வந்த சுமார் அறுநூறு பேர்களுக்கு மாலை 5-30 மணிக்கு மேல் கிச்சடியும் சட்னியும், வெஜிடபிள் குர்மாவும், புலாவும் கடச்

மேலே: அமெரிக்காவில் கணேசர் திருவுருவம்.

கீழே: மலர்க் கோயிலுக்கு மந்தியில் அலங்கார மேடை.

இவ்விரு அரங்கங்களையும் தயாரித்தவர்: ஜான் ஸ்டீவர்டு.



கீதைக் கதைகள்



'நீ பிறந்ததிலிருந்து வாழ்க்கை கிடைத்து விட்டது என்று மகிழ்ந்து கொண்டிருக்கின்றாய். ...சாவை நோக்கிச் செல்லும் பயணந்தான் வாழ்க்கை !'

16. துணை

அகர்ம வினையாகத் தெரு விளக்கை நோக்கி ஒருவன் நடந்து கொண்டிருந்தான். திடீரென் எவ்வளவு தூரம் தன்னைப் பிரிந்து செல்கின்றது என் பதை அளவிடும் எண்ணம் உதித்தது. அப் பொழுது ஓர் உருவம் தன்னைக் கெட்டியாகப் பின் தொடர்வதை உணரலானான். விளக்கை நெருங்க நெருங்க அவ்வுருவம் சிறுத்து வருவதையும் அவன் கவனித்தான்.

விளக்கின் பூரண வெளிச்சத்தின் கீழ் நின்று திரும்பிப் பார்க்கிறான். உரு சிறுத்துப் பின் தொடர்ந்த அந்த உருவத்தைக் காணவில்லை. மனப் பிராந்தியோ என்ற மலைப்பு முகம் காட்டி மறைய லாயிற்று.

பயணம் தொடர்ந்தது. இப்பொழுது தெரு விளக்கை முதுகிட்டு நடக்கும் பயணம்.

பின்னாலே துரத்தி வந்த உருவம் முன்னால் நீளத் தொடங்கியது.

பயத்தின் நிழல் மனத்திலே சாய்ந்தது. அதனைப் போக்க, அந்த உருவத்துடன் பேச்சுக் கொடுக்க விரைந்தான்.

"நீ யார் ?"

"நான் நீயேதான்."

"அஃது எவ்வாறு ?"

"நான் உன் நிழல் !"

"ஓகோ, நான் என்ற அசலின் போலியா நீ? அப்படியானால், நீ ஏன் என்னைச் சுற்றி அலைகிறாய்?"

"நான் போலியா? இன்னொரு விதத்தில் பார்த்தால் நான் அசலும், நீ போலியும் எனக் கூறுவதுகூடப் பொருத்தமாக இருக்கும். நீ பிறந்த வேளையிலேதான் நானும் பிறந்தேன். நித்திய தத்துவம் ஒன்றின் விளக்கமாக அரன் என்னை உன்னுடன் படைத்தனன். அந்த அளவில் நானும் அசலே !"

"தத்துவமா என்ன அது ?"

"இதோ பார், நீ பிறந்ததிலிருந்து வாழ்க்கை கிடைத்து விட்டது என மகிழ்ந்து கொண்டிருக்கிறாய். உண்மை என்னவென்றால், சாவை நோக்கிச் செல் லும் பயணந்தான் வாழ்க்கை. பிறப்பு என்பது சாவின் நுழை வாயில். அரன் என்னும் ஒளியுடன் நீ கலக்கும்பொழுது நீயும் நானும் ஒன்றேயாகி அவனேயாவோம். சம்சாரச் சக்கரங்களைக் கடந்த நித்திய நிலையும் அதுவே.... அந்த ஒளியிலிருந்து நீ விலகி ஓடினால், சாவை நினைத்துப் பார்க்கும்படி எச்சரிக்கின்றேன். ஒளியை நாடி முன்னேறும் பொழுது உன்னுடன் அரனிற் கலக்கும் ஆசையில் அடிபோற்றி நடக்கிறேன். அதுவே நான் உன்னைச் சுற்றி அலைவதில் உள்ள தத்துவம்" என்றது நிழல்.

- எஸ். பொன்னுத்துரை

கடவும் மணக்க மணக்கவும் காத்திருந்தன. கடைசி 'அயிட்ட'மாகத் தயிரும் பழங்களும் வழங்கப்பட்டன. சாப்பாட்டின் கடைசி அயிட்டம் இது என்றாலும் அன்றைய நிகழ்ச் சிகளின் கடைசி அயிட்டத்துக்கு விருந்தினர் வந்துவிடவில்லை. சாப்பாட்டுக்குப்பின் பசியை மறப்பது சுலபமாகவே ஆயுதபூஜையில் அவர்கள் மனம் முழுமையாக ஈடுபட்டது. இரவு 7-30 மணிக்கு மேல் ஆயுத பூஜை சிறப் பாக நடைபெற்றது. லாஸ் அஞ்ஜெலெஸ் நகரில் உள்ள வேதாந்த சங்கத்தைச் சேர்ந்த அசக்தாநந்தா பூஜையை நடத்தி வைத்தார். சம்ஸ்கிருத சுலோகங்கள் கூறப்பட்டன ; வேத பாராயணம் நடந்தது; பக்தி கீதங்கள் பாடப்பட்டன. இறுதியில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

இறை உணர்ச்சி நெஞ்சை நிறைக்கப் புனித எண்ணங்களுடனேயே வந்து இரு கச்சேரி களை ரசிக்க அமர்ந்தனர். முதலில் டி. விசுவ நாதனின் மதுரமான வேணுகானம். (எஸ். சங்கரன் வயலின்; டி. ரங்கநாதன் மிருதங் கம்) இதை அடுத்து ரவிசங்கர் — அல்லாரக்கா ஆகியோரின் விரல்கள் மாயாஜாலங்கள் புரிந்து இன்னிசை எழுப்பின. சுமார் ஒரு மணி நேரத்துக்குத்தான் நடைபெற்றன இந்த இரு நிகழ்ச்சிகளும். ஆயினும் வாழ்நாளில் கிட்டாத ஓர் இன்ப அநுபவம் பெற்று இல்லம் திரும்பினார்கள் இந்தியக் கலைகளில் ஈடுபாடு கொண்ட அமெரிக்க நண்பர்கள்.

ஆதாரம்: அமெரிக்காவிலிருந்து வந்த கடிதங்கள்
தகவல்: டி. சங்கரன்

விளங்கும் விஞ்ஞானம்

தேக்கத்தை நீக்கு வேகத்தைக் கூட்டு

நம்முடைய கார்கள் மணிக்கு நூறு மைல் வேகத்தில் ஓட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ரயில்கள் மணிக்கு அறுபது மைல் வேகத்தில் செல்வது சாத்தியமே. நவீன விமானங்கள் மணிக்கு ஐந்நூறு மைல் வேகத்தில் பறக்கின்றன. ஆனால் கடல் பிரயாணத்தின் போது மட்டும் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் போனாலே திருப்தி அடைய வேண்டியதுதான். அதற்கு மேல் வேகத்தைக் கப்பல்களில் எதிர்பார்க்க முடியாது.

கப்பல் பிரயாணத்தை இன்னும் துரிதமாக்க முடியாததற்குக் காரணம் என்ன? வேகமாகப் போகும் கப்பல்களை உருவாக்கக் கூடாதா? முடியும். ஆனால் பலன்தான் இராது. ஏன்?

தண்ணீரைக் கிழித்துக் கொண்டு கப்பல் செல்கிறது. தண்ணீரின் தேக்க சக்தி கப்பலைப் பின்னுக்கு இழுக்கிறது. கப்பலின் வேகத்தை இரட்டிப்பாக்க வேண்டுமானால் அதற்குக் கப்பலில் உள்ள இஞ்சின்களின் சக்தியை இரட்டிப்பாக்கினால் போதாது; எட்டு மடங்காக்க வேண்டும்! இந்த ரீதியில் போனால் கப்பலில் இஞ்சின்களுக்கு மட்டுமே இடமிருக்கும்; மக்களையோ சாமான்களையோ ஏற்றிக் கொள்ள இயலாது!

பெரிய கப்பல்களைக் கட்டுவதன் மூலம் லாபம் பெறலாம். எவ்வாறு? வேகத்தை ஒரே நிலையில் வைத்துக் கொண்டு கணக்கிட்டால் ஐயாயிரம் டன் கப்பலை இயக்க எவ்வளவு சக்தி அவசியமோ, அதைப் போல் ஐந்து மடங்கு சக்தி இருந்தால் போதும். ஐம்பதாயிரம் டன் கப்பலைச் செலுத்த; பத்துமடங்கு சக்தி தேவையில்லை! வேகத்தை அதிகரிக்க முடியாமல் கப்பலைப் பின்னுக்கு இழுக்கிறதே தண்ணீரின் தேக்க சக்தி, அதைக் குறைக்க வழி என்ன? கப்பலின் அடிவாரம் எந்த அளவுக்கு நீரில் அமிழ்ந்திருக்கிறது; அந்த அடிவாரத்தின் வடிவம் என்ன — என்ற இரு அம்சங்களே முக்கியமானவை. மிகக் குறைந்தபட்சமே கப்பல் நீரில் அமிழ்ந்திருக்குமாறு அதை உயர்த்துவது, நீரில் அமிழ்ந்திருக்கும் கப்பல் பகுதியின் வடிவத்தை எளிதில் நீரைக் கிழித்துச் செல்ல வசதியான வடிவத்தில் அமைப்பது ஆகிய இரு காரியங்களும் கப்பல் வேகத்தைக் கூட்ட உதவும்.

கப்பலை உயர்த்தக் கப்பலில் உள்ள இயந்திரங்களின் சக்தி ரொம்பச் செலவாகும்தான். ஆனால் நீரின் பின்னுக்கிழுக்கும் திறன் குறைவதால் வேகம் அதிகரிக்க மொத்தத்தில் லாபமே.

மிக வேகமாகப் போகும் விசைப் படகைப் பாருங்கள். மணிக்கு நாற்பது — அறுபது மைல் வேகத்தில் செல்கையில் அதன் பின்பகுதி மட்டுமே தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். முன் பக்கம் முழுதும் நீருக்கு மேலே எழும்பிவிடும்.


ஹோவர்கிராப்ட் மணிக்கு நூறு மைல் வேகத்தில் செல்லக் கூடியது. அதன் அடிவாரம் முழுவதுமே நீர் மட்டத்திலிருந்து மேலே எழும்பி விடுகிறது. காற்று அழுத்தத்தை உருவாக்கி இதைச் சாதிக்கின்றனர். நீர் மட்டத்தை உரசியபடியே அது விரைகிறது. ஆனால் இதில் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய முடியாது. கடல் கொந்தளிப்பின்றி அமைதியாக இருக்கும்போது கூட ஹோவர்கிராப்டில் பிரயாணம் செய்வது கப்பலைப் போல் அத்தனை சொகுசாய் இராது.

ஹோவர்கிராப்ட் நீரிலும் போகும்; நிலத்திலும் செல்லும்; சதுப்பு நிலங்களிலும் பயன்படும் (படம்). மேலும் விமானங்களில் உள்ளது போல் சுழல் விசிறிகளைக் கொண்டிருக்கிறது. இதன் இயக்கம் கலத்தை முன்னுக்குச் செலுத்த ஒரு விசையை ஏற்படுத்துவதன் மூலம் விரைவதை எளிதாக்குகிறது. ஆனால் சத்தம்? அடடா! அந்தத் துன்பத்தைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்!

ஹோவர்கிராப்ட் தத்துவம் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதுதான். ஆனால் சமீப காலமாகத்தான் இதில் பிரயாணிகளை ஏற்றிச் சென்று பணம் பண்ண முற்பட்டிருக்கிறார்கள். இவற்றை இயக்கச் செலவும் அதிகம்; சிறியவையாக இருப்பதால் அளவோடுதான் பிரயாணிகளை ஏற்றிக் கொள்ள முடியும்.

ஆகவே இவற்றின் வேகம் மிகுதி என்பதால் அதிகப் பணம் கொடுக்க மக்கள் முன்வந்தால் ஒழிய இவை பிரமாதமாகப் பிரபலமடைவது சாத்தியமில்லை.

—மைக்கேல் ஆர்னல்டு



விளங்கும் விஞ்ஞானம்

தேக்கத்தை நீக்கு வேகத்தைக் கூட்டு

நம்முடைய கார்கள் மணிக்கு நூறு மைல் வேகத்தில் ஓட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ரயில்கள் மணிக்கு அறுபது மைல் வேகத்தில் செல்வது சாத்தியமே. நவீன விமானங்கள் மணிக்கு ஐந்நூறு மைல் வேகத்தில் பறக்கின்றன. ஆனால் கடல் பிரயாணத்தின் போது மட்டும் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் போனாலே திருப்தி அடைய வேண்டியதுதான். அதற்கு மேல் வேகத்தைக் கப்பல்களில் எதிர்பார்க்க முடியாது.

கப்பல் பிரயாணத்தை இன்னும் துரிதமாக்க முடியாததற்குக் காரணம் என்ன? வேகமாகப் போகும் கப்பல்களை உருவாக்கக் கூடாதா? முடியும். ஆனால் பலன்தான் இராது. ஏன்?

தண்ணீரைக் கிழித்துக் கொண்டு கப்பல் செல்கிறது. தண்ணீரின் தேக்க சக்தி கப்பலைப் பின்னுக்கு இழுக்கிறது. கப்பலின் வேகத்தை இரட்டிப்பாக்க வேண்டுமானால் அதற்குக் கப்பலில் உள்ள இஞ்சின்களின் சக்தியை இரட்டிப்பாக்கினால் போதாது; எட்டு மடங்காக்க வேண்டும்! இந்த ரீதியில் போனால் கப்பலில் இஞ்சின்களுக்கு மட்டுமே இடமிருக்கும்; மக்களையோ சாமான்களையோ ஏற்றிக் கொள்ள இயலாது!

பெரிய கப்பல்களைக் கட்டுவதன் மூலம் லாபம் பெறலாம். எவ்வாறு? வேகத்தை ஒரே நிலையில் வைத்துக் கொண்டு கணக்கிட்டால் ஐயாயிரம் டன் கப்பலை இயக்க எவ்வளவு சக்தி அவசியமோ, அதைப் போல் ஐந்து மடங்கு சக்தி இருந்தால் போதும். ஐம்பதாயிரம் டன் கப்பலைச் செலுத்த; பத்துமடங்கு சக்தி தேவையில்லை! வேகத்தை அதிகரிக்க முடியாமல் கப்பலைப் பின்னுக்கு இழுக்கிறதே தண்ணீரின் தேக்க சக்தி, அதைக் குறைக்க வழி என்ன? கப்பலின் அடிவாரம் எந்த அளவுக்கு நீரில் அமிழ்ந்திருக்கிறது; அந்த அடிவாரத்தின் வடிவம் என்ன — என்ற இரு அம்சங்களே முக்கியமானவை. மிகக் குறைந்தபட்சமே கப்பல் நீரில் அமிழ்ந்திருக்குமாறு அதை உயர்த்துவது, நீரில் அமிழ்ந்திருக்கும் கப்பல் பகுதியின் வடிவத்தை எளிதில் நீரைக் கிழித்துச் செல்ல வசதியான வடிவத்தில் அமைப்பது ஆகிய இரு காரியங்களும் கப்பல் வேகத்தைக் கூட்ட உதவும்.

கப்பலை உயர்த்தக் கப்பலில் உள்ள இயந்திரங்களின் சக்தி ரொம்பச் செலவாகும்தான். ஆனால் நீரின் பின்னுக்கிழுக்கும் திறன் குறைவதால் வேகம் அதிகரிக்க மொத்தத்தில் லாபமே.

மிக வேகமாகப் போகும் விசைப் படகைப் பாருங்கள். மணிக்கு நாற்பது — அறுபது மைல் வேகத்தில் செல்கையில் அதன் பின்பகுதி மட்டுமே தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். முன் பக்கம் முழுதும் நீருக்கு மேலே எழும்பிவிடும்.


ஹோவர்கிராப்ட் மணிக்கு நூறு மைல் வேகத்தில் செல்லக் கூடியது. அதன் அடிவாரம் முழுவதுமே நீர் மட்டத்திலிருந்து மேலே எழும்பி விடுகிறது. காற்று அழுத்தத்தை உருவாக்கி இதைச் சாதிக்கின்றனர். நீர் மட்டத்தை உரசியபடியே அது விரைகிறது. ஆனால் இதில் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய முடியாது. கடல் கொந்தளிப்பின்றி அமைதியாக இருக்கும்போது கூட ஹோவர்கிராப்ட்டில் பிரயாணம் செய்வது கப்பலைப் போல் அத்தனை சொகுசாய் இராது.

ஹோவர்கிராப்ட் நீரிலும் போகும்; நிலத்திலும் செல்லும்; சதுப்பு நிலங்களிலும் பயன்படும் (படம்). மேலும் விமானங்களில் உள்ளது போல் சுழல் விசிறிகளைக் கொண்டிருக்கிறது. இதன் இயக்கம் கலத்தை முன்னுக்குச் செலுத்த ஒரு விசையை ஏற்படுத்துவதன் மூலம் விரைவதை எளிதாக்குகிறது. ஆனால் சத்தம்? அடடா! அந்தத் துன்பத்தைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்!

ஹோவர்கிராப்ட் தத்துவம் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதுதான். ஆனால் சமீப காலமாகத்தான் இதில் பிரயாணிகளை ஏற்றிச் சென்று பணம் பண்ண முற்பட்டிருக்கிறார்கள். இவற்றை இயக்கச் செலவும் அதிகம்; சிறியவையாக இருப்பதால் அளவோடுதான் பிரயாணிகளை ஏற்றிக் கொள்ள முடியும்.

ஆகவே இவற்றின் வேகம் மிகுதி என்பதால் அதிகப் பணம் கொடுக்க மக்கள் முன்வந்தால் ஒழிய இவை பிரமாதமாகப் பிரபலமடைவது சாத்தியமில்லை.

—மைக்கேல் ஆர்னல்டு



தேடிக் கொண்டு சென்றான். சுக்ரீவன் என்ற வானரனை அடைந்து அவனுடன் சிநேகம் செய்து கொண்டான். வாலி என்கிற வானர ராஜனைக் கொன்று தம்பி சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் சம்பாதித்துத் தந்தான். அந்தச் சுக்ரீவன் தன்னுடைய வானர வீரர்களைப் பூமண்டலம் முழுதும் சீதையைத் தேடும்படி அனுப்பினான். விரும்பிய வடிவம் எடுக்கும் திறமை கொண்ட வானர வீரர்கள் எல்லாத் திசைகளிலும், காணாமற் போன சீதையைத் தேடினார்கள். அவர்களில் நானும் ஒருவன். சம்பாதியினிடம் பெற்ற துப்பைக் கொண்டு நான் நூறு யோசனை கடலைத் தாண்டி இவ்விடம் வந்தேன். ராகவன் எனக்குத் தன் தேவியைப் பற்றிச் சொன்ன ரூபம், நிறம், லக்ஷணம் இவற்றுக்கெல்லாம் ஒத்த உருவத்தை இப்போது நான் காண்கிறேன்.''

இவ்வாறு மெதுவாகச் சொல்லி ஹனுமான் நிறுத்திக் கொண்டான்.

இந்த மதுரமான சொற்கள் — யாராலோ எங்கிருந்தோ சொல்லப் பட்டதைக் கேட்டு ஜானகி வியப்படைந்தாள்; மகிழ்ந்தாள். நான்கு பக்கமும் பார்த்தாள். யார் இப்படி மிக இனிய குரலில் மிக இனிய விஷயங்களைப் பண்பட்டுத் தெளிந்த பாஷையில் பேசினது என்று நான்கு பக்கமும் மேலும் கீழும் பார்த்தாள். பேச்சுக்கு ஒத்த மனித உருவம் எங்கும் காணவில்லை. மேலே மரத்தில் ஓர் அழகிய வானரத்தைத்தான் கண்டாள்.

நிகரற்ற புத்திமானும் வானர ராஜனுக்கு மந்திரியுமான வாயுபுத்திரன் பால சூரிய தேஜஸ் கொண்ட சிறு வானர வடிவமாயிருந்தவனைப் பார்த்தாள் ஜானகி. வாசகர்களே! ஜானகியின் பார்வை ராம தூதன் பேரில் பட்டதும் அவனுடைய மகிழ்ச்சியை நீங்கள் கற்பனா சக்தியைக் கொண்டு உணர்வீர்களாக! உணர்ந்தால் உங்கள் உள்ளம் நிர்மலமான கோயிலாகும். உங்கள் எல்லாத் துக்கமும் தீரும். உங்கள் உள்ளத்தில் இடம் கிடைக்குமோ என்று சமயம் பார்த்துக்கொண்டிருக்கும் நாராயணன் தன் பாற்கடலையும் விட்டு வந்து உங்கள் உள்ளத்தில் புகுவான். நம்முடைய உள்ளங்களே அவனுக்குப் பாற்கடல் பள்ளியாகும்,

''அங்கு அனந்தன் அணைகிடக்கும் அம்மான்
அடியேன் மனம்தன் அணைகிடக்கும் வந்து''

என்று முதலாழ்வார் பாடியபடி.

* * *

ஹனுமானைப் பார்த்த ஜானகி, ''இதென்ன நான் கேட்ட சொற்களும் காணப்படும் உருவமும் எல்லாம் கனவாகத்தான் இருக்க வேண்டும். எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கும் எண்ணங்கள் கனவில் காணப்படுமல்லவா? நான் தியானித்துத் தியானித்து வந்த என் பிராணநாதனுடைய கதையை யாரோ சொல்வது போல் காதில் படுகிறது. இது உண்மையாக இருக்காது. கனவே — கனவில் குரங்கின் உருவம் பார்த்தால் பந்துக்களுக்குக் கெடுதி நேரும் என்கிறார்களே! ராமனுக்கு மங்களம் ஆருக! லக்ஷ்மணனுக்கு மங்களம் ஆருக! மிதிலையில் எல்லோரும் க்ஷேமமாக இருக்க வேண்டும் — இல்லை, இல்லை! இது கனவல்ல; இன்னும் அதே உருவம் ஸ்திரமாகத் தெரிகிறது. காணும் காட்சி திடமாகவும் இருக்கிறது. கனவல்ல. தவிர, நான் எங்கே தூங்கினேன்? தூங்கினால் அல்லவோ கனவு காணுவேன். இது கனவல்ல, உண்மையே. ஓ, தேவர்காள்! உண்மையில் இந்த வானரம் என் பிராணநாதனிடமிருந்து வந்த தூதனா? அப்படியே ஆருக! வாக்கினுக்குத் தேவனான வாசஸ்பதியே! உன்னை வணங்குகிறேன். அக்கினி பகவானே! உன்னை வணங்குகிறேன். சுயம்புவே! உன்னை வணங்குகிறேன். தேவர்களே! என்னைக் காப்பாற்றுவீர்களாக. இவன் ராம தூதனே ஆருக'' என்று எல்லாத் தேவர்களுக்கும் பிரார்த்தனை செலுத்தினாள்.

ஜானகியைக் கண்ட மகிழ்ச்சியால் ஹனுமான் திவ்விய மங்கள தேஜஸுடன் பொலிந்தான். கீழே இறங்கி சீதைமுன் கைகூப்பி வணங்கி நின்றான்.

''தாயே! தாமரை இதழ்களைப் போன்ற உம்முடைய கண்ணிதழ்களினின்று கண்ணீர்த் துளிகள் விழ்கின்றனவே! யார் நீர்? கண்ணீர் விட்டு மரக் கிளை மேல் சாய்ந்து துயரம் படர்ந்த முகத்தோடு நிற்கிறீர். நீர் தேவகன்னியா, நாக கன்னியா? உம்முடைய தேக காந்தியைப் பார்த்து இப்படிக் கேட்கிறேன். சந்திரனிடமிருந்து பிரிந்து வந்த ரோகிணி தேவியா? வசிஷ்ட பகவானோடு ஏதேனும் வித்தியாசப்பட்டு இறங்கி வந்த அருந்ததியா? கவனித்துப் பார்த்தால் மானுட ஸ்திரீயாகவே காணப்படுகிறீர். தயவுசெய்து நீங்கள் யார் என்று சொல்லுவீர், மங்களம்! மங்களம்! ராவணனால் ஜனஸ்தானத்திலிருந்து பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு வரப்பட்ட சீதாதேவியா நீர்? ராமசந்திரன் மனைவி சீதையைப் பார்க்கும் பாக்கியம் பெற்றேனா?'' என்று ஹனுமான் தன்னுடைய மதுர ஸ்வரத்தில் வணங்கிக் கேட்டான். (தொடரும்)

தேடிக் கொண்டு சென்றான். சுக்ரீவன் என்ற வானரனை அடைந்து அவனுடன் சிநேகம் செய்து கொண்டான். வாலி என்கிற வானர ராஜனைக் கொன்று தம்பி சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் சம்பாதித்துத் தந்தான். அந்தச் சுக்ரீவன் தன்னுடைய வானர வீரர்களைப் பூமண்டலம் முழுதும் சீதையைத் தேடும்படி அனுப்பினான். விரும்பிய வடிவம் எடுக்கும் திறமை கொண்ட வானர வீரர்கள் எல்லாத் திசைகளிலும், காணாமற் போன சீதையைத் தேடினார்கள். அவர்களில் நானும் ஒருவன். சம்பாதியினிடம் பெற்ற துப்பைக் கொண்டு நான் நூறு யோசனை கடலைத் தாண்டி இவ்விடம் வந்தேன். ராகவன் எனக்குத் தன் தேவியைப் பற்றிச் சொன்ன ரூபம், நிறம், லக்ஷணம் இவற்றுக்கெல்லாம் ஒத்த உருவத்தை இப்போது நான் காண்கிறேன்.''

இவ்வாறு மெதுவாகச் சொல்லி ஹனுமான் நிறுத்திக் கொண்டான்.

இந்த மதுரமான சொற்கள் — யாராலோ எங்கிருந்தோ சொல்லப் பட்டதைக் கேட்டு ஜானகி வியப்படைந்தாள்; மகிழ்ந்தாள். நான்கு பக்கமும் பார்த்தாள். யார் இப்படி மிக இனிய குரலில் மிக இனிய விஷயங்களைப் பண்பட்டுத் தெளிந்த பாஷையில் பேசினது என்று நான்கு பக்கமும் மேலும் கீழும் பார்த்தாள். பேச்சுக்கு ஒத்த மனித உருவம் எங்கும் காணவில்லை. மேலே மரத்தில் ஓர் அழகிய வானரத்தைத்தான் கண்டாள்.

நிகரற்ற புத்திமானும் வானர ராஜனுக்கு மந்திரியுமான வாயுபுத்திரன் பால சூரிய தேஜஸ் கொண்ட சிறு வானர வடிவமாயிருந்தவனைப் பார்த்தாள் ஜானகி. வாசகர்களே! ஜானகியின் பார்வை ராம தூதன் பேரில் பட்டதும் அவனுடைய மகிழ்ச்சியை நீங்கள் கற்பனா சக்தியைக் கொண்டு உணர்வீர்களாக! உணர்ந்தால் உங்கள் உள்ளம் நிர்மலமான கோயிலாகும். உங்கள் எல்லாத் துக்கமும் தீரும். உங்கள் உள்ளத்தில் இடம் கிடைக்குமோ என்று சமயம் பார்த்துக்கொண்டிருக்கும் நாராயணன் தன் பாற்கடலையும் விட்டு வந்து உங்கள் உள்ளத்தில் புகுவான். நம்முடைய உள்ளங்களே அவனுக்குப் பாற்கடல் பள்ளியாகும்,

'' அங்கு அனந்தன் அணைகிடக்கும் அம்மான்
அடியேன் மனம்தன் அணைகிடக்கும் வந்து''

என்று முதலாழ்வார் பாடியபடி.

* * *

ஹனுமானைப் பார்த்த ஜானகி, ''இதென்ன நான் கேட்ட சொற்களும் காணப்படும் உருவமும் எல்லாம் கனவாகத்தான் இருக்க வேண்டும். எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கும் எண்ணங்கள் கனவில் காணப்படுமல்லவா? நான் தியானித்துத் தியானித்து வந்த என் பிராணநாதனுடைய கதையை யாரோ சொல்வது போல் காதில் படுகிறது. இது உண்மையாக இருக்காது. கனவே — கனவில் குரங்கின் உருவம் பார்த்தால் பந்துக்களுக்குக் கெடுதி நேரும் என்கிறார்களே! ராமனுக்கு மங்களம் ஆகுக! லக்ஷ்மணனுக்கு மங்களம் ஆகுக! மிதிலையில் எல்லோரும் க்ஷேமமாக இருக்க வேண்டும் — இல்லை, இல்லை! இது கனவல்ல; இன்னும் அதே உருவம் ஸ்திரமாகத் தெரிகிறது. காணும் காட்சி திடமாகவும் இருக்கிறது. கனவல்ல. தவிர, நான் எங்கே தூங்கினேன்? தூங்கினால் அல்லவோ கனவு காணுவேன். இது கனவல்ல, உண்மையே. ஓ, தேவர்காள்! உண்மையில் இந்த வானரம் என் பிராணநாதனிடமிருந்து வந்த தூதனா? அப்படியே ஆகுக! வாக்கினுக்குத் தேவனான வாசஸ்பதியே! உன்னை வணங்குகிறேன். அக்கினி பகவானே! உன்னை வணங்குகிறேன். சுயம்புவே! உன்னை வணங்குகிறேன். தேவர்களே! என்னைக் காப்பாற்றுவீர்களாக. இவன் ராம தூதனே ஆகுக'' என்று எல்லாத் தேவர்களுக்கும் பிரார்த்தனை செலுத்தினாள்.

ஜானகியைக் கண்ட மகிழ்ச்சியால் ஹனுமான் திவ்விய மங்கள தேஜஸுடன் பொலிந்தான். கீழே இறங்கி சீதைமுன் கைகூப்பி வணங்கி நின்றான்.

''தாயே! தாமரை இதழ்களைப் போன்ற உம்முடைய கண்ணிதழ்களினின்று கண்ணீர்த் துளிகள் விழ்கின்றனவே! யார் நீர்? கண்ணீர் விட்டு மரக் கிளை மேல் சாய்ந்து துயரம் படர்ந்த முகத்தோடு நிற்கிறீர். நீர் தேவகன்னியா, நாக கன்னியா? உம்முடைய தேக காந்தியைப் பார்த்து இப்படிக் கேட்கிறேன். சந்திரனிடமிருந்து பிரிந்து வந்த ரோகிணி தேவியா? வசிஷ்ட பகவானோடு ஏதேனும் வித்தியாசப்பட்டு இறங்கி வந்த அருந்ததியா? கவனித்துப் பார்த்தால் மானுட ஸ்திரீயாகவே காணப்படுகிறீர். தயவுசெய்து நீங்கள் யார் என்று சொல்லுவீர். மங்களம்! மங்களம்! ராவணனால் ஜனஸ்தானத்திலிருந்து பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு வரப்பட்ட சீதாதேவியா நீர்? ராமசந்திரன் மனைவி சீதையைப் பார்க்கும் பாக்கியம் பெற்றேனோ?'' என்று ஹனுமான் தன்னுடைய மதுர ஸ்வரத்தில் வணங்கிக் கேட்டான். (தொடரும்)

இல்லங்களில் வளர் செல்லங்கள்

8 பூனைகள் + 3 நாய்கள்

மயிலையில் உள்ள திரு என். ராமாச்சாரின் வீட்டுக்குள் நான் தயங்கியவாறு நுழையும் போது மூன்று நாய்கள் பயங்கரமாகக் குரைத்து வரவேற்பளிக்கின்றன.

''ஏய், ஷ்வீக்! வா, இங்கே!'' — செல்லமாக அதட்டுகிறார் ஸ்ரீமதி ராமாச்சார். அந்தக் கரிய பெரிய நாய் அடக்க ஒடுக்கமாக அவர் பின்னே செல்கிறது. பாமரேனியனும் மற்றொரு பழுப்பு நாயும் 'ஷ்வீக்'கைப் பின்பற்றிச் செல்கின்றன.


''சரியான சமயத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள்! இது 'டின்னர் டைம்' '' என்கிறார் திரு ராமாச்சார். 'மாலை நான்கு மணி அளவில் டின்னரா?' என்று ஒருகணம் திகைக்கிறேன். ஸ்ரீமதி ராமாச்சாரும் அவரது மகனும் மற்றொருவரும் பத்துப் பன்னிரண்டு அலுமினியத் தட்டுக்களை எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் செல்கின்றனர். ''வாருங்கள்!'' என்று எங்களை அழைத்துச் செல்கிறார் திரு ராமாச்சார். அங்கு எட்டு பூனைகள் வந்து தட்டுக்களின் அருகில் நிற்கின்றன. நாய்களும் ஒவ்வொரு தட்டின் அருகில் நாக்கைத் தொங்கப் போட்டவாறு நிற்கின்றன. என் குழப்பம் நீங்கிவிட்டது. 'டின்னர்' எங்களுக்கன்று! நாய்களுக்கும் பூனைகளுக்கும்தான்!

''நாயும் பூனையும் சண்டையிடாமல் ஒற்றுமையாகச் சாப்பிடுவதை இதற்குமுன்பு பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்கிறார் திரு ராமாச்சார். நான் பார்த்த தில்லை என்பது ஒருபுறமிருக்க, எட்டு பூனைகளும், மூன்று வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த நாய்களும் அது அதற்கு என வைத்த உணவை மட்டும் புசித்து விட்டு அமைதியாக விளையாடச் செல்லும் பாங்கினை வேறு எந்த இடத்திலாவது காண முடியுமா என்பது சந்தேகமே.

ஸ்ரீமதி ராமாச்சார் கூறுகிறார்: ''முன்பு எங்களிடம் ஓர் அணிலும் இருந்தது. மாலையில் நாங்கள் உலாவச் சென்றால், அணில், பூனைகள், நாய்கள் எல்லாம் உடன் வரும். அணில் அந்த வேளையில் வேறு எங்காவது இருந்தாலும், நாய் அதனை அழைத்துக் கொண்டு வந்து விடும். இப்படி நாங்கள் உலாவச் செல்வது பார்க்க வேடிக்கையாக இருக்கும்!''

ராமாச்சார் தம்பதி இந்த எட்டு பூனைகளுக்கும் மூன்று நாய்களுக்கும் தனித்தனியே பெயர் சூட்டியுள்ளனர். எப்படித்தான் அந்தப் பெயர்கள் எல்லாம் மறக்காமலும் ஒன்றுக்கொன்று தட்டுக்கெடாமலும் இருக்கிறதோ! பூனைகளுள் ஒன்று சயாம் பூனை. ஓர் அமெரிக்க நண்பர் ராமாச்சாருக்குப் பரிசாக அளித்தாராம்.

திரு ராமாச்சார் இரு பூனைகளைச் சுட்டிக் காட்டி, ''இவ்விரண்டையும் ஒரு ஹோட்டலிலிருந்து அழைத்து வந்தேன். அங்கு இவை நாய்களால் துன்புறுத்தப்படுவதைக் கண்டு மனம் பொறுமல் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்தேன். இன்னொரு சேதி தெரியுமா? என் மோட்டாரின்



'ஹார்ன்' சத்தம் இந்த நாய்கள், பூனைகள் எல்லாவற்றுக்கும் தெரியும். 'ஹார்ன்' சத்தம் கேட்டதும் எல்லாம் வாசலுக்கு வந்து விடும்! இந்தப் பாமரேனியன் நாய் பல வருடங்களாக என்னிடம் இருக்கிறது. இந்தப் பழுப்பு நாய் ஒரு செருப்புத் தைப்பவனிடம் இருந்தது. மூன்று ரூபாய் கொடுத்து வாங்கி வந்தேன்!'' என்கிறார்.

ஒரு சமயம் திரு ராமாச்சார் எங்கோ வெளியூர் சென்றிருந்த பொழுது, ஓரிடத்தில் காரை நிறுத்தி விட்டு வீதியில் சென்ற நாய்களை அழைத்துத் தம்மிடமிருந்த 'சீஸ் (பாலாடைக் கட்டி) ஸாண்ட்விச்'களை அந்த நாய்களுக்குப் படைத்து அவை உண்ணுவதைப் பார்த்துப் பரவசமாகி நின்றாராம்! ''பத்து ரூபாய் கொடுத்து வாங்கிய ஸாண்ட்விச்'' என்று சிரித்தவாறு கூறுகிறார், ஸ்ரீமதி ராமாச்சார். பூனைகளையும் நாய்களையும் 'அவன்', 'அவள்', 'வாம்மா', 'உட்காரம்மா' என்றுதான் அழைக்கிறார். 'ஹிந்து' பத்திரிகையில் விளம்பர இலாகாவில் பணியாற்றும் ஸ்ரீ ராமாச்சார். அவரைப் போலவே அப்பிராணிகளிடத்தில் மிக்க அன்பாகப் பழகுகிறார் அவரது மனைவியும். இவர்களைப் பார்த்துவிட்டு வீட்டு வேலைக்காரியும் நாய், பூனைகளிடம் அதே அளவு அன்புடன் பழகுவதாகக் கூறுகிறார் அவர்.

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?''

அருகிலுள்ள பதினாறு வயதுப் பையனைச் சுட்டிக்காட்டி, ''இவன்தான் எங்கள் ஒரே பையன். எங்கள் வீட்டில் வளரும் 'பன்னிரண்டாவது செல்லம்' '' என்று சிரித்தவாறு கூறுகிறார் திரு ராமாச்சார்.

பேட்டி: **'பாணன்'**





சிதம்பர ரகசியம்
கதை:
சித்திரம்:
16



ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

51-(i)

நான் ஒரு வாசக பக்தனல்ல. அதாவது, சாஸ்திரங்கள் சொல்லும் வாசகங்களுக்கு நான் அடிமையாக மாட்டேன். பொருளைத்தான் கொள்வேன். உலகத்திலுள்ள பல சமய சாஸ்திரங்களையும் பொருள் கண்டு தெரிந்து கொள்ளவே முயற்சி செய்கிறேன். சாஸ்திரங்களில் கூறப்படும் சத்தியம், அஹிம்சை இந்தப் பிரமாணங்களை வைத்தே நான் சாஸ்திரங்களைப் பரிசிலனை செய்வேன். அந்தப் பிரமாணங்களின் சோதனையில் தேறினதை வைத்துக் கொள்வேன். தேறாததைத் தள்ளி விடுவேன்.

உதாரணமாக வேதத்தை ஓதுவதற்கு முயற்சி செய்த ஒரு கீழ்ச் சாதியானை ராமசந்திரன் தண்டித்தான் என்கிற கதையை நான் தள்ளி விடுவேன். அது பின்னால் புகுத்திய செருகு கதையாகும். நான் வழிபடும் ராமன் புராணத்து ராமன் அல்ல. என் கருத்தில் பதிந்திருக்கும் பூரண ராமசந்திரனைத்தான் நான் வழிபடுகிறேன். ஆராய்ச்சியின் பயனாக ராமனைப் பற்றிப் புதிது புதிதாக மாறுபட்ட முடிவுகள் ஏற்படலாம். அவை என்னைப் பாதிக்காது. என்னுடைய ராமன் வேறு. ஆராய்ச்சிக்காரர்களுடைய ராமன் வேறு. துளஸிதாஸர் பாடியிருப்பதும் அவருடைய தனி ராமனையே. ஆராய்ச்சிக்காரர்களுடைய பிரமாணங்களைக் கொண்டு பார்த்தால் துளஸி ராமாயணம் ஒரு பயனும் படாது; குப்பையில் தான் போட வேண்டும் என்பார்கள். ஆனால் பக்தனுக்குத் துளஸி ராமாயணத்தைப் போல் வேறு எந்தக் காவியமாவது சாஸ்திரமாவது கிடையாது. எனக்கு அது ஒரு ஒப்புயர்வற்ற கிரந்தமாகும். துளஸி ராமாயணத்திலும் கூடப் பல பிரதிகளில் பல வேறுபாடுகள் காணப்படும். செருகு சுலோகங்கள் என்று சந்தேகிக்கலாம். அந்த நூலில் முதலிலிருந்து கடைசி வரை இடையறாது ஓடும் புனித பாவமே என்னை ஆட்கொண்டிருக்கிறது.

(யங் இந்தியா 27-1-25)

மகாபாரதத்தில் வரும் கிருஷ்ணன் உண்மை மனிதனோ கற்பனையோ எனக்குத் தெரியாது. நான் பூஜிக்கும் கிருஷ்ண பகவான் மனிதனாகப் பிறந்து வாழ்ந்த எவனுமல்ல. பிற மதத்தினர் நெறி தவறிய சிறுவனாக எண்ணி வரும் கிருஷ்ணனை நான் வணங்கவில்லை. என்னுடைய கற்பனைக் கண்ணன் ஒருவித களங்கமுமற்ற அவதார புருஷன், கீதாசாரியன். கோடிக்கணக்கான மக்களுக்கு நன்னெறி போதிக்கும் ஆசாரியன்.

மகாபாரதமானது ஆழ்ந்த கருத்துக்களடங்கிய அறநூல் என்பதில் சந்தேகமில்லை. அது சரித்திரமாக வைத்துக் கொள்வதற்கு எழுதப்படவில்லை. அதில் உள்ள நிகழ்ச்சிகள் நீதி உபதேசத்துக்காகக் கற்பனை செய்யப்பட்டவை. இது என்னுடைய மதம். நம்முடைய உள்ளங்களில் அறநெறிக்கும் அதர்மத்துக்கும் இடைவிடாத போர் நடந்து வருகிறது. அதுவேதான் மகாபாரதப் போர். அந்தப் போருக்கு வடிவம் கொடுத்து நம்முடைய உள்ளங்களைக் கவரும்படியான வழியில் மனிதர்கள் போர்க்களத்தில் கூடி யுத்தம் செய்ததாக வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் முதலில் எழுதிய மகாபாரதம் அப்படியே நமக்குக் கிடைத்திருப்பதாக வைத்துக் கொள்வதற்கில்லை. ரொம்பவும் மாற்றப்பட்டு அவ்வப்போது புதுச் சரக்குகளும் சேர்க்கப்பட்டிருப்பதாகவே நினைக்கிறேன்.

(யங் இந்தியா 1-10-25)

காணிக்கை

அத்தியாயம் 11

தற்செயலாக அவன் பார்வை அந்தப் பக்கம் சென்றது. தன்னைப் பார்த்ததும் அந்த முகத்தில் புன்னகை அரும்புவதைக் கண்டதும் அவன் பார்வை நிலைத்தது. அறிமுகமான முகம். அவனும் பதிலுக்குப் புன்னகை செய்தான். முன்பு சென்னையில் திறந்த வெளி அரங்கில் பார்த்த மொரீஷஸ் தீவு மங்கையேதான் அவள்.

''ஹலோ!'' என்று கையைக் காட்டினாள் அவள்.

''ஓ ஹலோ!'' என்றான் அவனும்.

இந்த ஒன்றரை ஆண்டுகளில் அவள் சற்றுச் சிவந்து மெருகிட்டது போல் மாறியிருந்தாள். அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு வந்த அன்றைக்கும் அங்கிருந்து திரும்பி வருகிற இந்தச் சமயத்திலும் இவளைக் காண நேர்ந்ததில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று எண்ணி அவன் மனம் உற்சாகம் அடைந்தது.

''சென்னையில் சந்திப்போம்!'' என்பது போல் சைகை காட்டினாள் அந்த மங்கை. கைவிரல்களிடையே கல் இழைத்த மோதிரம் ஒன்று மின்னியது.

''ஓ—அதற்கென்ன சந்திப்போமே!'' என்பது போல் அவனும் தலையை ஆட்டி வைத்தான்.

ஆனால் அடுத்த சில மணி நேரங்களில் விமானம் சென்னையை அடைந்தபோது அங்கே வந்திருந்த கூட்டத்தில் அவள் எங்கே போனாளோ, என்ன ஆனாளோ தெரியாது. அவனை அழைத்துப் போக வந்திருந்த நாலைந்து நண்பர்களோடு அளவளாவியபடி வெளியே வந்த பாஸ்கரன் அவளை மறந்தே போனான்.

வீட்டு வாசலில் காத்திருந்த அவனுடைய அம்மாவும் மன்னியும் அவனைக் கிழக்குமுகமாக நிற்கச் சொல்லி ஆரத்தி கரைத்துச் சுற்றினார்கள். அண்ணா அவனை ஆரத் தழுவி வரவேற்றார். குழந்தைகள் இரண்டும் அவன் காலைக் கட்டிக் கொண்டன.

உடுப்புக்களையெல்லாம் கழற்றி எறிந்து விட்டு, கொடியில் மடித்து வைத்திருந்த வேஷ்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு, 'அம்மாடி' என்று அவன் தரையில் அமர்ந்து கொண்டான். ஒரு தடவை அப்படியே அந்தத் தரையில் விழுந்து புரள மாட்டோமா என்றிருந்தது அவனுக்கு.

* * *

சென்னைக்குத் திரும்பிய சில நாட்களிலேயே விரும்பியிருந்தால் பாஸ்கரன் எத்தனையோ பெரிய இஞ்சினீயரிங் ஸ்தாபனங்களில் சேர்ந்து முக்கியமான பொறுப்புக்களில் அமர்ந்திருக்கலாம். அவனுடைய திறமைகளையும் உழைப்பையும் பயன்படுத்திக் கொள்ளத் தக்க இடங்கள் சில இருந்தன. அங்கெல்லாம் அவன் அடிக்கடி சென்று வந்து நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தானே தவிர, எங்கும் நிரந்தரமாக அமர்ந்து சம்பளத்துக்கு வேலை பார்க்க விரும்பவில்லை.

அவனுடைய விருப்பம் என்ன என்பதே அவனோடு பழகிய யாருக்கும் தெரியவில்லை. அவன் மனத்துக்குள் என்ன என்னவோ திட்டங்கள் போட்டு ஏதோ யாரும் துணியாத அரிய காரியம்



ஆர்வி

ஒன்றைச் செய்து வெற்றி பெற வேண்டும் என்று உள்ளூற ஒரு துடிப்புக் கொண்டிருந்தான். இதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவுமில்லை. ஆனால் பொதுவாக, நாட்கள், மாதங்களாகக் கழிந்து கொண்டிருந்தன.

மகேசன் அண்ட் மகேசுவரன் (பி) லிமிடெட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த காமேசுவரன் பலவிதங்களில் பாஸ்கரனை வற்புறுத்திப் பார்த்தான். மகேசுவரன் தொழில் துறையில் முக்கியமான புள்ளிகளில் ஒருவர். அவருடைய குமாரர்களில் இளையவன்தான் காமேசுவரன். பாஸ்கரனோடு படித்தவன். அவசியமானால் பாஸ்கரனுக்காகவே தனியாக ஒரு புதுக் கம்பெனியைத் தொடங்க மகேசுவரன் சம்மதிப்பதாக அவன் பாஸ்கரனுடைய ஆவலைத் தூண்டினான். எடுத்ததுமே நாலு இலக்கச் சம்பளமும் இன்னும் பல வசதிகளும் செய்து தர அவர்கள் தயாராக இருந்தார்கள். கேட்கவே கவர்ச்சியான சலுகைகளாக இருந்தன.

''ஆகட்டும்; பார்க்கலாமே!'' என்று மழுப்பிக் கொண்டு வந்தான் பாஸ்கரன். நிச்சயமாக அவன் எதையும் சொல்லவில்லை.

''ஆறு மாதம் நீ ஒன்றுமே செய்ய வேண்டாம்; எந்தப் பொறுப்பும் மேற்கொள்ள வேண்டாம். சும்மா வந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிரு. அதற்குப் பிறகு என்ன புதிதாகச் செய்யலாம் என்று உனக்குத் தோன்றுகிறதோ அதைச் சொல்லு, போதும். உனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அப்பா தயாராக இருக்கிறார்'' என்றான் காமேசுவரன்.

''நான் யோசனை பண்ணிச் சொல்கிறேன். எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடு'' என்றான் பாஸ்கரன்.

அது வரையில் பாஸ்கரனைச் சும்மா விட்டு வைக்க அவன் விரும்பவில்லை. எப்படியாவது அவனிடம் ஒரு தொடர்பும் பிடிப்பும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவனுடைய நோக்கம்.

'' சரி ; அவ்வப்போது ஆலோசனை சொல்லிக் கொண்டிரு. உனக்கு ஒரு தொகை ஆலோசனைப்படியாக அனுப்பி வரச் சொல்கிறேன்'' என்றான் காமேசுவரன்.

பாஸ்கரன் அதற்குச் சம்மதித்தான். குடும்பத்துக்கு ஒரு வருவாய் வேண்டுமே. இதே போன்ற ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டு அவனுடைய மற்றொரு நண்பன் குண்டபாணியும்



வந்து கொண்டிருந்தான். அவன் பியர்சன் இந்தியா (பி) லிமிடெட் ஸ்தாபனத்தில் யந்திர நிர்மாணப் பகுதி இஞ்சினியராக இருந்தான். அவர்கள் பலவிதமான கன யந்திரங்கள் தயாரித்து ஆப்பிரிக்க நாடுகளுக்கும் வேறு சில கீழ் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள்.

''நீ வந்தால் காமேசுவரன் ஏதாவது ஆட்சேபம் சொல்லுவானோ?'' என்று சந்தேகப்பட்டுக் கொண்டே கேட்டான் தண்டபாணி.

பாஸ்கரன் இதைக் கேட்டுப் பலமாகச் சிரித்தான்.

''அப்படி யாரும் என்னை இதுவரையில் விலைக்கு வாங்கிப்பிடல்லே. அதனாலே அவன் ஒன்றும் சொல்வதற்கில்லே. அப்படி ஏதாவது ஆட்சேபம் சொன்னால் அவன் அளக்கிற படியை நிறுத்திக்கட்டும்'' என்றான் அவன்.

தண்டபாணி ஆலோசனை கேட்க வந்த நுணுக்கம் அவனுக்குப் புதிது. இருந்தாலும் அங்கே போய் அந்த அமைப்பைப் பார்த்ததுமே அவனுக்கு அந்த நுட்பம் புரிந்து விட்டது. சிக்கலாகப் போய்த் தீர்க்க முடியாமல் திகைக்க வைத்த பிரச்னையை அவன் சுலபமாகச் சரி செய்து விட்டான்.

பியர்ஸன் இந்தியா முன்பு வெளிநாட்டவரைச் சேர்ந்த ஸ்தாபனமாக இருந்தது. சுதந்திர இந்தியாவின் கட்டுத் திட்டங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவர்கள் அதை இந்தியரிடமே விட்டுச் சென்று விட்டார்கள். இப்பொழுது அது வடக்கத்தித் தொழிலதிபர் ஒருவரின் நிர்வாகத்தில் இருந்தது. அந்த அதிபர் விவரம் கேட்டறிந்ததும் தண்டபாணி மூலமாகவே பாஸ்கரனை அணுகினார். ஒரு பெரிய தொகை வாக்களித்து அவனை ஐந்து வருட ஒப்பந்தத்தில் அமர்த்திக் கொள்ள முயன்றார்.

''தொகை பெரிசுதான் தண்டபாணி. இல்லேன்னு சொல்லல்லே. ஆனால் என் சுதந்திரம் அதைவிடப் பெரிசு. இந்த மாதிரி ஒப்பந்தங்களுக்குள்ளே போய் அகப்பட்டுக் கொள்ள அது இடங் கொடுக்காது'' என்றான் பாஸ்கரன்.

இப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பைப் பாஸ்கரன் வேண்டாம் என்கிறானே என்று தண்டபாணிக்கு ஒரு பக்கம் வருத்தம்தான். ஆனால் இன்னொரு பக்கம் அவனுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. பணத்துக்கு மயங்குகிற அடிமைப் புத்தி பாஸ்கரனுக்கு இல்லாமல் இருப்பது அவனுக்குப் பெருமையாகவும் இருந்தது.

தண்டபாணி ஆனந்தம் தாங்காமல் பாஸ்கரனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். ''அப்படிச் சொல்லுடா, ராஜா! அப்படிச் சொல்லு! இந்த மாதிரி சொல்கிற தீரம் இங்கே எவனுக்கு இருக்கு?''

தண்டபாணி தன்னைப் போல் சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று பாஸ்கரனுக்கு அவனிடம் எப்போதுமே அந்தரங்கமான அன்பு உண்டு. என்ன வருமானம் வந்தாலும் அதற்கு மேலே செலவை ஏற்படுத்திக் கொண்டு அன்றாடம் திண்டாடுகிற வர்க்கம். தாட்சிண்யப்பட்டுப் பட்டே இரண்டு பக்கமும் இடிபடுகிற ஜன்மங்கள். செலவு வைப்பதற்கென்றே உறவினர்கள்; அதற்கென்றே சில சடங்குகள், சம்பிரதாயங்கள்; அவசியமில்லாத பழக்க வழக்கங்கள், உபசாரங்கள், மூட நம்பிக்கைகள்; குருட்டுப் பக்திகள். எதிலும் ஒரு நிர்ணயம் கிடையாது. தைரியமும் கிடையாது. எல்லாவற்றிலுமே இரண்டுங்கெட்டான் பிரகிருதிகள். கீழேயும் போக முடியாது; மேலேயும் ஏற முடியாது.

''தண்டபாணி! நான் ஏதோ வெறுப்பிலேலே மறுக்கிறதா நெனைக்காதே. வெளிநாட்டைப் பார்த்துட்டு வந்ததுக்கப்புறம் ஒரு தன்னம்பிக்கை வந்திருக்கு. அவ்வளவுதான்!'' என்று சொல்லி வைத்தான் பாஸ்கரன்.

அதற்குப் பிறகு ஒரு நாள் காமேசுவரன் வந்து, ''பியர்ஸன் சமாசாரமெல்லாம் கேள்விப்பட்டேன்; கங்கிராஜுலேஷன்ஸ்! வீ ஆர் ஸோ ப்ரவுட் ஆஃப் யூ!'' என்றான்.

''ஓ—தாங்க்ஸ்!'' என்றான் பாஸ்கரன் சாதாரணமாக.

காமேசுவரன் இப்படியெல்லாம் சந்தோஷப் படுவது போல் காட்டிக் கொண்டு வருவதற்கு முன்னால் அவர்களுக்குள் என்ன பேச்சு நடந்திருக்கக் கூடும் என்று உத்தேசமாக அவனுக்குத் தெரியும். ஆனால் என்னவோ அவனுக்காகப் பெருமைப்படுகிறானாம்! படட்டுமே; தகாதா என்ன? அவர்களுக்கு உள்ளூற என்னவோ தொழில் பொறாமை. அந்த வடக்கத்திக்காரன் போட்டி வந்தால் யார் பக்கம் அவன் சாய்வானோ என்று ஆத்திரம். ஆனால் நிலைமையைக் கட்டுமீறி வளர விடக் கூடாது என்ற ஆவலில்தான் மீசையில் மண் ஒட்டாத கதையாகப் பாராட்டுகிறான் காமேசுவரன். பாஸ்கரனுக்கு உள்ளூறச் சிரிப்பாக வந்தது.

''எங்க அப்பாவுக்கு முந்தியே தெரியுமாம். புது பிளாண்ட் இன்னும் செட்-அப் ஆகல்லே'ன்னு காதிலே விழுந்ததுமே

அவர் சொல்லி விட்டாராம். 'இதெல்லாம் பெரிய விஷயம். எங்க பாஸ்கரன் கிட்டே விடச் சொல்லுங்க. எவனும் புதிசா இத்தாலியிலேருந்தும் வரவேண்டாம்; ஜெர்மனியிலேருந்தும் வரவேண்டாம். இவன் ஒருத்தனே ஒரே வாரத்திலே 'சால்வ்' பண்ணிக் கொடுத்துடுவான்'னு சொன்னாராம். அப்புறம் தான் இதை யாரோ அங்கே போய்ச் சொல்லி, தண்டபாணி மூலமா உன்னை அழைச்சிண்டு போயிருக்கான் சோப்ரா. தண்டபாணிதானே வந்தான் உன்னைக் கூட்டிண்டு போக?''

''ஆமாமாம்; வேறே யாருக்குத் தெரியும் என்னை?''

''பார்த்தியா, நான் சொன்னதே தான் நடந்திருக்கு!''

''அது சரி; அதெப்படி என்னாலே முடியும்னு உங்க அப்பா அவ்வளவு நிச்சயமாச் சொன்னார்? அது எனக்குப் புதிசாச்சே!''

''புதிசா இருந்தாலும் நீ எல்லாம் கண்டுபிடிச்சுடுவேன்னு தெரியாமலா அவர் சொல்லியிருக்கார்? உன் திறமை அவ்வளவு தூரம் அவருக்குத் தெரியலேன்னு உனக்கு ஒரு கார் ஒதுக்கிவிட்டு வைக்கணும்னு போர்டு மீட்டிங்கிலே சிபாரிசு பண்ணுவாரா? சாங்ஷன்தான் வாங்குவாரா? அதென்ன இவ்வளவு கலபமாச் சொல்லிட்டே நீ? உன் விஷயத்திலே அவர் எவ்வளவு அக்கறை வைச்சிண்டிருக்கார், சொந்தப் பிள்ளைக்கும் மேலே தெரியுமா?''

''ஓ! ஆனா எனக்கு எதுக்குக் காரும் இன்னொண்ணும். முதல்லே என்னாலே அதை 'மெயின்டைன்' பண்ணவே முடியாதே. கம்பெனியே அதை ஏற்றுக் கொண்டாலும் எனக்கு இரவல் கார் எல்லாம் வேண்டாம். சொந்தமா வாங்கறபோதுதான் அதெல்லாம்!'' என்று தலையை அசைத்துத் தன் மறுப்பைத் தெரிவித்துக் கொண்டான் பாஸ்கரன்.

''இதுவும் சொந்தம் போலத்தான். காரின் விலையில் பாதியைக் கம்பெனியே கொடுத்துடும். மீதியை மாசம் கொஞ்சமாப் பிடிச்சாச் சரியாப் போறது. இது எப்படி இரவலாகும்?''

''அப்பவும் நான் யோசனை பண்ணித்தான் சொல்லணும். இப்போதைக்கு நானே சொந்தமா ஒரு சின்னத் தொழிலா ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். இந்த மாதிரியெல்லாம் உங்களுக்கு உடைமைப் பட்டுட்டா அது சரியா வராது'' என்று இன்னமும் தலையை அசைத்து மறுத்தபடியே பேசினான் பாஸ்கரன்.

'' பியர்ஸன் இந்தியாவிலேருந்து ஆஃபர் வந்ததாக் கேள்விப்பட்டேனே! உண்மைதானா அது?''

''அதைக் கேள்விப்பட்டிருந்தா நான் மாட்டேன்னு சொல்லிட்டதையும் கேள்விப் பட்டிருப்பியே!''

சிக்கல் தீர்த்தவர்!

பொன்மலையில் ராதா கல்யாண உத்சவம். ஆலத்தூர் சகோதரர்களின் இசைக் கச்சேரிக்குப் பிறகு பித்துக்குளி முருகதாஸின் பஜனை ஆரம்பமாக இருந்தது.

''சுவாமி! நீங்கள் கேட்ட ஆர்மோனியத்தை இரவலாக வாங்கி வைத்து விட்டோம். உங்கள் பஜனைப் பாடலுக்கு மிருதங்கம் வாசிக்க வரவேண்டிய சுவாமிநாதன் இன்னும் வரவில்லையே! என்ன செய்வது?'' என்று உத்சவ நிர்வாகிகள் முருகதாஸை அணுகிக் கவலையோடு வினவினார்கள்.

உத்ஸவ நிர்வாகிகளில் ஒருவர் ''ஆலத்தூர் சகோதரர்கள் கச்சேரிக்கு டோலக் வாசித்தாரே வடிவேல்.....'' என்று இழுத்தார்.

''டோலக் வாசிப்பவர் மிருதங்கம் வாசிப்பாரா? சுவாமிநாதனையே அழைத்து வர ஓடுங்கள்!'' என்றார் ஒரு முதியவர்.

''இல்லை, சிக்கல் வடிவேல் நம்ம சிக்கலைத் தீர்த்து வைப்பார். அவர் மிருதங்கம் வாசிப்பதிலும் கெட்டிக்காரர். ஆழியூர் நடேசய்யரிடம் முறையாக மிருதங்கம் பயின்றவர்!''

''அப்படியா? வாருங்கள். அவரையே கேட்டுப் பார்க்கலாம்!'' என்று ராதா கல்யாண உத்ஸவ நிர்வாகிகள் சிக்கல் வடிவேலுவை அணுகினர்.

1945ம் வருஷம் பொன்மலை ராதா கல்யாண உத்ஸவத்தில் நிகழவிருந்த சிக்கலைத் தீர்த்துவைத்து, தாஸனுடன் பக்கவாத்தியமாக வந்து சேர்ந்தார் சிக்கல் வடிவேலு. அன்று முதல் இருபத்தைந்து வருஷங்களாகப் பித்துக்குளி முருகதாஸுக்கு வாசித்து வருகிறார் வடிவேலு. இந்த வெள்ளி விழாத் தொண்டைக் கௌரவிக்கத் தீர்மானித்தார் பித்துக்குளி முருகதாஸ். தியாகராய நகர் நவராத்திரிக் கலை விழாவின்போது, அன்று சிக்கல் வடிவேலுவுக்குச் செம்பை பொன்னாடை போர்த்திப் பணமுடிப்பும் கொடுத்தார்.



''அதானே கேட்டேன். அதுக்கு நீ சொந்தமா ஏதாவது செய்யறது எத்தனையோ தேவலை. எதுவா யிருந்தாலும் எங்க தொடர்பு விட்டுப் போகாது.''

''என்னமோ பார்க்கலாம். நான் என்னவெல்லாமோ பிளான் போட்டுண்டிருக்கேன். நடக்கறது வேறே ஒண்ணு இருக்கு. இது எங்கே போய் முடியுமோ தெரியல்லே!'' என்று உண்மையான கவலையோடு சொன்னான் பாஸ்கரன்.

''எல்லாம் சரியாகத்தான் முடியும்'' என்று சொல்லி விட்டு நிம்மதியோடு போனான் காமேசுவரன்.

அவன் சொல்லி விட்டுப் போன ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு தந்தி வந்தது. அதைப் பிரித்துப் படித்தவன் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்.

''என்னடா, என்ன?'' என்று பார்வதி பதறிப் போய்க் கேட்டாள்.

பாஸ்கரன் பதில் சொல்கிற நிலையில் இல்லை. பார்வதியம்மாள் அடுத்த வீட்டுப் பையனைக் கூப்பிட்டு அவன் கையிலிருந்த தந்தியைப் படிக்கச் சொன்னாள்.

''யாரோ ஹரிநாராயண் குப்தாவாம்; சோபனாவாம். இருவரும் டார்ஜீலிங் என்ற இடத்தில் ஒரு கார் விபத்தில் அகப்பட்டுக் கொண்டு இறந்து விட்டார்களாம். ஜோஷி என்பவர் தந்தி கொடுத்திருக்கிறார்!'' என்று படித்ததைச் சொன்னான் பையன்.

''சரியாப் படிச்சுச் சொல்லுடா அம்பி. அவா ரெண்டு பேரும் எங்க பாஸ்கரனுக்கு ரொம்ப வேண்டியவாடா!'' என்றாள் பார்வதியம்மாள், பதறியபடி.

''வேண்டியவான்னு வேறே யாரை யாவது படிச்சுச் சொல்லச் சொல்லுங்கோ!'' என்று அந்தப் பையன் பயந்து போய் ஓடியே போய்விட்டான்.

பார்வதி அம்மாளும் அப்படியே சிலையாகி நின்றாள்.

அத்தியாயம் 12

பாஸ்கரன் அவர்களுடைய கல்யாணத்துக்குக் கூடப் போகவில்லை. ஹரி நாராயணனின் பெற்றோர்களுக்கு அந்தக் கல்யாணத்தில் சம்மதமே இல்லை. இருந்தாலும் பல இடையூறுகளுக்கிடையே அவர்களுடைய திருமணம் காமா சோமாவென்று நடைபெற்றது. அதன் காரணமாக இருவரும் அவனை வற்புறுத்தி அழைக்கவில்லை.

கல்யாணமான நாலைந்து மாதங்களுக்குப் பிறகு ஹரிநாராயண் குப்தாவிடமிருந்து வேறு மாதிரியான கடிதம் ஒன்று வந்தது:

பெற்றோர்களுடைய கோபம் இப்போது முற்றிலும் தணிந்து விட்டதாம். சோபனாவை அவனுடைய அம்மா தரையில் கூட நடக்க விடமாட்டேன் என்கிறாளாம்.

''என் நாட்டுப்பெண் அமெரிக்காவுக்கெல்லாம் போய்ப் படித்து விட்டு வந்த டாக்டராக்கும்! எத்தனை பிரசவங்கள் பார்த்திருக்கிறாள்! எத்தனையோ பேர்களுடைய உயிரை அவள் எமனோடு போராடிக் காப்பாத்தி யிருக்கிறாளாக்கும்!'' என்று தனக்குத் தெரிந்தவர்கள் உறவினர்களிடமெல்லாம் போய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறாளாம்.

அவனுடைய அப்பா, ''என் பிள்ளை அவன் நண்பனோடு சேர்ந்து கொண்டு பத்து லட்சம் முதல் போட்டு, கலர்—சாதா டெலிவிஷனெல்லாம் செய்யப் போகிறானாக்கும். சர்க்காரில் வேலைக்கு வரச் சொல்லிக் கெஞ்சியும் அவன் போகவில்லையாக்கும். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இந்த டாடா பிர்லாவுக்கு மேலே வரப் போகிறானாக்கும். தொழிற்சாலை சம்பந்தமாக அவன் சர்க்காரோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறானாக்கும்'' என்று வேண்டியவர்களிடமெல்லாம் சொல்லிப் பெருமை அடித்துக் கொண்டிருக்கிறாராம்.

அவனும் சோபனாவும் எப்போது சென்னைக்கு வரப் போகிறோம் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்களாம். அப்படியே திருப்பதிக்கெல்லாம் கூடப் போக வேண்டுமாம். சோபனாவினால் உடனே புறப்பட முடியவில்லையாம். சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். திடீரென்று அவர்கள் வந்தே விடுவார்களாம்.

தொழிற்சாலை விஷயமாக நேரில் பேசிக் கொள்ளலாம் என்றும் அதில் எழுதியிருந்தான். அடியில் சோபனாவும் எழுதியிருந்தாள்:

''பாஸ்கர் அண்ணா, குழந்தை — குழந்தை என்று சொன்னேனே, அந்தக் குழந்தை இத்தனை துஷ்டையாய் இருக்கும் என்று நினைக்கவே யில்லை. ரொம்பப் படுத்துகிறது அண்ணா. நீ ஏன் இதைப் பற்றி என்னை எச்சரிக்காமல் போனாய்? பொல்லாத விஷமம் அண்ணா விஷமம், விஷமம்!''

இதுதான் அவர்களிடமிருந்து கடைசியாக வந்த கடிதம். அதற்குப் பிறகு வந்தது இந்தத் தந்திதான்!

ஆண்டவன் புரிந்து விட்ட இந்த வஞ்சனையைப் பாஸ்கரனால் பொறுக்கவே முடியவில்லை. அவன் தன் துக்கத்தை யாரிடம் சொல்லி ஆற்றிக் கொள்வது? மனசு கிடந்து பறப்பதாகவும் அவசிய

மானால் நேரில் வருவதாகவும் ஜோஷிக்குப் பதில் தந்தி அடித்திருந்தான்.

''எல்லாம் கதையாக, கனவாக முடிந்து விட்டது. உங்களைப் பார்த்தால் ஹரியின் பெற்றோர்களுக்கு இன்னும் துக்கம் தாங்க முடியாமல் போய் விடும். தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாக ஹரி சர்க்காருடன் நடத்தின கடிதப் போக்குவரத்துக்களை இத்துடன் இணைத்திருக்கிறேன். முடிந்தால் ஹரி கண்டு வந்த கனவை நீங்கள் நனவாக்க முயலுங்கள். அவனுடைய ஆத்மாவுக்கு அது ஆறுதலளிக்கும்'' என்று முக்கியமாகக் குறிப்பிட்டு விட்டு, ஹரி இது சம்பந்தமாக வைத்திருந்த தஸ்தாவேஜிகளையும் அவனுக்குப் பார்சலாகக் கட்டி அனுப்பி யிருந்தார் ஜோஷி.

பாஸ்கரனால் இந்தத் துக்கத்தை என்ன செய்தும் மறக்க முடியவில்லை. ஹரி நாராயணனும் சோபனாவும் அதற்குப் பிறகு எத்தனை தடவை அவனுடைய கனவில் உயிர் பெற்று எழுந்து விட்டார்கள்! பார்வதியம்மாள் இத் துக்கத்தில் பாதியைப் பகிர்ந்து கொள்ளாமல் போயிருந்தால் அவனுக்குச் சித்தப் பிரமையே உண்டாகி யிருக்கும்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் அவனால் எதையும் சரிவரச் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியவில்லை. மகேசன் அன்ட் மகேசுவரனிலிருந்து காமேசுவரன் சொன்னபடி புதிய வண்டி அவன் கைக்கு வந்து விட்டது. பாஸ்கரன் இதை வாங்கிக் கொள்ளலாமா, வேண்டாமா என்று யோசித்து ஒரு முடிவு செய்கிற வரையில் காமேசுவரனுடைய அப்பா காத்திருக்கவில்லை.

''ஒன்றும் யோசிக்காதே பாஸ்கர். கார் வாங்கிக் கொடுத்துட்டதுக்காக, நாங்க ஒண்ணும் புதிசா ஒங்கிட்டே எதிர்பார்க்கப் போறதில்லே. உன்னைப் போல இருக்கிறவங்களுக்குக் கார் ரொம்ப அவசியமான தேவை. அதை உத்தேசம் பண்ணித்தான் கார் கொடுத்திருக்கோம். இது கொடுத்திருக்கிறதனாலே உனக்குக் கொடுக்கிற அலவன்ஸ் குறைஞ்சு போயிடுமேன்னும் உனக்குக் கவலை வேண்டாம். அலவன்ஸை அதிகப்படுத்தி அந்த அதிகத்தை மட்டும் மாசம் கொஞ்சமா ஈடு செய்துக்கறதா இருக்கோம். அதனாலே கவலையே வேண்டாம். இது இனிமே உன் சொந்த வண்டி. இதுக்கு ஆகிற செலவும் கம்பெனியைச் சேர்ந்தது. இதற்கான டாக்குமென்ட்ஸெல்லாம் இதோ இருக்கு!'' என்று கையிலே எடுத்துக் கொடுத்து விட்டார் அவர்.

பாஸ்கரன் அதற்கு மேல் தயங்கவில்லை. வண்டியைப் பார்த்தான். அருமையான இரீம் கலர். அவனுக்குத் தகுந்தமாதிரி ஃபியட் வண்டி.

''வண்டி வந்து விட்டது சரி. இதை வைத்துக் கொண்டு நான் எங்கே போறது?'' என்று காமேசுவரன் வந்த போது கேட்டான் பாஸ்கரன்.

''இதென்னப்பா — யாரும் கேட்காத கேள்வியா நீ கேக்கறே? வண்டியை எடுத்துண்டு போய் ஒரு பெரிய 'டூரா'க அடித்துவிட்டு வாயேன் முதல்லே. வேணும்னா ஒரு டிரைவரை அனுப்பட்டுமா? செலவுக்கு நீ கவலைப்பட வேண்டாம்'' என்றான் காமேசுவரன்.

அது நல்ல யோசனையாகப் பட்டது பாஸ்கரனுக்கு.

''அதெல்லாம் நீ யாரையும் அனுப்ப வேண்டாம். நானே ஜோரா ஓட்டுவேன். டூர் போவதற்குப் போயும் போயும் நீங்க ஆள் அனுப்புவானேன்?''

''அப்ப நீயே தனியாப் போயிட்டு வாயேன். ஊரெல்லாம் சுத்திப் பார்த்துட்டு வந்தா உனக்கே புதிசா ஓர் ஐடியா தோணும். நாட்டு நிலவரத்தையும் புரிஞ்சுக்கலாம். நல்லதுதானே!''

''நல்லதுதான். நாட்டு நிலவரம் இருக்கட்டும். நமக்கே ஒரு சுறுசுறுப்பு ஏற்படும்; மனசு 'எக்சர்சைஸ்' செய்தாப்பலே விரிவடையும்.''

ஹரியின் மறைவினால் ஏற்பட்ட துக்கத்தை மறக்கவும் இந்தப் பயணம் உதவும் என்று தோன்றிற்று பாஸ்கரனுக்கு. தமிழ் நாட்டையும் கேரளாவையும் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்ப்பது என்று தீர்மானித்து விட்டான்.

''நீயும் புறப்படறயா அம்மா? உன்னை வீரசோழபுரத்திலே விட்டுட்டு நான் அப்படியே ஒரு டூர் அடிச்சுட்டு வந்துடறேன்!'' என்றான் அம்மாவிடம்.

''நீமட்டும் தனியாவா? காரிலேயா?''

''ஏன் காரிலே தனியாப் போனா என்ன பயம்?''

''எனக்கு என்னவோ பயமாத்தான் இருக்கு!''

''உனக்கு ஹரியோட நினைவு வந்துட்டாப்பலே இருக்கு. அந்தக் கவலையை மறக்கலாம்னுதானே போறேன்.''

''அப்படியானா நீ போயிட்டு வா. ஆனா போற இடத்திலேருந்து மறக்காம கடுதாசி மட்டும் போட்டுடு.''

''அமெரிக்காவுக்குப் போனபோது கூட உனக்குப் பயமில்லே. இப்போ பெரிசாக் கவலைப்படறியே! எனக்கு ஒண்ணும் வந்துடாது. கவலைப்படாதே!''

பார்வதி அம்மாளுக்கு என்னவோ கவலையாகத்தான் இருந்தது. செங்கழுநீர்ப் பிள்ளையாருக்குப் பன்னிரண்டு தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டாள். (தொடரும்)

காட்டின் காதலர்!

நகரத்தான் ஆதிவாசி ஒருவனை மிருகக் காட்சி சாலைக்கு அழைத்துச் சென்றான். ''பார்த்தாயா? அத்தனை மிருகங்களையும் இந்நகர மிருகக் காட்சிசாலையில் காணலாம்!'' என்றான் நகரத்தான் பெருமையோடு.

''அது சரி, இத்தனை மிருகங்களும் எங்கள் காட்டிலிருந்துதானே வந்திருக்கின்றன!'' என்றான் ஆதிவாசி அலட்சியமாக.

மிருகங்களும் விஷ ஜந்துக்களும் மிருந்த காட்டில் அச்சமின்றிச் சென்று ஆதிவாசிகளோடு பழகிப் பேசி அவர்களுடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்து பிராபல்யப்படுத்துபவர் மானிட இயல் அறிஞர் பிலோ இருதயநாத்.


ஒரு தடவை காட்டுவாசியோடு மைசூர் மசினக்குடி காட்டில் ஒரு மேட்டில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தார் இருதயநாத். காட்டுவாசி திடீரென்று அருகிலுள்ள மேட்டில் கத்தியினால் குத்தியபோது ரத்தம் பீறிட்டு அடித்தது. அப்பொழுதுதான் அவர்கள் இருவரும் அமர்ந்திருந்த இடம் ஒரு பிரும்மாண்டமான மலைப் பாம்பின் வாசஸ்தலம் என்பதை உணர முடிந்தது. அதன் உடல் நிறம், அமைப்பு காரணமாக இருக்குமிடம் தெரியாமல் கிடந்த அது மெல்ல இவர்களைச் சுற்றி வளைக்க முற்பட்டிருந்தது. பொள்ளாச்சி ஆனைமலையில் காட்டெருமைகளுக்கு மத்தியிலிருந்து இவர் உயிர் தப்பிப் பிழைத்தது மயிர்க் கூச்செரியச் செய்கிறது. காட்டிலே நீரில்லாமல் முப்பத்திரண்டு மைல்கள் தாக வறட்சியினால் அல்லலுற்று நடந்து அழுக்குக் குட்டையில் நீரை அருந்தித் தாகத்தைத் தீர்த்துக் கொண்டதை இவர் கூறக் கேட்டால், 'இப்படியும் ஒரு பயங்கர வாழ்க்கை தேவையா?' என்று எண்ணத் தோன்றுகிறது. இப்படி முப்பத்தைந்து வருஷங்களாக எத்தனையோ அல்லல்கள் பட்டுக் காட்டுவாசிகளின் அபூர்வப் பழக்கங்களைப் பாரறியச் செய்த திரரைத் தமிழ் நாட்டில் உள்ள ஐ. நா. கல்வி பண்பாட்டு மன்றம் பாராட்டிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளது. தலைமை வகித்துச் சான்றிதழ் வழங்கிய ஐ. நா. பிரதம நிர்வாக அதிகாரி, ''உங்களோடும், இந்தக் காட்டுப் பொருள்களோடும் தினம் அனுசரித்துப் போகும் உங்கள் அருமை மனைவியாருக்கு முதலில் பாராட்டுதல் தெரிவிக்க வேண்டும்!'' என்று சொல்லிச் சிரித்தாராம்.

பிலோ இருதயநாத் பிறந்தது 1916ல் மைசூரில்; அன்னைக்குப் பிறந்த ஊர் நீலகிரி; தந்தைக்குச் சொந்த ஊர் கலைகளின் பிறப்பிடமான தஞ்சை. டாக்டர் மைக்கேலின் அருமைப் புதல்வரான இருதயநாத் செங்கல்பட்டு புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளியிலும், மயிலாப்பூர் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார். எட்டாவது வயதிலேயே முப்பத்திரண்டு மைல்கள் நடந்து வந்து பிரயாணத்தின் அருமையைத் தெரிந்து வைத்திருக்கிறார். பிலோ இருதயநாத் விநோதப் பிரகிருதி. சினிமா பக்கம் எட்டிப் பார்க்க மாட்டார்! காப்பிப் பழக்கம் மட்டுமே உண்டு. எங்கேயும் தம் 'ரோல்ஸ்ராய்ஸ்' சைக்கிளில் சுற்றி, பிரயாணத்தை முடித்துக் கொள்ளும்சாமர்த்தியசாலி. இவர் முதன் முதலில் செங்கல்பட்டு வில்லியர்களைப் பற்றியும், குருவிக்காரி பற்றியும் எழுத ஆரம்பித்தார். இவரது முதல் கட்டுரை குழந்தைகள் ஏடான 'அணில்' பத்திரிகையில்தான் வெளி வந்ததாம்! இந்தியாவில் உள்ள ஆதிகுடிகளைப் பற்றி இவருக்குத் தலைகீழ்ப் பாடம்! அவர்களது பொருள்களையெல்லாம் காட்சிப் பொருளாக வைத்து அவர் விளக்கும் விதமே அலாதி! திபெத்தில் ஒரு லாமா (மதகுரு) 'பிரார்த்தனைச் சக்கரம்' வழங்கியதைப் பொக்கிஷமாகப் பாதுகாக்கிறார்!

இவரது கன்யாகுமரிப் பிரயாணத்தின்போது பஸ்ஸில் காமிரா, நகைகள் அடங்கிய பையைத் தவறவிட்டு, அதைத் திரும்பப் பெற்ற விந்தையை உணர்ச்சி பொங்க இருதயநாத் சொல்லக் கேட்பவர்கள் அயர்ந்து போவார்கள். ''எழுத்தாளன் என்பதினாலே, பையிலே 'பிலோ இருதயநாத்' என்று குறித்திருந்ததினாலே ஒரு பிரமுகர் பத்திரமாகப் பையை எடுத்து வைத்திருந்து கொடுத்தார். என் பிரயாண வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி இது!'' என்கிறார் பிலோ இருதயநாத். காஞ்சி ஆசாரிய சுவாமிகள் சதஸில் ஆதிவாசிகளைப் பற்றிப் பேசியதைக் கேட்டுப் பாராட்டியதைப் பெறற்கரிய பாக்கியமாகக் கருதுகிறார்.

இவருக்கு ஐம்பத்தைந்து வயதாகிறது என்பது நம்ப முடியாத ஒன்று. நேரப்படி காரியங்களை நடத்தும் இவருக்குக் காட்டு வாழ்க்கை பற்றியும், ஆதிவாசிகளைப் பற்றியும் பேச ஆரம்பித்தாரானால் நேரம், காலம் தெரியாது! அத்தனை வருஷ அனுபவமும் பேசும்போது நாமும் காலமதை மறந்து விடுவோம். இந்த அபூர்வப் பிரகிருதி ஒரு 'நடமாடும் காட்டு மியூஸியமாக'த் திகழ்வதைக் கண்டு பெருமைப்படலாம்!

— பி. எஸ். எம்.



16. கருணையாற்றங்கரையில் கொடுமை

பழைய சம்பவங்களைப் பற்றிய நினைவில் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்தான் நல்லதம்பி. பிறகு தொடர்ந்து பேசினான் —

''இந்த முறை மன்னித்து உயிர்ப்பிச்சை அளித்தால் கண் காணாத இடத்துக்கு ஓடிப் போய் விடுவதாகக் கெஞ்சினான் நடராஜன். சிவராமன்! அப்போது எனக்கு அழுகையே வந்து விட்டது. சற்று விலகிப் போய் உட்கார்ந்து கொண்டேன். நீ இப்போது நினைக்கிறாயே, இதைப்போல்தான் அந்தச் சமயத்தில் நானும் நினைத்தேன். கட்சிக்காகக் கொலை செய்வதா என்ற கேள்விதான் என் இதயத்தில் குடைந்து கொண்டிருந்தது. நான் பார்த்துக் கொண்டிருந்த போதே காரியம் முடிந்து விட்டது. பயந்து ஒதுங்கியவாறு சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்த என்னைத் தண்டாயுதபாணி கூப்பிட்டு நடராஜனுக்கு உயிர் போய் விட்டதா என்று பார்க்கும்படி கூறினார். எனக்கு நடக்கக்கூட முடியவில்லை. வயிற்றைப் புரட்டிக் கொண்டிருந்தது. கட்டளைக்குப் பணிந்து நடராஜனைப் பக்கத்தில் போய்த் தொட்டுப் பார்த்தேன். பிரேதமாகிக் கிடந்தான். வேட்டியெல்லாம் இரத்தம். தலையையும் உடலையும் வெவ்வேறு இடங்களுக்குத் தூக்கிக் கொண்டு போய்க் குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள்.......''*

நல்லதம்பி, சொல்வதை நிறுத்திவிட்டு மீண்டும் நிலவைப் பார்த்தான். சிறிது நேரம் அந்த இடத்தில் மயான அமைதி நிலவியது. சிவராமனின் மனம் பதை பதைத்தது. அருவருப்பும், பயமும் கலந்த உணர்வு, வயிற்றில் புரண்டு கொண்டிருந்தது. நல்ல





---


* (நீதி மன்றத் தீர்ப்பிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.)

1. திருநெல்வேலி செஷன்ஸ் வழக்கு எண் 117/51
''திருநெல்வேலி ஜில்லா கம்யூனிஸ்ட் சதிவழக்கு''
குற்றவாளிகள்: பொன்னு மற்றும் 66 நபர்கள்.
நீதிபதி: திரு வி. சிவசுப்பிரமணியன்.
வழக்கு நடைபெற்ற காலம்: 24-3-52லிருந்து 23-7-52 வரை.
தீர்ப்புக் கூறப்பட்ட நாள்: 11-8-52.
தண்டனை: 16 நபர்களுக்கு ஆயுள் தண்டனை முதல் ஓர் ஆண்டுக் கடுங்காவல் தண்டனைவரை வழங்கப்பட்டன.

2. மேற்கண்ட வழக்கில் தலைமறைவாயிருந்து பின்பு பிடிக்கப்பட்டவர்கள் மீது நடைபெற்ற வழக்கு:
செஷன்ஸ் வழக்கு எண்: 99/53
''திருநெல்வேலி ஜில்லா கம்யூனிஸ்ட் சதிவழக்கு''
குற்றவாளிகள்: பாலதண்டாயுதம் மற்றும் இருவர். (முதல் வழக்கில் அகப்படாமல் தப்பி ஒளிந்திருந்த இவர்கள் பின்பு பிடிபட்டனர்).
நீதிபதி: திரு பி. எஸ். கேசவன் நம்பூதிரி.
தீர்ப்புக் கூறப்பட்ட நாள்: 2-11-1953.
தண்டனை: பாலதண்டாயுதமும் மற்றும் ஒருவரும் ஆயுள் தண்டனை பெற்றனர்.

தம்பியை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இவ்வளவு கொடூரமாகவா........?'' என்று முனகினான்.



''கட்சியின் கண்ணோட்டத்தில் இவையெல்லாம் அன்றாட நிகழ்ச்சிகள். இப்போது விஜயவாடா நிகழ்ச்சியும், அந்த வகையைச் சேர்ந்ததுதான். ஐயாவின் லிஸ்டில் சிவப்புக் குறி தோன்றிய பிறகு யாரும் தப்ப முடியாது'' என்று கூறி விட்டுப் பாயில் படுத்துக் கொண்டான் நல்லதம்பி.


சிவராமனின் உடல் சிலிர்த்தது. ''வேறு யாருடைய பெயரெல்லாம் இப்போது லிஸ்டில் இருக்கின்றன?'' — ஆர்வத்தோடும், பயத்தோடும் கேட்டான் சிவராமன்.

'' யாருக்குத் தெரியும்? பெரிய இரகசியமாச்சே... தண்டாயுதபாணி ஒருவருக்குத்தான் தெரியும். அவரைக் கண்ட துண்டமாக வெட்டினாலும், அவர் வாயிலிருந்து எந்த இரகசியமும் வெளி வராது!''

''உன்னை ஹைதராபாத்துக்கு வரும்படி தலைவர் கட்டளையிட்டிருந்தாரே, ஏன்?''

''உன்னிடம் சில அறிக்கைகளை ஒப்படைக்கத்தான். மேஜைக்குள் வைத்திருக்கிறேன்...காலையில் எடுத்துப் பார்....ஐயாவுக்கு உன்மீது அளவு கடந்த பிரியம்.

ர.சு.நல்லபெருமாள்.


துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட
ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!
ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!
பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!
Cadbury's
Bournvita
the ideal food drink for strength and vigour
450g
சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்
காட்பரிஸ் போர்ன்விடா.
Bensons 10391 IT A M

ரஷ்யாவில் நடக்கும் அகில உலக கம்யூனிஸ்ட் மகாநாட்டுக்கு உன்னை அனுப்ப நினைத்திருக்கிறார். அதற்கான அறிக்கை தானோ என்னவோ! சீல் வைத்த கவர். நீயேதான் உடைத்துப் பார்க்க வேண்டும்.''

''இதை அப்போதே சொல்லக் கூடாதா?'' என்று கேட்டுவிட்டுப் பரபரப்புடன் எழுந்தான் சிவராமன்.

''இப்போதுதானே உன்னோடு பேச முடிந்தது. நான் வந்ததுமே ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்வதில் முனைந்து விட்டேனே'' என்று கூறிக் கொண்டே கொட்டாவி விட்டான் நல்லதம்பி.

சிவராமன் விரைந்து கட்டடத்துக்குள் நுழைந்தான். மேஜையைத் திறந்து பரபரப்புடன் சீல் வைக்கப்பட்டிருந்த கவரை எடுத்தான். மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான்.

கவருக்கு மேலிருந்த அரக்கு முத்திரையை உடைத்து விட்டுக் கவரைத் திறந்தான். உள்ளே கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயத்தின் முத்திரை இடப்பட்டிருந்த ஒரு தாள் இருந்தது. மிகுந்த பரபரப்புடன் அதில் எழுதியிருந்தவற்றைப் படிக்கத் தொடங்கினான். இரண்டு மூன்று வரிகளைப் படிக்கும்போதே அவனுடைய முகம் மலரத் தொடங்கி விட்டது.

ரஷ்யாவில் நடக்கப் போகும் உலகக் கம்யூனிஸ்ட் மகாநாட்டுக்கு அவன் செல்ல வேண்டியிருப்பதால் அதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி கட்டளை இருந்தது. திரும்பும்போது சீனாவுக்குப் போய் வர வேண்டும் என்றும் கட்டளை கூறியது.

அதை வாசித்ததும் அவனுடைய மன உளைச்சல் அனைத்தும் மறந்துவிட்டன. உடலில் புதுத் தெம்பு தோன்றி விட்டது. மானசிகமாக வேதமூர்த்தியை நினைத்து நன்றி செலுத்தினான். சிறிது நேரம் கற்பனையில் மிதந்தான். ரஷ்யாவும், சீனாவும் மனக் கண்ணில் வந்தன. ரஷ்யத் தலைவர்களோடும், சீனத் தலைவர்களோடும் பேசுவது போன்ற பிரமை தட்டியது. கற்பனை இன்பத்தில் மூழ்கி விட்டவன் திடீரென்று சுய உணர்வைப் பெற்று மீண்டும் கையிலிருந்த தாளைப் படித்தான்:

சாரதாவைக் கட்சியில் சேர்க்கும் சடங்கை நடத்தி வைக்கக் காந்தாமணி, இன்னும் இரண்டு நாட்களில் அங்கு வருவதாகவும்; கட்சியில் சேர்க்கப்பட்டதும் பயிற்சிக்காகச் சாரதாவைக் காந்தா மணியுடன் வயநாட்டுக்கு இரகசியமாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

பிறகு, விஜயவாடா பற்றிய குறிப்பைப் படித்தான்: ''....விஜயவாடாக் கலையெடுப்பு முடிந்துவிட்டது. பழியை முதலாளி வர்க்கம் மீது சுமத்தவும். அதற்கான பிரசாரத்தில் தீவிரம் காட்டவும்......'' — இதைப் படித்ததும் உடல் சிலிர்த்தது அவனுக்கு.

மற்ற விவரங்களையும் படித்து முடித்ததும் தாளை மடித்து உறைக்குள் போட்டு மேஜையில் வைத்துப் பூட்டிவிட்டு மீண்டும் மொட்டை மாடிக்கு வந்தான். அங்கு நல்லதம்பி, தூங்காமல் சிந்தனையில் புரண்டு கொண்டிருந்தான். சிவராமனும் பாயில் படுத்தான். தூக்கம் வரவில்லை. ரஷ்யப் பயணம் பற்றிய நினைவினால் ஏற்பட்ட உற்சாகமும், விஜயவாடாச் செய்தியினால் ஏற்பட்ட அதிர்ச்சியும் அவனை வெகு நேரம் தூங்க விடவில்லை.

மறு நாள் காலையில் சூரியனின் வெப்பம் உடலில் பட்டபிறகுதான் இருவரும் தூக்கத்திலிருந்து விழித்தார்கள். நல்லதம்பி, 'பாரத மணி'ப் பத்திரிகையை வாங்கிக் கொண்டு வந்தான். அதில் முந்தின நாள் நடந்த சம்பவங்களைப் பற்றிய படங்கள் எதுவுமே பிரசுரமாகாததைக் கண்டு திகைத்தான்.

''படங்களைப் போடவில்லை....முரளி பயந்திருப்பான்'' என்றான் நல்லதம்பி.

''முரளியைப் பற்றி உனக்குத் தெரியாது. இதற்கெல்லாம் அவன் பயப்பட மாட்டான். பார்க்கத்தான் ஆள் அப்படிச் சாதுவாகத் தோன்றுகிறானே தவிர, வைரம் பாய்ந்த மனத்தைப் படைத்தவன். அவன் ஒன்றைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், பிறகு எந்தச் சக்தியும் அவனை மாற்ற முடியாது. நான் நேரில் போய்க் கேட்டதற்காக என்னை மதித்துத்தான் படங்களைப் பிரசுரிக்கவில்லையே தவிர, என்னுடைய பயமுறுத்தலுக்குப் பணிந்து அல்ல'' என்றான் சிவராமன்.

''அவனை நம் கட்சிக்கு எப்படியும் இழுத்து விடேன். அவன் நம் பக்கம் இருந்தால் 'பாரதமணி'ப் பத்திரிகையின் பலமும் நமக்குக் கிடைக்கும்.''

''முடியாத காரியம். கம்யூனிஸக் கொள்கையே மனிதனின் அடிப்படை இயல்புக்கு முரணானது என்னும் முடிவுக்கு வந்தவனை நம்முடைய பாதையில் எப்படித் திருப்ப முடியும்? அவனிடம் போய் வாதாடினால் நமக்குத்தான் ஆபத்து. தர்க்கம் செய்து நம்மை முட்டாளாக்கி விடுவான்.''

'' 'பாரதமணி' எத்தனை நாட்கள் ஓடும்.... 'காலைக் குரல்' வந்த பிறகு,



நவம்பர் 2ந் தேதி தந்தி நாளிதழைக் கையில் எடுத்தேன். முதல் பக்கத்தில்:

- □ போலந்து மந்திரியும் வேறு இருவரும் கராச்சியில் கொல்லப்பட்டனர்;
- □ பிரெஞ்சு நைட் கிளப்பில் 142 பேர் தீயில் பொசுங்கி மாண்டனர்;
- □ கல்கத்தாவில் போலீஸ் சுட்டதில் ஏழு பேர் மரணம்;
- □ பெரம்பூர் ரயில் விபத்தில் மடிந்தவர் எண்ணிக்கை பதினாறாக உயர்கிறது;
- □ கள்ளைக் குடித்துவிட்டு இருவர் ஈரோடுக்கு அருகே ஒரு கிராமத்தில் இறந்தனர்....

என்று தலைப்புக்கள்.

இந்தச் செய்திகளைப் படித்துவிட்டு மனச் சோர்வுடன் மத்தியில் தலையங்கம் உள்ள பகுதிக்குப் போனேன். அங்கு:

- □ நியூகினியில் நிலநடுக்கம்: நால்வர் மடிந்தனர்;
- □ தவறான மருந்தைச் சாப்பிட்டதில் மாண்ட குழந்தைகளின் எண்ணிக்கை பதின்மூன்றாக உயர்கிறது;
- □ கோட்டயத்தில் வெடி விபத்து காரணமாய் இருவர் இறந்தனர்.....

என்று ஒரே பக்கத்தில் தலைப்புகள் தீட்டப் பட்டன.

நான் உயிரோடு இருக்கிறேனா என்றே எனக்குச் சந்தேகமாகி விட்டது! - குமரன்

இது தளர ஆரம்பித்து விட்டது. சீக்கிரத்திலேயே படுத்து விடும்'' என்றான் நல்ல தம்பி, அலட்சியமாக.

''அவ்வளவு இலகுவில் 'பாரத மணி' கீழே விழ முரளி விட்டுவிட மாட்டான். 'பாரத மணி'க்கு அப்படி ஒரு நிலை 'காலக் குர'லால் ஏற்படுமானால், அது முரளிக்கோ, அவனுடைய பத்திரிகைக்கோ இழுக்கல்ல. அதற்காகத் தமிழ் நாடுதான் வெட்கப் பட வேண்டும்.''

''நம்முடைய கட்சியைப் பழித்தே எழுதும் பத்திரிகை அது. அதை மறந்து விட்டாயே!'' என்றான் நல்லதம்பி, சிரித்துக் கொண்டு.

''இருக்கட்டுமே...அப்படி இருந்தாலும் பத்திரிகை தர்மத்தையும், பத்திரிகை சுதந்திரத்தையும் காப்பதில் முன்னணியில் நிற்கும் தரம் வாய்ந்த பத்திரிகை. தமிழ்நாடு தரமுள்ளதாக இருந்தால் 'பாரதமணி'யைச் சாக விடக்கூடாது'' என்றான் சிவராமன் ஆவேசத்துடன்.

நல்லதம்பி வியப்புடன் அவனைப் பார்த்தான்.

''அடேயப்பா, 'பாரதமணி'க்கு நீதான் முதலாளி மாதிரி பேசுகிறாய்?'' என்றான்.

''பத்திரிகையின் விற்பனையைக்கூடக் கருதாது, படங்களைப் பிரசுரிக்காமல் விட்டிருக்கிறானே! முரளியின் பெருந்தன்மைக்கு இது ஒன்றே போதுமே'' என்றான் சிவராமன் பெருமையுடன்.

'' என்ன இருந்தாலும், 'பாரத மணி'யும் முரளியும் நமக்கு எதிரிகள். தலைவர் ஐயாவுக்கு 'பாரத மணி' மீது அளவுகடந்த கோபம். நினைவிருக்கட்டும்'' என்றான் நல்லதம்பி, மிரட்டுகிற மாதிரி.

அப்போது போன் மணி அடிக்கவே சிவராமன், போனை எடுத்தான். விஜயவாடா கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்திலிருந்து டிரங்கால் வந்திருந்தது.

விஜயவாடாவில் முந்தின நாள் பெரிய ஆர்ப்பாட்டங்களும், கடை மறியல்களும் வெற்றிகரமாக நடந்தன என்றும், ஐந்து பஸ்கள் தீக்கிரையாயின என்றும் தகவல் வந்தது. பேசி முடித்ததும், பரபரப்புடன் 'பாரத மணி'ப் பத்திரிகையை நல்லதம்பியிடமிருந்து வாங்கிப் பிரித்தான். இரண்டாவது பக்கத்தில் பெரிய தலைப்பில் விஜயவாடாவில் நடந்த கிளர்ச்சி பற்றிய செய்திகள் அச்சாகியிருந்தன. செய்திக்கு இடது பக்கத்திலேயே அது பற்றிய தலையங்கமும் அச்சாகியிருந்தது. சிவராமன் அதை இரைந்து படித்தான்:

''.....கொலையாளி யார் என்று தெரிவதற்குள்ளாகவே ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? கொலையாளி யார் என்பது தெரிந்த பிறகு, அதுவும் கொலையாளி, முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் என்று திட்டவட்டமாகத் தெரிந்த பிறகு இப்படி ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தால், மக்களுக்குத் தோழர்கள் மீது பரிவு ஏற்படலாம். கொலை நடந்த அன்றே கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் இப்படி ஓர் ஆர்ப்பாட்டம் செய்வதை விட்டு விட்டு, யோசித்துப் பார்த்து மறு நாள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதும் குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் பணியில் தீவிரமாகப் போலீஸார் இறங்கியிருக்கும் போது இப்படி ஓர் ஆர்ப்பாட்டத்தை முந்திக் கொண்டு தோழர்கள் செய்ததும், சிந்தனைக்குரிய விஷயங்களாகும். திருடனே கூட்டத்தோடு கூட்டமாகத் திருடனைத் தேடும் கதையாக இது இருந்துவிடக்

துரிதமாக.
ஜாக்கிரதையாக.
நிச்சயமாக.


எப்படி?

இப்போது இடையில் சிறிதாவது ஒரு ஊரிலிருந்து மற்றொரு நகரத்திற்குபோக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்விஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர். ஏனெனில் இந்முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாக கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்விஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.
இந்த சர்விஸை வியாபாரிகள் எல்லாம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்கள் ஜாக்கிரதையாக நடங்கின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் முதலைத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்த சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- இவர்களின் டிரைவர்கள், உடலியலையும், உளவியலையும் பொறுத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப்பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை சுச்சீத ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் டிப்போ, மற்றும் பராமரிப்புக்கான வசதி கொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

இக்காரணங்களால் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்களிடை ஸதர்ன்ரோட்வேஸ் பெருமதிப்பை பெற்றிருக்கிறது.




TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ்
ஸ்தாபனம்)
மதுரை



ஆஹா...என்ன இன்பம்!
லக்மே
லேவெண்டர்
பியூடி டால்க்
Lakmé
LAVENDER BEAUTY TALC
உங்களுக்குப் புதியது! லேவெண்டரிலே மிகச் சிறந்தது!
அன்றலர்ந்த மலர்களின் நறுமணத்தை லக்மே லேவெண்டரில் புகுத்தியிருக்க வேண்டும்! அதனால்தான் அத்தனை கோடி இன்பம், அதனை மேனியிலே தூவும்போது! அது உங்கள் மேனியை பட்டுப்போலக்கப் பராமரிக்கிறது. அதன் இதமான நறுமணம் நாள்முழுதும் உங்கள் மேனியுடன் உறவாடு, கிறது: முகப் பொலிவைப் பலமடங்கு பெருக்குகிறது!
ASP/L-81



பழைய டெலிபோன் புதிய செய்தி

உங்கள் மகனோ அல்லது வேண்டியவனோ நாக்ஸலைட்டுகளோடு சேர்ந்து கெட்டுப் போகிறான் என்றால் 44-1931 என்ற நம்பருக்கு டெலிபோன் செய்யுங்கள். அவனை நல்வழிப்படுத்த உதவியும் ஆலோசனையும் வழங்கப்படும். இப்படி ஒரு விளம்பரத்தைக் கல்கத்தா போலீஸ் கமிஷனர் கல்கத்தா பேப்பர்களில் வெளியிட்டிருக்கிறார்.

படம்: டெலிபோன் - 1882ம் வருட மாடல்.

— பாலி

கூடாது... ஆர்ப்பாட்டத்திலும், பிரசாரக் கூச்சலிலும் உண்மை மூடிப்போய் விடும் என்பது கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கை. மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.''

நல்லதம்பி, இந்தச் சமயத்தில் கோபத்துடன் குறுக்கிட்டுப் பேசினான்:

''முரளியின் பெருந்தன்மையைப் பற்றிப் பேசினாயே.... எப்படி எழுதியிருக்கிறான் பார்த்தாயா...? திருடனைத் திருடன் தேடும் கதையாமே... இவனையெல்லாம் வளர விட்டால்....''

''பத்திரிகைச் சுதந்திரம் இருக்கும்போது எப்படி இதைத் தடுப்பது?''

''ரஷ்யாவையும், சீனாவையும்போல் இந்தப் பத்திரிகைக்காரர்களையும், எழுத்தாளர்களையும் பாக்குவெட்டிக்கு இடையில் வைத்து நெருக்குவதுமாதிரி நெருக்கினால்தான் சரிப்படும்... சுதந்திரமாம் சுதந்திரம்....'' நல்லதம்பி பொருமினான். பிறகு சொன்னான்:

'' 'காலைக் குரலை'க் கொண்டே இவனுக்குக் குழி தோண்டி விடுகிறேன். இந்த முரளியை ஓட்டாண்டியாக்குகிறேனா இல்லையா, பார்!''

''அவசரப்பட்டு எதையாவது செய்து விடாதே. முரளியிடம் நான் சொல்லிப் பார்க்கிறேன்.''

''அவன் விஷயத்தில் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உன்னுடைய நண்பன் என்பதற்காக அவன் விஷயத்தில் நீ கடுமையாக இல்லையென்றால் பிறகு, கட்சிக்கு நீ பதில் சொல்லியாக வேண்டியிருக்கும். சிவராமன்! இந்த விஷயத்தில் தலைவர் ஐயா ரொம்பக் கடுமையாக இருப்பார்'' என்று எச்சரித்துவிட்டுக் 'காலைக்குரல்' அதிபரான ஆதிமூலத்துடன் பேசுவதற்காக போனை எடுத்தான் நல்லதம்பி.

* * *

''இந்திய எல்லையில் லடாக் பகுதிக்குக் குறுக்கே, கார்டோக் என்னும் இடத்தையும், யார்க் கண்ட் என்னும் இடத்தையும் இணைக்கும் ஒரு பாதையைச் சீனர்கள் அமைத்திருக்கிறார்கள். இந்தப் பாதை ஓராண்டுக்கு மேலாக இருந்து வருகிறது.

''அந்தப் பகுதியை மேற்பார்வை இடச் சென்ற நம்முடைய காவல் குழுவினரைச் செஞ்சீனர்கள் தடுத்துச் சிறைப்படுத்தி விட்டுப் பின், விடுதலை செய்து விட்டார்கள். இதோடு எல்லாம் முடிந்து விட்டதா? அந்த ரோடு இன்னும் அப்படியேதான் இருக்கிறது. சீன ஆக்கிரமிப்பும் அப்படியேதான் இருக்கிறது. அது பற்றி நாம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி வாளாவிருப்பது செஞ்சீனர்கள் தெம்பு பெற்று மேலும் இந்திய எல்லைக்குள் ஆக்கிரமிப்பு நடத்தத் தூண்டுகோலாய் அமையும்.

''இந்த விஷயம் பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டது. ஜனநாயகத்தில் மக்களுக்கு உள்ள உரிமைகள் இவ்விதம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.''

டில்லியிலிருந்து சுவாமிநாதன் அனுப்பியிருந்த தகவல்களின் அடிப்படையில் முரளி மேற்சொன்னவித

மாகப் 'பாரதமணி'ப் பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதியிருந்தான்.

இதனால் ஒரு விபரீதமான பின்விளைவு ஏற்பட்டது. அரசாங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் பல நூலகங்கள், வாசக சாலைகள், சங்கங்கள் பலவற்றில் 'பாரத மணி'யை வாங்குவதை நிறுத்தி விட்டார்கள்! மக்களை உணர்ச்சிவசப்படுத்தக்கூடிய ஒரு முக்கியமான விஷயத்தில் தீவிரமாக அரசாங்கத்தைத் தாக்கத் துணிந்ததற்காகச் சுற்றி வளைத்து இப்படி ஓர் எச்சரிக்கை 'பாரத மணி'க்குக் கிடைத்தது !

இது முரளியை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியது. ஏற்கனவே விற்பனையில் வீழ்ச்சி யடைந்திருக்கும் போது இப்படி ஒரு தாக்குதல் ஏற்பட்டதால் மனம் சோர்வுற்றான். பத்திரிகையின் விற்பனையை உயர்த்துவதற்கான வழியைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியவாறு நாற்காலியில் சாய்ந்து கிடந்தான். கவலையால் முகம் சோம்பி யிருந்தது. அப்போது சிவராமன் மிகுந்த உற்சாகத்துடன் உள்ளே வந்தான்.

''முரளி.... ரொம்ப நன்றி.... படங்களைப் பிரசுரிக்காமல் விட்டாயே'' என்று சொல்லிக் கொண்டே எதிரே யிருந்த நாற்காலியில் அமர்ந்தான். பிறகு சொன்னான்:

''நான் ரஷ்யாவுக்குப் போக வேண்டியிருக்கும்.... உலக கம்யூனிஸ்ட் மகாநாட்டில் கலந்து கொள்ளவேண்டியிருக்கும்....''

''ஓ....! நீ கட்டாயம் போக வேண்டியதுதான். ஆனால் ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள். ரஷ்ய அரசாங்கம் காட்டும் இடங்களை மட்டும் பார்த்து விட்டுத் திரும்பி விடாதே. அங்குள்ள தொழிலாளர்களையும், விவசாயிகளையும் சந்தித்துப் பேசு. அப்போதுதான் உனக்குத் தெளிவு ஏற்படும்'' என்றான் முரளி.

''ஏன், அவர்கள் ரஷ்ய கம்யூனிஸத்துக்கு எதிராகப் பேசுவார்கள் என்று நினைக்கிறாயா ?''

''ஊஹூம்... அப்படிப் பேச அவர்களுக்கு அந்த நாட்டில் உரிமையே கிடையாதே. அவர்களைச் சந்தித்தால், அவர்களுடைய முகத்திலும், பார்வையிலும், நீ ஏதாவது உண்மையை உணரலாம். மனிதனின் சுதந்திரம் எந்த அளவுக்கு ரஷ்ய நாட்டில் இருக்கிறது என்பதை நீ புரிந்து கொள்ளலாம்.... ஆனால், இதைவிடச் சீனாவுக்குச் சென்றால் இன்னும் நல்லது.''

''திரும்பும்போது ஒரு வேளை அந்த வழியாக வந்தாலும் வருவேன்.''

''கட்டாயம் அங்கு போய்விட்டு வா. திரும்பிய பிறகாவது நீ திருந்துகிறாயா, பார்ப்போம்'' என்றான் முரளி.

''இன்னும் தீவிரமாகத்தான் இருப்பேன்'' என்றான் சிவராமன், மிகுந்த உற்சாகத்துடன்.

''போகிற இடத்தில் உன் மூளையை வைத்து விட்டு வந்து விடாமல் இருந்தால் சரிதான். 'பிரெயின் வாஷ்' எல்லாம் அந்த நாடுகளில்தான் உண்டு. ஜாக்கிரதையாகப் போய் விட்டுத் திரும்பு.''

'' உன்னிடம் இன்னொரு முக்கிய விஷயமாகப் பேச வந்தேன்.... 'காலைக் குரல்' ஆதிமூலம் விஷயத்தில் ஜாக்கிரதையாக இரு'' என்றான் சிவராமன், தணிந்த குரலில்.

''ஏன்....? எனக்கும் அவருக்கும் தொடர்பே கிடையாது'' என்றான் முரளி.

'' 'பாரதமணி'யைக் கவிழ்க்க ஆதிமூலம் சூழ்ச்சி செய்யலாம். விழிப்போடு இரு.''

''எந்தவிதத்தில் கவிழ்க்க முடியும் ? 'காலைக் குரல்' வந்த பிறகு, எனக்கு விற்பனை குறைந்திருப்பது உண்மைதான். ஆனால், எனக்கும் வாசகர்கள் உண்டு'' என்றான் முரளி, மிகுந்த நம்பிக்கையுடன்.

'' எப்படியோ உன் பத்திரிகைக்கு இடைஞ்சல் செய்யலாம். அதற்கான சதி நடக்கிறது என்பது மட்டும் தெரியும். ஆனால் எந்த விதத்தில் உன் பத்திரிகையைக் கவிழ்ப்பான் என்பது தெரியாது.''

'' 'பாரதமணி' மீது அவருக்கு என்ன கோபம் ?''

'' நீ அடிக்கடி பத்திரிகை தர்மம் பற்றியும், தரம் பற்றியும், கடமை பற்றியும் எழுதுவது 'காலைக் குரலை'த் தாக்குவது போல் இருக்கிறதாம். 'பாரதமணி'யை ஒழித்து விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான்.''

''உனக்கு எப்படித் தெரியும் ?'' — பரபரப்புடன் முரளி கேட்டான்.

''சதி நடக்கிறது என்பது மட்டும் தெரியும். மற்ற விவரங்கள் எதுவும் கேட்காதே !''

'' ஒரு நல்ல பத்திரிகையை அழிந்து போகும்படி மக்கள் விட்டுவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

''தரத்தைப் பற்றி மக்கள் அதிகம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. முழுக்க முழுக்க மக்களையே நம்பி நீ இருக்க முடியாது; இருக்கவும் கூடாது'' என்றான் சிவராமன். (தொடரும்)

அலுவலகத்தில் 'லெட்ஜர்'களின் மேல் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். பிற்பகல் மூன்று மணிக்கும் அந்த எழுத்தர் தொழிலுக்கும் இடையில் என்னதான் சுமுகமான உறவு இருக்குமோ தெரியவில்லை, கணக்குகளினிடையில் இலக்கங்கள் அந்தரத்தில் ஊசலாடச் சுகமான உறக்கம்தான் வருகிறது!

பக்கத்து 'ஸீட்'டிலிருந்த செண்பகராமன் இதைப் பற்றி என்னிடம் அடிக்கடி கூறுவான்: ''உங்கள் கதைகளில் எதை யெதையோ வருணிக்கிறீர்களே சார், நம்முடைய இந்தக் கொஞ்ச நேர மதிய உறக்கத்தைப் பற்றி உயிருள்ள ஒரு வருணனையை எழுதுங்களேன்!''

மத்தியான உறக்கத்தைப் பற்றிக் கதை எழுதவா?

பெருமூச்செறிந்தேன் நான். வர வர அலுவலக வேலைகள் அதிகமாகிக் கொண்டே வந்த நிலையிலேயே இருந்ததால் இதர எத்தனையோ வேலைகளை — இந்தக் கதை எழுதும் வேலை உட்பட — பாக்கி வைத்துக் கொண்டுதான் இருந்தேன்.

மனத்தில் சஞ்சலம், ஏக்கம், கோபம் எல்லாம் இருந்தன. ஆனாலும் ரொம்ப ரொம்ப நாட்களாகத்தான் கதை எழுதாமல் இருக்கிறேன்.

எதைப் பற்றி எழுதுவது என்ற மனச் சர்ச்சைக்கு இடமில்லை. பரந்த உலகில், விரிந்த சமுதாயத்தில், இலட்சம் இலட்சமான மனித உணர்வுகளில், நிகழும் ரக ரகமான உணர்வுகளில் எதைப் பற்றித்தான் எழுத முடியாது?

''எழுத நேரம் கிடைக்கவில்லை.'' இதைச் சமாதானமாக எனக்குள்ளே,



காற்றின் மௌனம்

க. பஞ்சாபகேசன்

மற்றவருக்கோ சொல்லிக் கொள்ள என் மனம் இடம் தராது. கதை எழுதும் பொன்னான காலத்துக்கா நேரம் கிடைக்காது ?...

லெட்ஜர்கள், அவற்றின் நடுவில் காணப்பட்ட பல்வேறு கணக்குகள் —

"டெபிட்டுகள்" —

"கிரெடிட்டுகள்" —

"பாலன்ஸ் ஷீட்டுகள்" —

இவற்றின் நடுவே எனது கவனம் திருப்பப்பட்டிருக்கிறது. எழுத்தர் தொழிலில் எழுத்தாள மனத்தைச் சற்றே அடக்கிக் கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டு வந்தபோது —

இரு பக்கக் கூட்டல் தொகைகளும் 'டாலி' ஆகவில்லை ; அதாவது சமமாக இணையவில்லை. டெபிட்டைவிடக் கிரெடிட் அதிகமாக இருந்தது ! இதில் இலாக்காவில் கூட்டல் மன்னன் என்று எனக்குப் பெயர் வேறு !

லெட்ஜரை வெறுப்பாய் நகர்த்தினேன்.

ஸ்டெனோ வீணு என் எதிரில் வந்து நின்றாள். அவள் கையில் சுருக்கெழுத்து நோட்டுப் புத்தகமும் பென்சிலும் இருந்தன. நேரே மானேஜர் அறையிலிருந்து 'டிக்டேஷன்' எடுத்துக்கொண்டு வருகிறாள் போலிருக்கிறது.

"சார் ! எனக்கு ஒரு 'ஐடியா' தோன்றியிருக்கிறது. உங்களிடம் சொன்னால் அழகானதொரு கதையாக எழுதுவீர்களோ ?" என்றாள் வீணு.

நான் சற்றே உயிர்த்தெழுந்தேன்.

"சொல்லுங்கள், வீணு."

"சொன்னால் நிச்சயம் கதை எழுதுவீர்களா?"

"..........ம்."

அடுத்த சில நிமிடங்களில் வீணு கூறிய அந்த 'ஐடியா' இதுதான்—

எனது சொற்களால் அதை அப்படியே 'ராவாக' — அதாவது ஸ்பஷ்டமாகச் சொல்கிறேன் :

'வாத்தியங்களை வைத்து விற்பனை செய்யும் ஒரு வியாபாரி இருக்கிறார். தம்புரா, வீணை, ஆர்மோனியம், சீவாளி என்று அவருடைய வாத்தியக் கடையில் எத்தனையோ வாத்தியங்களும் இசைக் கருவிகளும் உள்ளன. அவருடைய மனத்தில் வெறும் வியாபார நோக்குத்தான் இருக்குமா? அல்லது அந்தக் கலைப் பொருள்களின் ஊடே உயிர் ஸ்வரமாக இயங்கும் தெய்விக நாதத்தைப் பற்றியும் அவர் சிந்திப்பாரா ? யாராவது ஓர் ஏழை வைணிக வித்துவான் ஆர்வத்துடன் வந்து கேட்கும் போது தம் கடையில் உள்ள விலை மதிப்பற்ற ஒரு வீணையை மிகக் குறைந்த விலைக்குத் தர அவர் முன்வருவாரா ? ஆனால் அதே சமயம் மதிப்புள்ள பெரிய காரில் கடை வாயிலில் வந்து இறங்கும் ஒரு கனவான் தமது பெண்ணுக்குப் பொழுதுபோக்காக வீணை சிட்சை செய்து வைப்பதற்காக என்ன விலை கொடுத்தாலும் வாங்கத் தயாராக இருக்கையில் அதை அவருக்குக் கொடுக்க இசைவாரா ?'

தனது எண்ணத்தைச் சொல்லி முடித்துவிட்டு வீணு.."....இப்படி ஒரு கதை எழுதிப் பாருங்களேன் சார்!" என்றாள்.

நான் மிகுந்த ஆச்சரியத்துடன் வீணுவைப் பார்த்தேன்.

நாள் முழுவதும் சுருக்கெழுத்தும் நெட்டெழுத்துமாக இந்த இருநூறு ரூபாய்ச் சம்பளத்தில் உழன்று கொண்டு வருபவளின் மனத்தில் இப்படிப்பட்ட மின்னலான ஓர் எண்ணமா ?

"வீணு ! மார்வலெஸ்!" என்றேன்.

"நிஜமாகவா சார் ?"

"எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது, வீணு.... தி ஐடியா இஸ் சம்திங் வெரி ஒரிஜினல் ! அற்புதமான, நிதரிசனமான உண்மை படைத்துள்ள கற்பனை !"

வீணு சற்றே தலை குனிந்தாள். அவள் குரல் சற்று மெதுவான சுருதியில் கேட்டது.

"சார் ! இப்படி என்னிடம் எத்தனையோ கருத்துக்கள் இருக்கின்றன. ஒரோரு சமயம் நினைத்துக் கொள்வேன், இப்படி வெறும் எண்ணங்களுடனேயே எல்லாம் போய்விடுகின்றனவே என்று. நீங்கள்கூட உங்களுடைய ஒரு கதையில், 'எண்ணங்களை உடனடியாக எழுத்தாக நான் மாற்றாவிட்டால் அவை எனக்குச் சொப்பனவஸ்துக்கள் ஆகிவிடும்' என்று சொல்லி யிருக்கிறீர்களே...." என்று வீணு கூறவும் —

நான் விதிர் விதிர்த்தேன். 'தேடிச் சோறு நிதந்தின்று, பல சின்னஞ் சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்பம் மிக உழன்று, பிறர் வாடப் பல செயல்கள் செய்யும்' அந்த அலுவலகத்தின் இயந்திர மயமான சூழலில் இப்படியும் இலக்கிய அறிவு படைத்த ஒரு பொக்கிஷமா !

அன்று மாலை அலுவலகத்திலிருந்து புறப்பட்டபோது வீணுவும் நானும் சேர்ந்தே புறப்பட்டோம்.

"கதைகளைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் உங்களிடம் பேசுவதில் எனக்குப் பயமாக இருந்ததால்தான் சார் இது வரையில் பேசவில்லை."

"என்ன பயம்? அதுதானே ஓர் எழுத்தாளனுக்கு இன்பம் ?"

"என்றைக்குமே எங்களிடமிருந்து சற்று எட்ட நின்று கொண்டு, எங்களைப் பார்த்துக் கொண்டுதானே நீங்கள் எழுதுகிறீர்கள் ?"

நான் சிரித்தேன்.

நாங்கள் பஸ் ஸ்டாண்டுக்கு வந்துவிட்டோம். முதலில் வீணுவின் பஸ் வந்தது.

அவள் சிரித்துக் கொண்டே, "அப்படியானால் இரண்டு மூன்று நாட்களுக்குள் நான் சொன்ன கருத்து ஒரு கதையாக உருவாகிவிடும். இல்லையா?" என்று கேட்டபடியே பஸ் ஏறினாள்.

வீணு எங்கள் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்து இரண்டு வருடங்களாகப் போகிறது. ஆனால் அன்றுதான் அவளைப் புரிந்து கொண்டாற் போலிருந்தது எனக்கு. என் வீட்டை அடைந்தேன்.

இரட்டைக் குழந்தைகளான வேணுவும் நாதனும் ஆளுக்கொரு மடியாக என் மேல் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு வயதுக் குழந்தைகள். இரண்டுக்கும் தாயைவிடத் தந்தையிடம் பாசம் அதிகம்.

என் மனைவி விமலா எதிரே வந்து நின்றாள். "இரண்டும் சண்டை போட இன்று தொடங்கியிருக்கின்றன" என்றாள் விமலா.

பாதுகாப்பே குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய சிறந்த பரிசு

யூனிட் ட்ரஸ்டின்

குழந்தைகள் பரிசுத் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்



குழந்தைகளுக்கென வளர்ந்து பயன் தரும் பரிசு

யூனிட் ட்ரஸ்டின் குழந்தைகள் பரிசுத் திட்டம் மைனர் குழந்தைகளுக்கு மூலதனம் சேமிக்க வசதி தரும் திட்டம். முதலில் ஐம்பது யூனிட்டிற்குக் குறையாமல் வாங்க வேண்டும். இவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய், மேற்கொண்டு யூனிட்டுகளில் முதலீடு செய்யப்படும். மைனர் 21 வயதடைந்தவுடன் யூனிட்டுகளில் சேமிக்கப்பட்ட மூலதனம், அவருடைய மேற்படிப்பிற்கு அல்லது ஏதாவது தொழிலீடுபடுத்த உதவும். நவீனமான இத்திட்டம் குழந்தைகளின் பயனுக்கெனவே ஏற்படுத்தப்பட்டது.

> குழந்தைகள் பரிசுத் திட்டத்தைப் பற்றித் தெரியுமா?

யூனிட்டுகள்: நம்பகமான முதலீடு

இத்திட்டத்தைப் பற்றி மேற்கொண்டு விவரங்களறிய கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதுங்கள்:

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

பம்பாய் • கல்கத்தா • தில்லி • சென்னை

70/438

க்ளாக்ஸோ மில்க் ஃபுட் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்கிறது





உங்கள் செல்வமும் ஒரு க்ளாக்ஸோ குழந்தை தானே?

குழந்தையின் ஆரம்ப வாழ்வை ஆரோக்கியமாகத் துவக்குகிறது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்; காரணம், குழந்தைக்கு ஊட்டமளிப்பதற்கான எல்லாச் சத்துக்களையும் கொண்டது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்... அவனது எலும்புகளை உறுதியாக்கி, தசைகளையும் இரத்தத்தையும் வளர்க்கிறது அது. இந்தியாவில் முதன் முதலாகக் குழந்தைகளுக்கான பாலுணவைத் தயாரித்தவர்கள் அளிப்பது—க்ளாக்ஸோ மில்க் ஃபுட்

Unit-100 Tam

"அப்படியா....?"

"இதில் ஒரு சந்தோஷமா உங்களுக்கு...? எதிர் வீட்டிலிருந்து ஒரு லட்டு வந்தது. இவனும் முழுசாக வேண்டும் என்கிறான், அவனும் முழுசாக வேண்டும் என்கிறான்...ஒரே கத்தல்! இப்படிக்கூட இரட்டையரைப் பெறுவீர்களா நீங்கள்?"

அப்பா பாதி பாதியாகப் பிட்டுக் கொடுத்த போது வேணுவும் நாதனும் தனிச் சண்டை போடாமல் பெற்றுக் கொண்டு விட்டார்கள். விமலாவைப் பெருமையோடு பார்த்தேன்.

இரவின் அமைதியில் எழுதலாம் என்று எண்ணினேன். என் அறைக்குள் சென்றேன். மேஜை மேல் வெள்ளைக் காகிதம், பேனா, கூஜாவில் தண்ணீர், வெற்றிலைச் சீவல் எல்லாம் தயாராகவே இருந்தன. மேலே மின் விசிறியை இயக்கினேன். இனிச் சுகமாய் எழுதுவதில் தடை என்ன?

விமலா மெதுவாக என் அறைக்குள் வந்து என் எதிரே மேஜையின் மறு பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். வெற்றிலைச் சிவப்பில் விமலாவின் உதடுகள் இன்னும் அழகாய்ச் சிவந்திருந்தன. இந்தச் சிவப்பு உதடுகளாலேயே இவளை நான் திருமணமும் புரிந்து கொண்டிருக்கிறேனோ?

"எழுத்துக்குத் தடையாக வந்திருக்கிறேனோ?"

"இல்லே, விமலா!"

"ரொம்ப நாட்கள் கழித்துக் கதை எழுத உட்கார்ந்திருக்கிறீர்கள்."

"ஆமாம். இப்போதெல்லாம் இராச் சாப்பாடு சாப்பிட்ட உடனேயே, ஒரு களைப்பு

நவம்பர் 14 குழந்தைகள் தினம்



மழலை மேதைகள்!



● இங்கிலாந்து பிரதம மந்திரியாகவிருந்த மெக்காலே பிரபு பதினொரு வயதுச் சிறுவனாக இருந்தபோதே மில்டனின் 'மீண்ட சொர்க்கம்' முழுவதையும் மனப்பாடம் செய்து முடித்துவிட்டார்.

● பௌதிகத்தின் தந்தையாகப் போற்றப்படும் ஸர். ஐஸக்நியூட்டன் எட்டு வயதில் ஒரு காற்றாலையின் மாதிரியையும், மணல் கடிகாரத்தின் மாதிரியையும் செய்தார்.

● புகழ்பெற்ற கவிஞரான அலெக்சாண்டர் போப் ஆறு வயதிலிருந்தே கவிதைகள் எழுத ஆரம்பித்து விட்டார். அவர் பேசுவதே கவிதை மொழியில்தான். அவர் தந்தை இந்தத் தொல்லை பொறுக்க முடியாமல் அடித்து விட்டார். அப்போதும் அவர் அழுது கொண்டே, "Papa Papa pity take, Poem shall I never make" என்றார்.

● டாக்டர் ஜான்ஸனுக்கு அசாத்திய ஞாபகசக்தி. அவருடைய தாதி அவருக்குச் சில பாட்டுக்களைச் சொல்லிக் கொடுத்து விட்டு, "நான் வேலையைக் கவனித்து விட்டு வருகிறேன், அதற்குள் மனப்பாடம் செய்." என்பார். அவர் பத்தடி தூரம் போவதற்குள் ஜான்ஸன் அவரைத் திருப்பியழைத்து அந்தப் பாட்டுக்களை ஒப்பித்துவிடுவார்.

● தாமஸ் ஆல்வா எடிஸனின் மனத்தில் மின்சார விளக்கு, கிராமபோன் பற்றிய தத்துவங்கள் அனைத்தும் பத்து வயதுக்கு முன்பாகவே தோன்றி விட்டன.



● ஆதி சங்கரர் பல அரிய சுலோகங்களைப் பிரவாகமாகப் பொழியும்போது பதினைந்து வயது கூட நிறையாத சிறுவனாகவே இருந்தார்.




● பிரபல இத்தாலிய சிற்பியாகவும் ஓவியராகவும் விளங்கிய லியனார்டோ டாவின்ஸி பல அரிய ஓவியப் படைப்புகளைத் தீட்டிக் குருவை வியக்கச் செய்து பெரும் புகழும் பெற்றபோது அவருக்கு வயது பன்னிரண்டு.

● இந்தியக் கவிக்குயில் சரோஜினி நாயுடு பதினொரு வயதிலிருந்தே அறிஞரும் வியக்கும் வண்ணம் கவிதைகள் எழுத ஆரம்பித்து விட்டார்.

● இன்றைக்கு ரொம்ப ரொம்ப ரொம்பப் பிரபலமாகி விட்ட "எல்விஸ் ப்ரெஸ்லி"க்கு அவருடைய தாயார் பத்து வயதில் ஒரு 'கிடாரை'ப் பரிசளித்தார். அவர் மறுமாதமே அதை ஒரு தனி நிகழ்ச்சியில் வாசித்துப் பிரபலமடைந்து விட்டார்.

● எட்டே வயதுப் பாலகனாயிருந்த பொழுதே மகாகவி ரவீந்திரநாத் டாகூர் பல கவிதைகள் எழுதியுள்ளார். கவரின் அடுத்த பதிதென அவை பிரசுரமாகாமல் இருப்பினும் புள்ளன. ஆனால் பிற்காலத்தில் 'கீதாஞ்சலி' எழுதி நோபல் பரிசு பெற்ற பெருமையை அடைந்தார்.



● ஐந்து - ஆறு வயதில் எல்லாக் குழந்தைகளையும் போல அட்டை வீடு கட்டி விளையாடியவர்தான் விசுவேசுரய்யா. அம் மேதை கட்டிய அணைகள் இன்றும் அவர் பெருமையைக் கூறிக் கொண்டிருக்கவில்லையா?

தொகுப்பு : முரளி

வந்து. மோகனமாய்த் தூக்கமும் வந்துவிடுகிறதே.''

விமலா சிரித்துக்கொண்டே, ''நீங்கள்தான் ஒரு கதையில் சொல்லியிருக்கிறீர்களே: 'புழுக்கத்தில், பசியில், அவசர அவசியத்தின் நிட்சண்யத்தில் கலை பிறக்கிறது' என்று. ஆனால் இந்தச் சுகமான மின் காற்றும், இரண்டு வேளையும் நல்ல ருசிருசியான சாப்பாடும்....'' என்றாள். மேலும் சிரித்தாள்.

''உண்மைதான்...,'' என்றேன்.

''நான் வந்தது வேறு விஷயத்துக்காக. என்னுடைய அந்தப் பழைய ஆர்மோனியத்தை விற்றுவிடுவதாகத் தீர்மானம் செய்து விட்டேன்.''

''விமலா !''.

''ஆமாம். என் அம்மா தன் புக்ககத்துக்கு அந்த ஆர்மோனியத்தைச் சீதனப் பொருளாக எடுத்து வந்தாளாம். முப்பத்தி ஐந்து வருடங்களுக்கும் மேலாகி விட்டது. எத்தனை பழைய காலத்து வாத்தியம்! அதை நான் சீதனப் பொருளாக இங்கே எடுத்து வந்தேன். அதில் நான் இரண்டு ஸ்வரம் வாசிக்கவும், பெண் பார்க்க வந்த நீங்கள் அன்றே மயங்கி விட்டீர்கள்!.... அதை இப்போது முப்பது ரூபாய்க்குக் கேட்கிறார்கள். மேலே கொலுப் பெட்டிக்குள் உறங்கிய அதை எடுத்துத் தூசு தட்டி வைத்திருக்கிறேன். பழைய காலத்து வாத்தியம் இல்லையா? இன்னும் தோரணையாகவே இருக்கிறது. நாதம் குறையவில்லை.''

விமலா பேசிக் கொண்டே போனாள்.

ஆனால் அப்போது என் நெஞ்சின் நெருக்கத்துள் அலுவலகத்தில் வீணு சொன்னதன் எதிரொலி கேட்டது: ''மனதில் வெறும் வியாபார நோக்குத்தான் இருக்குமா? அல்லது கலைப் பொருளின் ஊடே உயிர் ஸ்வரமாக இயங்கும் தெய்விக நாதத்தைப் பற்றிய சிந்தை இருக்குமா?''

நான் விமலாவைக் கேட்டேன்:

''ஆர்மோனியத்தை அவசியம் விற்கத்தான் வேண்டுமா, விமலா?''

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?''

''நமக்கென்று சொந்தமாகி, நம் பரம்பரைச் செல்வமாகிவிட்ட ஒரு பொருள் அது. கொலுப் பெட்டிக்குள் அது உறங்கினாலும், அதனுள்ளே இருக்கும் நாதம் என்றைக்குமே உறங்குவதில்லை. மௌன கதியில், மின்னோட்டம் மாதிரி, அது இயங்கிக் கொண்டு தானே இருக்கும்?''

விமலா மறுபடியும் சிரித்தாள்.

''உங்கள் கதைக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறீர்களா? உங்களையே கேட்கிறேன்: நீங்கள் ஓர் ஆர்மோனியக் கடை வைத்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். ரசிகராக இருந்தால் ஒன்றைக்கூட விற்காமல் நஷ்டப்படுவீர்கள். அப்படித்தானே?''

''தொழிலாக அமைந்து விட்டாலும், கலை என்பது, உண்மையாக ஆசிரயிப்பவனிடத்தில் வளரவே செய்யும்.''



''என்னவோ தெரியலே டாக்டர்! வயிற்றிலே ஒரு புரட்சி!''

''புரட்சியா? சாப்பாட்டுக்கு ஒரு உச்ச வரம்புத் திட்டம் கொண்டு வாருங்கள்!''

''உங்களுக்குப் பிடிக்காவிட்டால் அதை நான் ஏன் விற்கப் போகிறேன்? மறுபடியும் கொலுப் பெட்டியில் அந்த ஆர்மோனியம் மௌன கதியில் கல்பாந்த காலத்துக்கும் இசை பயின்று கொண்டிருக்கட்டுமே?..... இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கேட்டு விட்டு, உங்களுக்கும் உங்கள் சிந்தனைக்கும் குறுக்கே வராமல், நான் நகர்ந்து கொள்கிறேன். அடுத்தவாரம் நம் அருமை 'இரட்டையருக்கு' இரண்டாவது பிறந்த நாள் வருகிறது. அது உங்களுக்கு நினைவிருக்கும். ஆகவே, நாளைச் சாயந்திரம் ஆபீசிலிருந்து சீக்கிரமே வந்து விடுங்கள். குழந்தைகளுக்குப் புதுத் துணிகள் எடுத்து வரக் கடைக்குப் போக வேண்டும்.''

உடனே நானும் எழுந்து விட்டேன்.

''ஏன், எழுதவில்லையா?''

''இல்லை, விமலா! களைப்பாக இருக்கிறது. 'மூட்' இல்லை.''

''நீங்களும் உங்கள் 'மூடும்'....'' என்றாள் விமலா சிரித்துக் கொண்டே.

மறு நாள் அலுவலகத்தில் ஸ்டெனோ வீணு எதிரே வந்து நின்றாள்.

''நான் சொன்ன கருத்தைப் பற்றிக் கொஞ்சம் யோசித்து வைத்திருப்பீர்கள். இல்லையா?'' என்றாள்.

நான் சிரித்தேன்.

''வாத்தியம் கற்பனையில் பிறக்கும் தெய்விகம்; ஸ்வரக் கணக்குகளால் பின்னப்பட்டு, ஒலியின் வடிவாகி, இசை அமைப்பை ஏற்படுத்தித் தருகிறது. அதை அந்த வியாபாரி விற்பதாக எண்ணாமல், விநியோகிக்கிறான் என்று எண்ணிப் பாரேன். ஏதோ அவன் வயிறும் வளர வேண்டும்; அந்த நாத பரம்பரையும் வளர வேண்டும்....''

''நீங்கள் சொல்வதெல்லாம் இருக்கட்டும், சார்! இதைப் பற்றி நீங்கள் கதை எழுதப் போகிறீர்களா, இல்லையா?''

இதற்குள் அதிகாரியின் அறையிலிருந்து ஸ்டெனோவை அழைப்பதற்காக 'பஸ்ஸர்' இரு முறை இயங்கவும் வீணு விரைந்தாள்.

வெகு நாட்களாகக் கதை எழுதவில்லையே என்று ஏங்கிய என் நெஞ்சத்தின், ''எழுத வேண்டும்'' என்ற உள்ளுணர்வுக்கு என் மனைவி விமலாவின் 'பழைய ஆர்மோனியப் பேரம்' தடை போட்டு விட்டதேன்?

என் வீட்டு ஆர்மோனியத்தை நான் விற்க முற்படாதபோது, எதற்காக என் கதையில் அதைச் செய்ய முயல வேண்டும்?

எங்கள் வீட்டு ஆர்மோனியம் கொலுப் பெட்டிக்குள் மௌன இசை பயின்று கொண்டிருந்ததைப் போலவே, வீணு என்னிடம் சொன்ன கருத்தும் என் உள்ளத்துக்குள் அமிழ்ந்து, கலையின் தெய்விகத் தன்மையை எனக்கு அடிக்கடி உணர்த்திக் கொண்டிருந்தது!

வாயிலில் நிழலாடியது. நின்று கொண்டிருந்தவரைக் கண்டதும் சில விநாடிகளுக்கு மூளை செயலிழந்தது. மறுபடியும் சூடு பிடித்து விஷயம் மனத்துள் எட்டியபோது கண்கள் பச்சாத்தாபத்தில் பொங்கிவிட்டன. கதவடியில் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தார். கையில் ஒரு கித்தான் பை. நீர்க் காவியேறிய நாலுமுழ வேஷ்டியும், முக்கால் கை சட்டையுமாக. இத்தனை வருடங்களுக்குப் பிறகும், 'நான்தான், நான்தான்' என்று அடையாளம் காட்டுகிற மேல்தூக்கிய பார்வை. வெகுநாட்களுக்குப் பிறகு அன்றுதான் க்ஷவரம் செய்து கொண்டாற் போல் முகம் 'ஜிவு, ஜிவு' என்றிருந்தது.

இவர் இங்கே எப்படி, எதற்காக வந்தார் என்று நியாயமான கேள்விகள் மனத்தினுள் குமைந்து கொண்டிருந்தன. அவர் மெல்லிய குரலில், ''இங்கே செந்தில்நாத முதலியார்னு......'' என்று தயங்கித் தயங்கி வார்த்தைகளை வெளிக் கொணர்ந்து கொண்டிருந்தார். செந்தில்நாதன் அவரைக் கும்பிட்டு, ''நான்தான் சார், செந்தில், தெரியலியா?'' என்று கேட்டு, அவர் முகம் மலர்ந்ததை இரசித்தவராக, ''வாங்க, வாங்க, உள்ளே வாங்க'' என்று அவரை வரவேற்றார்.

படிகள்



சார் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தார். நான்கடி உள்ளே வந்தவர் திடுமென்று நினைப்பு வந்தவராகத் திரும்பிக் கதவண்டை சென்று, உழைத்து உழைத்துத் தேய்ந்தும் கிழிந்துமிருந்த தம் தோல் செருப்புக்களைக் கழற்றினார். ''இருக்கட்டுமே, சார், அதனாலென்ன?'' என்று செந்தில்நாதன் கூறியது காதில் விழுந்ததும், 'கழற்றுவதா, வேண்டாமா' என ஒரு கணம் தயங்கி, 'கழற்றி விடுவோம்' என்ற முடிவுக்கு வந்து, செருப்புகளை ஓர் ஓரமாகத் தள்ளிவிட்டு வந்தார்.

மாடிப்படியருகே நின்று கொண்டிருந்த வேலைக்காரனிடம், ''அம்மாவைக் கூப்பிடு'' என்று கூறிவிட்டு, சாருக்கு வழிகாட்டி வரவேற்பறைக்கு அழைத்துச் சென்றார். அவரை நுரை மெத்தை சோபாவில் அமரச் சொன்னார். சார் சடப்பு கூசியவராகக் கூனிக் குறுகிக் கொண்டு சோபாவின் விளிம்பில் அமர்ந்தார். தம் கையிலிருந்த பையைக் கீழே வைத்தால் தரையில் விரித்திருந்த கம்பளம் அழுக்காகி விடுமோ என்று பயந்தே அவர் பையைக் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பதைப் போலிருந்தது.

'செந்தில் நல்ல வசதியாத்தான் இருக்கான். மாசம் பத்து இருநூறு முந்நூறு வரும்படி இருக்கும் போலத்தான் இருக்கு' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டார் சார். அவர் முப்பத்தொன்பது ரூபாய் மாதச் சம்பளமாக அந்த நாளில் வாங்கிக் கொண்டிருந்தவர். அந்தப் பரந்து விரிந்திருந்த வரவேற்பறையில் வைக்கப்பட்டிருந்த பல பொருட்கள் என்ன, அவற்றின் அவசியம் என்ன என்றுகூட அவரால் ஊகிக்க முடியவில்லை.

செந்தில்நாதன் சாரையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்க்கப் பார்க்க மனத்தை என்னவோ செய்தது. அவர் சிறு குழந்தை போல் ஒவ்வொன்றையும் பார்ப்பதைக் காண நெஞ்சு இளகியது.

நாற்பது வருடங்களுக்கு முன்பு இவர் எப்படியிருந்தார்! இவர் முன்னால் கையைக் கட்டிக் கொண்டு, இவர் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் நடுங்கிக் கொண்டு நின்றிருப்பேன். இவர் கையில் வைத்திருக்கும் பிரம்பு, ஒரு பெரிய மரத்தடியாகக் காட்சியளிக்கும். 'ஓரோம்போது ஒம்போது; ஈரோம்போது பதினெட்டு; மூவோம்போது இருபத்தேளு..' என்று வாய்ப்பாடு சொல்லும்போது அந்தப் பிரம்பின் நினைப்பு வந்து நாவை வறளச் செய்யும். 'மூவோம்போது இருபத்தேளா, முப்பத்தேளா' என்று சந்தேகம் வரும். சட்டென்று நிறுத்திச் சாருக்குத் தெரியாமல் மனத்துக்குள்ளேயே முதலிலிருந்து ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொள்வேன். அதற்குள் வியர்த்து விடும்....

''ஊர்லே எல்லோரும் சௌக்கியம்தானே? சார் இங்க வந்து எத்தனை நாளாச்சு? எங்க தாமசம்?''

சார் நிதானமாகவே பதில் சொன்னார்: ''வந்து ரெண்டு நாளாச்சு. மக வீட்டுலதான் தாமசம். மருமகப் பிள்ளைக்கு ஒரு ஆப்பரேசன்னு கடுதாசு போட்டிருந்தா.''

'எந்த மகள்?' என்று கேட்க வாயெடுத்த செந்தில்நாதன் அடக்கிக் கொண்டார். எவனுடனோ ஓடிப் போய், பட்டணத்தில் எங்கோ இருப்பதாகக் கருதப்பட்டு வந்த

மகளாகத்தான் இருக்க வேண்டும். பதினைந்து வருடங்கள் முன்பு, கட்டடக் கலை ஆலோசகராகத் தனியாகத் தொழில் நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த சமயத்தில் ஒரு முறை கிராமப் பக்கம் போனபோது அவர் அதைப் பற்றிக் கேள்விப்பட்டார். அப்போது சார் எத்தனை கொதித்துக் கொண்டிருந்தார்! 'அவள் என் மகள் இல்லெ. மூதி எக்கேடு கெட்டா எனக்கென்ன!' என்று கூச்சல் போட்டுத் தெரு மண்ணை எடுத்து வடக்குப் பக்கமாக எறிந்தாராம்.

''என்ன ஆப்பரேஷன்?''

''ஏதோ வயத்துலே என்னவோ கட்டியாம். அத ஆப்பரேசன் செய்யாம வேற போக்கு இல்லேன்னுப்பிட்டாகளாம். பெரிய ஆசுபத்ரில சேத்துப்பிட்டாக; நான் அலண்டு மலண்டு கெடக்கேன். எனக்கு வேற நாதியில்லே; ஓடனே ஓடியாங்கன்னு காய்தம் வந்துச்சு.''


சார் பேசுவது கேட்கவே விநோதமாக இருக்கிறது. ஆனால் நாற்பது வருஷங்களுக்கு முன்பு இதே பேச்சு மிகவும் இயல்பாகவும், ஒருவிதமான மதிப்பையும் மரியாதையையும் பெறுவதாகவும் இருந்தது. இவரிடம் தான் நான் அனா. ஆவன்னா உச்சரிக்கவும் எழுதவும் கற்றேன். இவர்தான் படம், பட்டம் வாசிக்கவும், 'பசு பால் கொடுக்கும்' போன்ற பெரிய வாக்கியங்களை எழுத்துக் கூட்டிப் படிக்கவும் சொல்லிக் கொடுத்தார்.

மாடியிலிருந்து தேவயானை இறங்கி வந்தாள். அவளைக் கண்டதும் சார் எழுந்து நின்று மிகவும் சங்கோசப்பட்டதைக் கண்டதும் செந்தில்நாதனுக்கு வயிற்றை என்னவோ சங்கடம் செய்தது.

''இவள்தான் என் சம்சாரம். தேவயானை இன்னு பேரு; கடலூர்க்காரி.... இவங்க என்னுடைய வாத்தியார்; எனக்கு அனா, ஆவன்னா சொல்லிக் கொடுத்தவங்க. இங்க அவங்களுடைய மகளைப் பார்க்க வந்திருக்காங்க.''

தேவயானை கையெடுத்துக் கும்பிட்டதைக் கண்டதும் சார் என்ன செய்வதென்று தெரியாமல் கைகளை இலேசாக உயர்த்தித் தாழ்த்தினார். தன் கிராமத்தில் பெண்கள் இப்படி நேருக்கு நின்று கைகூப்பும் வழக்கம் கிடையாதென்பது செந்தில்நாதனுக்கு நினைவு வந்தது. அத்தனை நேரமும் சார் நின்று கொண்டே யிருப்பது மனத்தில் உறைத்ததும் அவரை உட்காரச் சொன்னார். தேவயானை, ''இதோ வரேன்'' என்று உள்ளே சென்றாள்.

''ஊர்ல என்ன சார், விசேஷம்? எல்லாம் எப்படியிருக்காங்க? ஏதாவது மாத்தமுண்டா?'' சாரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கையில் தான் ஓடி விளையாடிய, ஒவ்வோர் அங்குல மண்ணையும் மிதித்து நடந்த தன்னுடைய கிராமத்துக்கே சென்று விட்டாற்போல் பிரமை தட்டுகிறது. நெஞ்சம் நெகிழ்கிறது.



''நீங்க ஊர்ப் பக்கம் வந்தே ரொம்ப வருசம் ஆச்சில்ல ?'' என்று கேட்டார் சார். அந்தக் கேள்வியின் பொருளை உணர்ந்தவராய் முன்பு வேறென்று கருக்கெனத் தைத்தது. ''என்ன சார், நீங்க — போங்கன்னு... யாரோ மாதிரி !''

''அதில்லே.... என்ன இருந்தாலும்..... பெரிய மனுசரா ஆயிட்டிக. நல்ல ஒசந்த அந்தஸ்துல இருக்கிக....!''

''அதுக்காக நான் ஒங்க ஸ்டூடண்ட் இல்லேன்னு ஆயிடுமா? நீங்க என் குரு இல்லேன்னு ஆயிடுமா? இனிமே அந்த மாதிரிப் பேசினா நான் பதில் சொல்லப் போறதில்லே!'' இப்படிக் குழந்தையைப் போலப் பிடிவாதம் பிடிப்பதில் ஒரு மன நிறைவு கிட்டியது செந்தில்நாதனுக்கு. அந்த உரிமையின் வெறியில் கண்கள் பொங்கின.

''பரமசிவன் என்ன செய்யறான் சார் ?''

''எந்தப் பரமசிவம் ?''

''அவன்தான் சார், தினசரி லேட்டா வருவானே அவன். ஒருநாள் ஜொள் நடக்கையிலேயே தூக்குச் சட்டியிலிருந்து சோத்தை எடுத்துத் தின்னுப்பிட்டு ஒங்ககிட்ட அடிபட்டானே, அந்தப் பய!'' தாம் சிறு பிள்ளையாகவே ஆகிவிட்டது போல் உணர்ந்தார் செந்தில்நாதன்.

சார் மெதுவாகச் சிரித்தார். ''நான் நாப்பது வருசம் வாத்தியாரை இருந்திருக்கேன். ஒரோரு வருசமும் கொறஞ்சது அறுபது எழுபது பயலுகளுக்குப் பாடம் சொல்லித் தந்திருக்கேன். யாரைன்னு ஞாபகம் வச்சுக்கறது ?.... ஏதோ ஒங்கள மாதிரி... ஒன்ன மாதிரி சில பேரைத்தான்.....''

ஒருமையில் அழைக்கச் சார் இன்னும் கஷ்டம்தான் படுகிறார்.

தேவயானை ஒரு தட்டில் ஏதோ பலகாரம் கொண்டு வந்து வைத்தாள். சார் கூச்சத்தில் நெளிந்தார். இரண்டு மூன்று முறைகள் வற்புறுத்தியபிறகே தட்டிலிருந்ததை எடுத்து வாயில் போட்டு மென்றார்.

''சார் மகன், மருமகனெல்லாம் எந்த எடத்துலே இருக்காங்க ?'' என்று தேவயானை கேட்டதும், பதில் சொல்வதற்காக முயன்ற சாரின் வாய் ஓர் அன்னியப் பெண்ணிடம் பேசுகிற கூச்சத்தாலா? — கோணியது. இதையெல்லாம் காணக் காணச் செந்தில் நாதனுக்கு ஒருபுறம் வியப்பாகவும் இன்னொருபுறம் பரிதாபமாகவும் இருந்தது. ஒவ்வொரு கணமும் தம்மையறியாமலே அவர் தம்முடைய பள்ளி நாட்களை நினைவுபடுத்தி ஒப்பிட்டுக் கொண்டிருந்தார். இவருக்கு அருகே வரவே தான் பயந்து நின்ற நாட்கள்! இப்போது இவரோடு சரிசமமாக உட்கார்ந்து பேசுகிற கணங்கள்.....

''மண்ணடியிலே இருக்கா....'' என்று தம் மகனைப் பற்றிச் சார் தேவயானையிடம் கூறிக் கொண்டிருந்தார். புருஷன் ஹார்பரில் வேலை செய்பவனும். கிராமத்து வெள்ளைப் பேச்சாக அவர் எல்லாவற்றையும் கொட்டிக் கொண்டிருந்தார். கூச்சம் மறைந்திருந்தது. '' அந்தப் பய ஒண்ணுக்கும் ஒதவாத ஊதாரியாக தெருவுல மாடு மேய்ச்சுக்கிட்டுக் கெடந்தான். எங்க ஊர்லதான். பய நல்லாப் பாடுவான். ஆத்தாங்கரைல ஒக்காந்து தெனசரி சாயரட்சை ஏதாவது சத்தமாப் பாடிக்கிட்டுக் கெடப்பான். படுனுக்குப் போய் அத்தனை ஜெமினிலையும் பாத்துப்பிட்டு அதுல பாடுத பாட்டெல்லாம் பாடுவான். தெரியாத எடத்துல சொந்தமா வார்த்தைகளைப் போட்டுக்கிடுவான். இவ தெனசரி அந்த நேரத்துலதான் தண்ணி எடுக்கப் போவா. அந்தப் பாட்டுத்தான் இழுத்துதோ வேறெதோ. சனியங்க ரெண்டும் ஒருநா சொல்லாமக் கொள்ளாமப் பட்டணத்துக்கு ஓடியாந்துட்டுதுக.''

செந்தில்நாதன் தேவயானையின் முகத்தைப் பார்த்தார். அவள் படுகிற சங்கடம் அவருக்குப் புரிந்தது. மனத்துக்குள் சிரித்தவாறே, ''மருமகனுக்கு இப்ப எப்படி இருக்கு ?'' என்று கேட்டார் பேச்சை வேறு திக்கில் இழுக்க எண்ணி.

சார் முகம் வாடியது. தட்டில் எஞ்சியிருந்த பலகாரத்தை எடுத்து அவசரமாக வாய்க்குள் போட்டுக் கொண்டு கையைத் துடைத்துக் கொண்டார். ''அதான் என்ன செய்யறதுன்னு வெளங்கலே. இனிமெல் கொஞ்சநாள் குளிக்கப்படாதாம்; திமிரப்படாதாம்; கொணை தூக்கப்படாதாம். இந்தப் பய படுக்கையிலே கெடந்தான்னு சோத்துக்கு என்ன வழி? நாலு புள்ளைக. பதிமூணு, ஒம்பது, நாலு, ரெண்டுன்னு. இந்த அளவுல என்னையும் வேற இங்கனயே வந்துடச் சொல்லுதா. நீங்க ஊர்ல என்னய்யா தனியாச் செய்யப் போறீங்கன்னா.

''அதுவும் வாஸ்தவந்தான். ஊர்ல தனியாப் பொங்கித்தின்னு எதுக்காக இந்தவயசுக் காலத்துல செரமப்படணும்? ஊர்ல ஒங்கப் பாவப்போல நல்ல மனுஷாள் இருந்த காலமெல்லாம் போச்சு. நம்மவங்க, அக்ரகாரத்திலேயே வீடு வாங்கிட்டுக் குடி போயிடுறாங்க. வீட்ல ஒதவிக்கும் யாரும் கெடயாது. வீட்டை வித்தா நாறு நாத்தம்பது கெடைக்கும். ஆனு குடியிருக்க எவனும் வாங்கமாட்டான். வாங்கி, ஓட்டப் பிரிச்சு, கட்டையை வித்து லாபம் பண்ணத்தான் பாக்யான்.''

சார் என்னவோ யோசிப்பது போல் சற்று நிறுத்தினார்.

செந்தில்நாதனுக்குத் தங்கள் தெரு நினைவு வந்தது. அப்போதே நாற்பது வருடங்களுக்கு முன்பே அந்தத் தெருவில் மொத்தம் இருபது வீடுகள்தாம் உண்டு — அவற்றில் மூன்றே மூன்று ஓட்டு வீடுகள். அந்த இருபது வீடுகளுக்குள் நான்கு கட்சிகள்.

''நம்ப தெருவுல ஒன்பதே ஒன்பது வீடுதான் மிச்சம். ஒங்கய்யா காலத்துல இருந்தவுகள்ள நானும், அத்தி வீட்டுச் சங்கரம் பிள்ளையும்தான் பாக்கி. சங்கரம் பிள்ளை மகன் சொக்கநாதன் பக்கத்து மனை ரெண்டையும் வாங்கி இடிச்சு வெறகுக் கடை வச்சிருக்கான். அதுக்கு அடுத்தாப்ல ரெண்டு பாழ் மனை.''

பாழ்மனைகளை நிரம்பிய தம் தெருவைச் செந்தில்நாதன் கற்பனையில் பார்க்க முயன்றார். தம்மோடொத்தவர்கள், தம்முடன் படித்து விளையாடியவர்கள் யாருமே தம்

ஊரில் முன்னேறியதாகத் தெரியவில்லை — முக்கியமாகத் தம் தெருவைச் சேர்ந்தவர்கள் அப்போது தம் இணைபிரியாத தோழனாயிருந்த வேலாயுதம் இப்போது ஊர்ப் பள்ளியில் பியூனாக இருக்கிறான் என்பதைக் கேட்கையிலேயே மனத்தை என்னவோ செய்தது. பணக்கார வீட்டுப் பையன் என்று அப்போதே மற்றப் பையன்களெல்லாம் தம்மை ஒரு மாதிரியாகத்தான் நடத்தி வந்தார்கள். ஆனாலும் வேலாயுதத்துடன் கட்டிப் பிடித்து விளையாடியபோது உண்டான சமத்துவ உணர்ச்சி இப்போது வருமா? அவன் தம் எதிரே இப்போது உட்காரக்கூட மாட்டானோ என்னவோ!

"அதான் நான் யோசிக்கேன். நானும் வந்துட்டா, வீட்ட எவனாவது இடிக்கப் பாளாக்கி விடுவானேன்னு. ஒம்பது எட்டாயிடும். எட்டு ஏழாக எத்தனை நாளாகப் போவுது?"

சாருக்குக் கூச்சம் விலகிவிட்டது. சரளமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனாலும் அவருக்கு, 'தான் அவருடைய மாணவன்' என்கிற நினைப்பே இருப்பதாகத் தெரியவில்லை. தமக்கு மட்டும் அந்த நினைப்பு ஓர் இடைஞ்சலாக இருப்பதாகப் பட்டது செந்தில்நாதனுக்கு.

தேவயானை சாரிடம் சொன்னான்: "நீங்க வயசுக் காலத்துல தனியா இருக்கிறதைவிட மகளோட இருந்தா ஒங்களுக்கும் தெம்பு. அவளுக்கும் ஆதரவு."

"அதான் நானும் யோசிச்சுக்கிட்டு இருக்கேன். ஆனா இங்க வந்து நான் என்ன செய்யறது? ஊர்ல ஒரு மதிப்பு வச்சு, ஒரு தாட்சண்யத்துக்காக ரெண்டு மூணு பயலுக டியூஷனுக்கு வருதுக. பட்டணத்துல என் மொகத்தைப்பார்த்து எவன் தம் புள்ளையே டியூஷனுக்கு அனுப்புவான்? மருமகப் புள்ளை நோயாளியாயிட்டான். ஆசுபத்திரியிலேந்து வந்தப்புறமும் அவனுக்குப் பழையபடி சோலிக்குப் போக முடியும்னு தோணலை. நானும் வந்து சோத்துக்கு உட்கார்றது நல்லாயிருக்குமா?"

சார் சற்று நிறுத்தினார். அவர் வார்த்தைகள் கனத்தன. பார்வை கீழ் நோக்கி வெறித்தது. பேச்சில் மறுபடியும் 'நீங்கள்' புகுந்து கொண்டது.

"முத்துசாமிக்குக் காய்தம் எழுதியிருந்தீங்களாம் நீங்க—கணக்குப் பார்க்கக் கொள்ள மேப்பார்வை பாக்க நம்பிக்கையா, நம்ம ஊர் ஆளா, நல்லாத் தெரிஞ்ச ஆளா வேணும்னு..."

சார் மறுபடியும் நிறுத்தினார். செந்தில்நாதன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.. சார் சட்டென்று செந்தில்நாதனை ஏறிட்டுப் பார்த்துவிட்டுக் குனிந்துகொண்டார். "நான் இங்கே வந்து சும்மா இருக்கறதைவிட ஏதாவது சோலி பாக்கறது ஒதவியா இருக்கும். எனக்கு இந்த வயசுல யாரு என்ன சோலி கொடுப்பாக? ஒங்களுக்கு என்னை நல்லாத் தெரியும். கணக்குப் பாக்கறதும் ஒடம்புக்கு அத்தனை செரமம் இல்லாத சோலிதானே... அதனால..." என்று முடிக்காமல் நிறுத்தினார்.


செந்தில்நாதன் தேவயானையைப் பார்த்தார். அவர் மனம் துடித்தது. தலை குனிந்து சில கணங்கள் மௌனமாக இருந்தார். கண்களில் கண்ணீர் வந்து விடும் போலிருந்தது. இறுக்கி ஒரு முறை மூடிவிட்டுத் தலையை உசுப்பிக்கொண்டு திறந்தபோது காப்பி கண்களில் பட்டது. தொண்டையைச் செருமிக் கொண்டு, "காப்பியைக் குடியுங்க சார், ஆறிப் போவுதே!" என்றார்.

சார் சிறிது தயக்கத்துக்குப் பின் காப்பியை எடுத்துக் குடித்தார். அவர் குடித்து முடிக்கும் வரையிலும் செந்தில்நாதன் பேசாமலிருந்தார். அதற்குள் அவர் மனம் இந்த விஷயத்தைக் குறித்து யோசித்து முடித்திருந்தது. மெதுவாகச் சொன்னார்: "எப்படி சார் நான் ஒங்களை எனக்குக் கீழ வேலைக்கு வச்சுப்பேன்?" அவர் தொண்டை கட்டியது. "நான் அரிச்சுவடி ஒங்ககிட்டத்தான் சார் படிச்சேன். எனக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்தது நீங்கதான். இப்பிடிச் செய்யுங்க, அப்பிடிச் செய்யுங்கன்னு நான் ஒங்களை ஏவ முடியுமா சார்? இந்தாங்க, நீங்க செய்த வேலைக்குச் சம்பளம் இதோன்னு என் பையிலேருந்து எடுத்து எண்ணி என் கையாலே எப்படி சார் நான் கொடுப்பேன்? நான் இன்னிக்கு இந்த நெலமையிலே..." என்று முடிக்க முடியாமல் அவர் தொண்டை செருமிக் 'களக்' என்ற சத்தம்தான் வந்தது.

சார் மௌனமாக இருந்தார். அவர் பல யுகங்களாக மௌனமாக இருப்பதாகச் செந்தில்நாதனுக்குப் பட்டது. இருப்புக் கொள்ளவில்லை. நிமிர்ந்து சாரைப் பார்த்தார். சார் புன்முறுவலுடன் செந்தில்நாதனின் கண்களை நோக்கி, "செந்திலு! நீ சொன்னதைக் கேக்குறபோது என் தேகமெல்லாம் சந்தோஷத்துல ஆடுது. நான் இந்த மாதிரித் தங்கங்களுக்கு வாத்தியாரா இருந்திருக்கேன்னு சொல்ல முடியாத பெருமை அள்ளுது" என்றார். பின்னர், "ஆனா என் நெலமை அப்பிடி. வேறே யாரு எனக்குச் சோலி கொடுப்பாக? சம்பாதிக்காம மகளுக்குப் பாரமா இருக்கவும் நான் பிரியப்படலே" என்றார் மெதுவாக.


செந்தில்நாதன் நெகிழ்ச்சியுடன், "நான் இல்லையா சார்? ஒங்க மருமகப் பிள்ளைக்கு ஒடம்பு கொணமாறது என் பொறுப்பு. அப்புறம் அவரை என் கம்பெனியிலே வேலைக்கு எடுத்துக்கறேன். அதுவரையிலும் ஒங்க செலவெல்லாம் என்னுது" என்றார்.

சில நிமிஷங்கள் பேசாமல் இருந்த சார், மெல்லச் சிரித்தார். "என் ஸ்டூடண்டுகிட்டேயிருந்து நான் தானம் வாங்குவேன்னு நெனச்சியா? வேலை செய்யறதைப் பத்தி நான் எப்பவும் வெட்கப்படறதில்லே" என்றார். பிறகு எழுந்து நின்று கொண்டு, "அப்ப நான் வரேன். ஒன்னை இத்தனை வருசத்துக்கப்பொறவு பாத்ததுல ரொம்ப சந்தோசம். ஒங்கொளந்தைங்களையும் பாக்கணும். இன்னொரு வாட்டி வாரேன்" என்றார். திண்ணைக்குப் போய்ச் செருப்பை மாட்டிக்கொண்டார். படியிறங்கித் தோட்டத்தைக் கடந்து கேட்டைத் திறந்து கொண்டு வெளியே போய்க் கேட்டை மறுபடியும் சாத்திவிட்டுத் தெருவில் நடந்தார்.


புதிய
மக்ளீன்ஸ்
டூத்-பிரஷ்
எவ் வகையிலும் சிறந்தது
அதிக நீளமுள்ள கைப்பிடி
வசதியான கட்டை-விரல் பிடிப்பு
இரு-வரிசைக் குச்சங்கள்
" ஷார்ட் ஹெட் "
வட்டமுனைக் குச்சங்கள்
மக்ளீன்ஸ்


சுத்தமான தேன்!
நூற்றுக்கு நூறு சுத்தமானது. கேரளம் குடகு, கன்னியாகுமரி இவ்விடங்களிலிருந்து அந்தந்த பிராந்திய விசேஷ சுவையும் மணமும் பிரதிபலிக்கும் மூன்று வகை தேன் — 450, 225 கிராம் புட்டிகளில் கிடைக்கும்.
அரசு அங்கீகாரம் பெற்ற அக்மார்க் முத்திரையுடன் பாக் செய்யப்படுகிறது
ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட்,
153, மவுண்டு ரோடு சென்னை-2.
Spencer's

நேரத்தில் எழுந்திருக்காததால், அமெரிக்கா சென்ற இந்திரா காந்தியை வழியனுப்பி வைக்க விமான நிலையத்துக்குஅமெரிக்க தூதர் கீட்டிங் வரவில்லை. ஆகவே அவருக்கு ஒரு கடிகாரம் பரிசளிக்கப்பட்டது. இதே ரீதியில்.........






தனிக்கொடி கேட்கும் மாநில முதல்வருக்குப்பாரதக்கொடி பரிசளித்தால் என்ன?


எதேச்சாதிகாரம் செலுத்தும் இந்திரா காந்திக்குச் சுதந்திர தேவி சிலையின் மாதிரியை அன்பளிப்பாக வழங்கலாம்.





ஞாபக மறதி மந்திரி ஜகஜ்வனுருக்குப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய வருமானவரி நமூனவை (Form) அனுப்பலாம்.

மஞ்சள் மை போட்டுப் பச்சை பச்சையாகவே எழுதிப் பழகிய எழுத்தாளருக்குக் கருநீல மை புட்டி......





சோஷலிஸப் பிரசாரத்திலும் லாட்டரி மோகத்திலும் மயங்கிக் கிடக்கும் ஸ்ரீமான் பொதுஜனத்துக்கு ஒரு கர்சிப்!



ULKA-GSC-1 TAM

கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம் ஸிங்தெல், உங்கள்
வதனத்திற்கு புத்தம்புது ரோஜா மலரின் மெருகேற்றி,
எழிலோங்கச் செய்கிறது. சருமத்தில் போட்டதே
தெரியாமல் கரைந்து மறைந்து, பட்டுப் போன்ற
பளபளப்பை மட்டும் ஒளிவிடச் செய்கிறது ஸிங்தெல்.

ஸிங்தெல, சருமத்தின் இயற்கையான ஈரத்தன்மையை நிலை நிறுத்தி,
நாள் முழுவதும் நலியாத புதுமைச் சிலிர்ப்பினை அளிக்கிறது.
அழகுப் படிமானமாகவோ, அப்படியேவோ
உபயோகிக்கும்போது, ஸிங்தெல் தரும் தூய
ரோஜா சுகந்தம் உங்களைக் கவர்ச்சிக்
கன்னியாகக் கனியவைக்கிறது.

கொஞ்சிடும் அழகு மிஞ்சிட —ஸிங்தெல்
கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம்.

Godrej





எங்கே நிம்மதி?

ஸி.ராஜப்பா

நந்துவை இனி என்னால் கண்டிக்க முடியாது. அவனுக்கும் பதினெட்டு முடிந்துவிட்டது. இனி என்ன? சிறு குழந்தையா? அவரிடம் சொல்லித்தான் கண்டிக்கச் சொல்ல வேண்டும்.

சற்று அவர் காதில் விஷயத்தைப் போட்டுவிட்டால், பூகம்பம் வந்தாற்போல் ஆகிவிடும் வீட்டின் நிலைமை. இதற்குப் பயந்து கொண்டே இந்த ஒரு மாத காலமாக மௌனமாக இருந்து வருகிறேன்.

ஆனால் இனி என் மௌனம் நீடித்தால்...? இந்த வருடம் நந்து பொறியியல் கல்லூரி வாசற்படியை விட்டு நகர மாட்டான். ஆகவே நான் இப்போது என்ன செய்வது என்று புரியாமல் தவிக்கிறேன்.

அவருக்கு நிதானமே எதிலும் கிடையாது. நான் சொன்னேன் என்றும் பக்குவமாகக் கண்டிக்கக் கூடாதா? அதுதான் கிடையாது. 'ஓ'வென்று அலறுவார். நந்து வாய் திறவாமல் கண்ணீர் வடிப்பான். அதுமட்டுமா? மூன்றாவதாக நிற்கும் அவன் நிலை? என் பிள்ளை முகம் வாடுவதைப் பற்றிக் கூட எனக்குக் கவலை யில்லை. யாரோ முன் பின் தெரியாதவர் வீட்டுப் பிள்ளை — நந்துவை விட நான்கு வயது பெரியவன் — சென்டிரலில் இவர் பம்பாயிலிருந்து வரும்போது சாமான் தூக்க முன் வந்தானாம்! பிரமித்துப் போய் 'ஏன் இந்த உத்தியோகம்?' என்று கேட்க 'வேறு வழியில்லை. ஏழாவது வரைதான் படித்திருக்கிறேன்!'' என்றானாம். இளகாத இவர் மனம் இளகி விடவே, அன்று முதல் அவன் எங்கள் வீட்டில் மார்க்கெட், மளிகை, மற்றும் இதர வெளி வேலைகளுக்குப் பொறுப்பாளனானான்.

இதுவரை இந்த விஷயங்களுக்கு ஓடிக்கொண்டிருந்த நந்துவுக்கு இறுதி வருடப் பரீட்சை காரணமாக அவன் அப்பா ஓய்வு கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

ஆனால் இங்கு நடப்பது என்ன? முற்றிலும் தலைகீழாக இருக்கிறது! இதை அவர் அறிந்தால்...? அநாதைக்கு அடைக்கலம் கொடுக்கப் போய், தம் பிள்ளையைக் குட்டிச்சுவராடித்துவிட்ட குற்றத்தைச் செய்தவராகத் தான் நிற்பார்!

வந்தவன் நல்ல பையன்தான். இருபத்திரண்டு வயதுப் பையனானாலும் மிக மிக மரியாதை, முகம் களிப்பது கிடையாது. இரண்டு சட்டை வேட்டிகளை வைத்துக் கொண்டே சாமர்த்தியமாக வெள்ளை வெளேரென்று போட்டுக் கொள்கிறான். கை சுத்தம். பொய் புரட்டுக் கிடையாது. பாவம், இன்னும் நாலு வகுப்புப் படித்திருந்தால் கௌரவமாக ஒரு குமாஸ்தா வேலை கிடைத்திருக்கும். என்ன அசௌகரியம் ஏற்பட்டதோ, இப்படி அரைகுறையாக நிற்கிறான்.

இப்படி இரக்கப்பட்டே, நந்துவைப்போலவே அவனையும் கவனித்து வருகிறேன். ஆனால் என் குழந்தையைப் பரீட்சைக்குப் படிக்க விடாமல், இப்படி அவன் அறைக்குள் முடங்கிக்கொண்டு பிராணனை வாங்குகிறானே, தனக்காகத் தெரிய வேண்டாமா? நானும் ஜாடையாகப் பல முறை கூப்பிட்டுப் பல வேலைகள் சொல்லிப் பார்த்தேன். நிமிடத்தில் அவற்றை முடித்துவிட்டு மீண்டும் நந்துவின் அறைக்குள் ஓடுகிறான்! இது மட்டுமா? அந்த நந்துக் கடன்காரனுக்காவது அறிவு வேண்டாமா? அப்பாவின் சுபாவம் தெரியாதா? பொறியியல் கல்லூரியில் சேர்க்க என்ன முரண்டு பிடித்துச் சேர்ந்தான்? ஒழுங்காகப் பரீட்சைக்குப் படிக்காமல் வேலைக்காரப் பையனை அழைத்து வைத்துக் கொண்டு தன் கல்லூரிப் புத்தகங்களைப் பிரித்துக் காட்டி அரட்டை அடிக்கிறானே! அதில் என்ன கவர்ச்சியான படங்களா போட்டிருக்கின்றன? இல்லை பார்க்கும் பிரகஸ்பதிதான் கேம்பிரிட்ஜ் எம். ஏ.வா?

இந்தக் கஷ்ட நிலையை நான் பலமுறை நந்துவிடம் சொல்லியும், ''நீ சும்மா இரு அம்மா! எல்லாம் எனக்குத் தெரியும்!'' என்கிறான்.

அவரிடம் சொன்னாலோ? அடுத்த நிமிடம் அந்த அநாதை மறுபடியும் சென்டிரல் ஸ்டேஷன் ரயிலடியில் கூலியாகத்தான் நிற்பான். அவர் அவனுக்கு உதவிப் புண்ணியம் கட்டிக் கொள்கிறார். என்னுடைய 'உபகாரம்' அதைக் கெடுத்து, அவனை அழிய வைப்பதா?



இந்த இரக்கம் இருக்கிறதே, இதைப் பாம்பென்று மிதிக்கவும் முடியாது, பழுதை என்று ஒதுக்கவும் முடியாது! மிகமிக தர்மசங்கட நிலை என் நிலை! அதோ அந்த 'அநாதை' நந்து அறைக்குள் மெதுவாகப் பேசும் சத்தம் கேட்கிறது! அவன் படிக்கக் காணுமே! மெதுவாக மாடிப் படி ஏறி மேலே போய்ப் பார்க்கலாம் என்றும், நந்து பார்த்தால் என்மீது சீறுவான். 'படிக்கும் போது மாடிக்கு வராதே' என்று எனக்கு உத்தரவு போட்டிருக்கிறான் என் பிள்ளை. ஆனால் அந்த அநாதைப் பையனுக்கு முழு 'உரிமையா? அந்த அறையை விட்டு நகர மாட்டேன் என்கிறானே! நானும் தேவையற்ற எத்தனை வேலைகளைத்தான் கற்பனை செய்து சொல்லுவது?

தொலையட்டும். எக்கேடு கெட்டுத் தொலையட்டும். இந்த உண்மை அவருக்குத் தெரிந்தால் அப்போதும் என் மண்டைதான் உருளப் போகிறது....

பொறுமையை இழந்து விட்டேன். அவரிடம் சொல்லியே விட்டேன். எப்போது? பொறியியல் கல்லூரி பரீட்சை எழுதி நந்துவுக்கு லீவு விட்டவுடன்! எப்படிப்பட்ட புத்திசாலி நான்? — பரீட்சை முடிந்த பின் சொன்னால் என்ன பிரயோசனம்? படிப்புக் கெடாமலிருக்க நந்துவுக்கு அவகாசம் அளிக்கத்தானே அவனை சென்டிரலிலிருந்து பிடித்து வந்தார்! அவன்தான் நந்துவைப் படிக்க விடாமல் அட்டை மாதிரி ஒட்டிக் கொண்டு அவனுக்குக் கொடுக்கும் மனைத் தானும் குடித்துக் கொண்டு இரவு தூக்கம் கெட்டுக் காவல் காத்தானே! எங்கே தவறிப்போய்ப் படித்து விடுவானோ என்று?

அந்தச் சமயம்தானு இவரும் வெளியூர் 'காம்ப்' போக வேண்டும்? இரண்டு மணி வரை விளக்கு எரிந்ததுதான் மிச்சம். நந்து என்ன படித்தானோ? 'ரிஸல்ட்'டைப் பார்த்தல்லவா தெரிந்து கொள்ள வேண்டும்?

இவருக்கு இவ்வளவு பொறுமையா? என்னவோ எரிமலை குமுறப் போகிறது என்று நான் எதிர்பார்த்தது எவ்வளவு முட்டாள்தனம்? நான் சொன்ன குற்றச்சாட்டைக் கேட்டதும், அந்த 'அநாதை'யை அழைத்தார். அருமையாக நாலு வார்த்தை பேசினார். இரண்டு நாலு முழ வேஷ்டியைக் கொடுத்தார். கையில் இருபது ரூபாய் பணத்தையும் கொடுத்தார்.

''இதோ பார்! என்னால் உனக்கு இவ்வளவுதான் உதவ முடிந்தது. அவனுக்குப் பரீட்சை முடியும்வரை ஆறுதலாக இருக்க வேண்டும் என்று வீட்டு வேலைக்கு உன்னை வைத்துக்கொண்டேன். ஆனால் நீ வந்த பின் அவனைப் படிக்க விடாமல் அவனோடு அரட்டை அடித்துக் கெடுத்தாய் என்று அம்மா சொல்கிறாள். சரி, உன்னை நான் கோபிக்கவில்லை. உனக்குப் போதிய படிப்பில்லை. ஆகவே உனக்குப் படிப்பின் மதிப்புத் தெரியவில்லை. அவன் இந்த வருடம் பட்டப் படிப்பு முடிந்து பட்டம் வாங்க வேண்டியவன். அந்தக் கழுதைக்கே அறிவில்லாமல் உன்னை வைத்துக் கொண்டு அரட்டையடித்தால் உன்னைக் கோபிப்பதில் பலன் என்ன? வேலையின்றி அலைந்தாயே என்று அழைத்து வந்து ஒரு மாதம் வைத்துக் கொண்டேன். நன்றாகத்தான் நடந்து கொண்டாய்! எனக்கு உன் மீது எந்த விதக் கோபமுமில்லை. போய் வா!'' என்று பவ்யமாகப் பேசி நிறுத்தினார்.

என் கண்கள் கலங்கி விட்டன. பாவம், என் மகத்தான சாதனையை எண்ணி வருந்துவதா, நிம்மதியடைவதா? நந்து எங்கே? அவன் இருந்தால் என் மீது புலியாகப் பாய்ந்திருப்பான். இதோ அவன் வெளியே இருந்து வருமுன் இந்த அநாதையை அனுப்பி விட்டால் நான் நந்துவிடம் ஏதாவது காரணம் சொல்லித் தப்பிக் கொள்வேன்.

அவன் என்னை என்ன செய்து விடுவான்? கொஞ்ச நேரம் உறுமுவான். அவ்வளவுதானே?



''போய் வருகிறேன். உங்கள் உதவிக்கு மிகுந்த நன்றி. அம்மா, உங்கள் பிள்ளையைப் போல் என்னைக் கவனித்ததற்கு மிகவும் நன்றியம்மா?'' — இதைச் சொல்லிவிட்டு அந்த 'அநாதை' கண்ணீர் வடிக்கிறது.

என் நெஞ்சு குமுறுகிறது. பைக்குள்ளிருந்து ஏதோ ஒரு கவரை எடுத்து அதைப் பிரித்து இவரிடம் நீட்டுகிறான். இவரும் கையில் வாங்கிப் பார்த்துவிட்டுச் சரேலென்று எழுகிறார்.

''கந்தராஜா! நீயும் ஒரு பி. ஈ.யா? படிப்பாளி! இன்ஜினியரிங் பட்டம் பெற்று வேலையில்லாமலா 'கூலி' தூக்க வந்தாய்?'' இவர் முகம்தான் எப்படிச் சிவக்கிறது!

''ஆமாம். எனக்குத் தெரிந்ததைப் பரீட்சை சமயத்தில் நந்துவுக்குச் சொல்லிக் கொடுத்தேன். உங்கள் அன்புக்கு என்னால் செய்ய முடிந்த அற்ப உதவி அது...''

அதோ இறங்கிப் போகிறானே அந்த அநாதை. அவனை ஓடிப்போய் அழைத்துவர என் நெஞ்சு துடிக்கிறது.... கால்கள் நகர மறுக்கின்றன. கண்கள் பனிக்கின்றன.... எனக்கு இன்னும் நிம்மதி ஏற்படவில்லையே?

அவர் என்னைத் தாங்கிக் கொள்கிறார்! ஒரு பி. ஈ. சென்ட்ரலுக்குப் போர்ட்டராக வேலை பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறது. என் ஐசுவரியத்தால் !

உறுதியான கட்டடங்கள்: பொதுப்பணியில்-1



திருப்பழனம் கிராமத்துப் பஸ் ரோட்டில் படகுத் துறைக்கு எதிரே கிருஷ்ணபிள்ளை கடைக்குப் பக்கத்தில் பொன்னியின் வீடு இருந்தது. கோணச் சாலையில் விரைந்த திருவையாறு – கும்பகோணம் ஸ்ரீ ராம விலாஸ் பஸ் எழுப்பிய செம்புழுதிப் படலம் பூவரசு மரங்களோடு பூட்டிய மூங்கில் முள் வேலிப் படலைத் தாண்டிக் கொண்டு சாணம் மெழுகப்பட்ட திண்ணையெங்கும் படர்ந்தது.

தென்னங் கீற்றை முடைந்து கொண்டிருந்த பொன்னி சேலைத் தலைப்பைப் பிரித்து மூக்கைப் பொத்திக் கொண்ட போது அவளது பார்வை எதிரே படுத்து வாலை விசிறியபடி தன்னையே கூர்ந்து கவனிக்கும் 'ராசா'வின் மீது படர்ந்தது. வர வர இந்த நாயின் ஊடுருவும் கண்கள் அவளால் சகிக்க முடியாதபடி இருந்தன. உருண்டு திமிர்ந்து உறுத்து நோக்கும் அதன் கோலிக் குண்டு விழிகள் அவளது நெஞ்சைச் சதா அரித்துக் கொண்டேயிருந்தன. 'எனது பழைய எஜமானனுக்கு ஏன் துரோகம் செய்கிறாய்?' என்ற கேள்விக் குறியை அதன் பார்வை எழுப்புவது போல் அவள் மனச்சாட்சி கூறிற்று.

பிசிறிட்ட ஓலைகளைக் கையரிவாளால் நறுக்கியபடி அவள் மீண்டும் நிமிர்ந்தாள். ராசா முன்னங் கால்களை நீட்டியபடி தொங்கும் நாக்கில் சுரம் சொட்ட, பொன்னியை வெறித்து நோக்கியது. அந்தப் பார்வையின் எரிப்பு தாங்க முடியாமல் 'அடச்சீ, கம்மனாட்டி' என்று அலறியபடி அரிவாள் பக்கம் அவளது கை சென்றது. ராசாவின் காதுகள் நிமிர்ந்தன. வாலாட்டம் நின்றது. அரிவாள் பறந்தது. அந்த வீச்சுக்குத் தப்பி உடலை வளைத்து 'லொள்' என்று குதித்தபடி ஓடிற்று, விசுவாசமுள்ள அந்தச் சுவானம்.

பொன்னி

சுபஸ்ரீ



* * *

பொன்னியின் கணவன் தருமன் வாழைக் கொல்லை மகாதேவய்யர் வீட்டின் பண்ணையாள். காவிரியின் பழுப்பு நிறமும், வாழைக் கறையும் ஏறிக் கிடக்கும் வேட்டி; தலையிலே முண்டாசு; செழுமையான மார்பில் கருகரு வென்று ரோமம்; முகத்தில் இலங்கும் மீசை.

காலையில் நீராகாரம் அருந்திப் பண்ணையார் வீட்டுக்குச் சென்றால் நாள் முழுதும் அவனுக்கு வேலை. பண்ணை வீட்டு வேலைகளைத் தனது சொந்த அலுவல் போல் பொறுப்பாகக் கவனித்துக் கொள்வான் தருமன். முதலாளி தொழிலாளி என்ற உறவு முறை ஷரத்துக்களையோ போராட்டங்களையோ ஏற்படுத்திக் கொள்ளாமல் ஒரு குடும்பமாகப் பழகிய பாரம்பரை அவர்களுடையது.

திருவையாறு பஞ்சநதீசுவரர் கோயில் ஐந்தாம் நாள் ரிஷப வாகன உத்ஸவத்துக்கு வண்டி பூட்டிச் சென்ற போதுதான் தருமன் ராசாவை அழைத்து வந்தான். மேட்டுத் தெரு வால்களுக்குப் பயந்து கொண்டு அவனது வண்டியை அடைக்கலம் புகுந்தது அந்த சோனிலை ஜந்து. டீக்கடையிலிருந்து ஒரு பன் வாங்கிப் போட்டான்.

திரும்புகையில் தியாகய்யர் சமாதி கடந்த பிறகுதான் கவனித்தான், அந்த நாய் வண்டி நிழலிலேயே ஓடி வருகிறது என்பதை. அதற்குப் பிறகு ராசா அவனது வீட்டுக்கு மூன்றாம் நபராகக் குடி வந்து விட்டது. அவன் எத்தனை மணிக்கு பிராக வீட்டிலிருந்து வந்தாலும் அவன் மீது ஏறிக் குதித்து, இதமாகக் கவ்வி, கடித்து நக்கி தனது சந்தோஷத்தை வெளியிடாமல் ராசா திண்ணை மூலைக்குப் போவதில்லை.

"இந்தச் சனியனை என்னாத்துக்குக் கூட்டி வந்தீக? பண்ணைச் சொத்து கொள்ளை போவுதுன்னு?" பொன்னி கடிந்தாள்.



அட்டைப்படக் கதை



''புள்ளை இல்லாத வீட்டிலே நாய்க்குட்டி துள்ளி விளையாடுது!'' என்பான், அவளைச் சீண்டியபடியே.

* * *

அமைதியாக இருந்த ஊர் அமளிப்பட்டது.

நாகப்பட்டினத்திலிருந்து வந்த 'தோழர்' ஒருவன் இளைஞர்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கி விட்டான். விவசாய வேலையாட்கள் சம்பள உயர்வுக் கோரிக்கைகளும், பண்ணையார் — இளைஞர் போராட்டமும் தோன்றின. சம்பா அறுவடையின் போது ஆட்கள் வயலில் இறங்க மறுத்து விட்டனர். மிராசுதார் சங்கமும் இளைஞர் படையும் மோதிக் கொண்டன. சப் - கலெக்டர் வந்து சமரசம் பேசினார். இரு தரப்பிலும் உடன்பாடு ஏற்படவில்லை. கதிர்கள் முற்றின. போலீஸ் பாதுகாப்புடன் வெளியூர் 'லேபர்' அறுவடை செய்ய முற்பட்டபோது அடிதடி நிகழ்ந்து விட்டது. இருபுறமும் ஆள் சேதம்.

காயம் பட்டவர்களில் கருமனும் ஒருவன். தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரிக்கு ஜீப்பில் எடுத்துச் சென்றார்கள். இரத்தச் சேதம் அதிகம். தையல் போட்டார்கள். நாலாம் நாள் ஜன்னி கண்டு அவன் இறந்து விட்டான்.

ஊரே அழுதது.

இது நடந்து மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. பொன்னி அந்த இழப்பிலிருந்து சுதாரித்துக் கொண்டாள். பண்ணை வீட்டில் பணி. ஏதோ வாய்க்கும் கைக்குமாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

ஏப்ரல் மாதத்துக் கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. சப்தஸ்தானத் திருவிழாவுக்குப் பந்தல் கண்டிராக்ட் எடுத்திருந்த திங்களூர் ஆட்களில் ஒருவன் இடுப்பில் கருக்கரிவாள் ● தொங்க, கருமேனியில் வியர்வை ஊற்றெடுக்க, பொன்னி வீட்

டன்னைட வந்தான். ''அம்மா மோர்த் தண்ணீர் இருக்குமா?'' என்ற வேண்டுகோளுடன் திண்ணையில் அமர்ந்து முண்டாசை அவிழ்த்து வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

'' அட, முத்து இல்லே! இங்கே எங்கே வந்தே?'' என்று வினவிய பொன்னியைக் கண்டு, ''யாரு பொன்னம்மாவா?'' என வியந்தான், வந்தவன்.

இப்படித்தான் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள். தூரத்து உறவினர்கள் வெகுநாட்களுக்குப் பிறகு கூடினர். சப்தஸ்தானத் திருவிழாவின்போது திருவையாற்றிலிருந்து சுவாமி புறப்பட்டுத் திருப்பழனம் முதல் ஏழு ஊர்களைச் சுற்றி மறுநாட் காலை மூலஸ்தானம் அடையும். முத்துவும் பொன்னியும் ஏழு தலங்களையும் சுற்றி வந்தார்கள். இல்லைத்தானத்து ஆற்று மணல் படுக்கையும் தென்றல் காற்றும் இருவரையும் நெகிழ வைத்தன. விழா வாண வேடிக்கைகள் நீல விதான ஆகாயத்தில் வண்ணக் கோலங்கள் ஏற்படுத்தின. பொன்னியின் பெண்மை உள்ளத்திலும் உணர்ச்சி மத்தாப்புக்கள்! ஏக்கம் மிகுந்த அவள் இதயம் துணையைத் தேடியது.

கோடை முடிந்து காவேரியில் தண்ணீர் வந்தபோது முத்து அவளோடு சேர்ந்து வாழ வந்து விட்டான். அயல் அண்டை வீட்டினர் 'கசமுசா' என்றனர். அப்புறம் அதுவும் அடங்கி விட்டது.

ஆனால் ராசா முத்துவை வரவேற்கவில்லை. தருமனைக் கண்டால் வாலைக் குழைத்து வரும் அந்நாய் முத்துவிடம் 'உர்'ரென்று இருந்தது. தனது புதிய இல்வாழ்க்கையை ஏற்காத விசுவாசம் உள்ள ராசா இடித்துக் காட்டுவது போல் எண்ணினான் பொன்னி. அதை ஒழித்துவிட வேண்டும் என்ற குரூர எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. சந்தைக்குப் போகும் போதெல்லாம் ராசா கூடவே வரும். ஒரு நாள் பஞ்சாயத்துப் போர்டு ஆபீசுக்கு அருகில் லைசென்ஸ் இல்லாத நாய்களைப் பிடிக்கும் சுகாதார இலாகா ஊழியர்களைப் பார்த்தான். அவர்களிடம் ராசாவைக் காண்பித்துக் கொடுத்து விட்டான்.

அவர்களது இரும்புக் கம்பியின் சுருக்கிலே ராசா துள்ளியது; திமிறியது; போராடியது. அவன் அதனை இழுத்து வண்டிக் கூண்டுக்குள் தள்ளினான். கம்பிக் கதவுக்கு அப்பால் எழும்பி எழும்பி அது ஓலமிட்டது. ராசாவின் கண்கள் பரிதாபகரமாக அவனைப் பார்த்துக் கெஞ்சின.

பொன்னி முகத்தைத் திருப்பிக் கொண்டு, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு நடந்தாள்.

பொன்னியின் உள்ளத்தில் இப்போது நிம்மதி இல்லை. கனவிலே தனது கணவன் உருவம் நாய்த் தலையுடன் அவளைக் கவ்வ வருவது போல் கண்டு திடுக்கிட்டுப் பல நாட்கள் விழித்து எழுந்திருந்திருக்கிறாள்.

கொஞ்ச நாட்களாக முத்துவின் நடவடிக்கை வேறு கவலையைத் தருவதாக இருந்தது. முன்பின் அறியாத முகங்கள்—வெளியூர் மனிதர்கள் முத்துவின் வீட்டுக்கு வந்து பேசி விட்டுச் சென்றனர்.

இரண்டு இரவுகள் பொன்னி தனிமையில் கழித்தாள். இடையென்று தருமனின் நினைவும் ராசாவின் ஞாபகமும் அவள் நெஞ்சை அழுத்தின.

அமாவாசைக்கு மறு நாள் பொழுது புலர்ந்த போது —

ஊரெல்லாம் ஒரே பேச்சாக இருந்தது. திருவையாறு கோவில் கருவூலத்திலிருந்து விலை உயர்ந்த நகைகள் திருட்டுப் போய் விட்டன!

பொன்னி மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டவள் போல் காணப்பட்டாள். மறு நாள் காலை முத்து வந்தான். ''நாகப்பட்டினத்துக்கு அவசரமாகப் போயிருந்தேன்'' என்றான் அவன். கண்கள் ஜிவுஜிவு என்றிருந்தன.

''இந்தோ பார், ராசாத்தி. பவனக் கல்லு. பச்சை மரகதம். தங்கத் துண்டு. இப்போதைக்கு இது. மீட்டு நகைகளை உருக்கி விற்க ஆசாரியோட பாயவரம் போய் இருக்கிறாரு. அப்புறம் நம்ம பங்கு 'பத்து' தேறும்.''

''சத்தியமாச் சொல்லுங்க. இது அம்மாம் பிகை கழுத்திலே கிடந்ததுதானே? தாயார் சொத்தை நாம திருடுற கண் அவிஞ்சிடாதா? இது தருமமா?'' என்றாள் பொன்னி.

அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டு அவளே உதட்டைக் கடித்துக் கொண்டாள். உப்புத் தின்ற வீட்டுக்காக உயிரைக் கொடுத்த விசுவாச புருஷன் தருமன். அவன் பிரிவுக்குப் பிறகு துணை நாடி பிறனுடன் வாழ்க்கை நடத்தும் தான் எப்படித் தருமத்தைப் பற்றிப் பேசத் தகுதி வாய்ந்தவள்? அதனை உறுத்திக் காண்பித்தது என்பதற்காக ஒரு நன்றியுள்ள நாயின் உயிரையும் பிரித்தவள் அல்லவா?

எங்கும் திருவையாறு திருட்டுப் பேச்சு!

தஞ்சையிலிருந்து எஸ். பி. வந்திருக்கிறாராம். சென்னையிலிருந்து போலீஸ் நாய்கள் வருகின்றனவாம்.

குளித்துக் கொண்டிருந்த பொன்னி ஏதோ கூட்டம் போவதைக் கண்டு குடத்தில் நீர்கூட நிரப்பாமல் ஓடினாள்.

மோப்பம் பிடித்துக் கொண்டு முன்னேறும் நாயைத் தொடர்ந்தபடி போலீஸ் படைகள்; பின்னே ஊர்க்கூட்டம். செம்புழுதிப் படலம்.


ஐயோ! தன் வீட்டுக்குள் அல்லவா செல்லுகிறது, நாய். பொன்னி பதறினாள். விரைந்தாள். வீட்டுத் திண்ணையைச் சுற்றிச் சுற்றி வந்த நாய் முத்துவின் மீது தாவிற்று.

போலீஸார் வீட்டைச் சோதனையிட்டு விலை உயர்ந்த கற்களைக் கைப்பற்றினர். பொன்னி முத்து இருவரையும் கைது செய்தனர்.

போலீஸ் அல்சேஷன் நாய் — ஜவானின் சங்கிலிப் பிடிப்புக்குள் இருந்தபடி — பொன்னியை விரைத்து நோக்கியது.

பொன்னியின் தலை சுழன்றது. அதே கண்கள். அதே தவிப்பு. அதே ஊடுருவும் நோக்கு. பொன்னிக்கு ராசாவின் பரிதாப நோக்கு நினைவுக்கு வந்தது. தனது இனத்தைக் காரணமின்றிக் கொலை செய்த பொன்னியைப் பழிக்குப் பழி வாங்கிவிட்ட பெருமை போலீஸ் நாயின் முகத்தில் பளிச்சிட்டது.

ஐந்தே காசு போதும் உங்கள் குடும்பம் பெருகாமல் தடுக்க!



நிரோத்

உபயோகியுங்கள்

உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

15 காசுக்கு 3

அரசாங்க ஆதரவினால் குறைந்த விலை

வேண்டுமென்றபோது மட்டுமே பேறு...

வேண்டுமென்றபோது மட்டுமே இன்று மக்கட்பேற்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிரோத் உதவும்.

தாய் சேய் இருவரின் தேகநலம்...

குழந்தைகள் சரியான வளர்ச்சி பெற, முதல் மூன்று நான்கு வருடங்கள் அவர்களுக்கு விசேஷமான பராமரிப்பு தேவை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். பேற்றில் இழந்த தேக வலுவை மீண்டும் பெற தாய்க்கும் சிறிது காலம் பிடிக்கும். நிரோத் உபயோகிப்பதனால், அடுத்த பேற்றைச் சுலபமாகத் தள்ளிப் போடலாம்.

நிரோத் (காண்டோம்) உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம் ஆண்களுக்கானது. எளிமையான, தீமையற்ற நிரோத் உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது. இதை உபயோகிப்போரின் தேகநலம் பாதிக்கப்படுவதில்லை. நிரோத் எங்கும் கிடைக்கும்.

நிரோத், வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, மருந்துக் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை ஆகியவற்றில் கிடைக்கும்.

davp 70/67

வட்ட மேஜை

தமிழிசையும் தமிழ் நாடகத் துறையையும் வளர்ப்பதுடன் தமிழ் நாடக எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், செகந்திராபாத் தென் மத்திய ரயில்வே ஊழியர்களின் "லலித கலா நிலையத்தினர்" ஒரு 'நாடக இலக்கியப் போட்டி' நிகழ்த்த முன்வந்துள்ளனர். சுமார் இரண்டரை மணி நேரம் நடிக்க வாய்ப்பு அளிக்கும் சமூக, தேசிய, வரலாற்று நாடகக் கைப் பிரதிகள் 31–1–71க்குள் வரவேற்கப்படுகின்றன. நடுவர் குழாம் தேர்ந்தெடுக்கும் நாடகங்களுக்கு முறையே ரூ.500, ரூ. 300, ரூ. 200 என்று மூன்று பரிசுகள் வழங்கப்படும். தமிழ்கூறும் நல்லுலகத்து எழுத்தாளர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கோருகிறோம்.

ஹைதராபாத் – 27
24–10–70

காரியதரிசி,
லலிதகலா நிலையம்
ஏ.–49, ரயில்வே காலனி
கச்சகூடா,

சென்ற 18–10–70 'கல்கி' இதழில் 'பட்னாவைப் பார்த்தேன்' என்ற கட்டுரையில் பீஹாரி பையன்கள் கோதுமை மாவில் நீரை விட்டுப் பிசைந்து பச்சையாகவே உண்பது பற்றிப் படித்தேன்.

ஆனால் அவர்கள் உண்பது 'ஸத்து' என்று சொல்லப்படும் மாவு. அதில் நீரைவிட்டுச் சாப்பிடுவார்கள். ஸத்து என்று சொல்வது கடலைப் பருப்பை வறுத்து அரைத்த மாவு.

ராஞ்சி– 4
21–10–70

சாந்தா ஏகாம்பரம்

சென்ற 18–10–70 கல்கி இதழில் திரு இ. சா. ராஜூவின் 'பட்னாவைப் பார்த்தேன்' என்ற கட்டுரையிலேப் படித்தேன். அவர் எழுதிய முறையினை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். பட்னாவில் பல காலமாக இருக்கிறவன் என்பதாலும், பீஹார் மாநிலம் முழுவதும் சுற்றியவன் என்ற காரணத்தினாலும் அவர் கூறியுள்ள பல விஷயங்களை மறுக்கிறேன்.

வேலை முடிந்தபின் குளிக்காத பீஹாரியைப் பார்க்கவே முடியாது. குளிர் காலத்தில் பொறுக்க முடியாத குளிரினால் சிலர் குளிப்பதில்லை என்பது உண்மையே. ஒன்றிரண்டு நடைபாதைவாசிகளைப் பார்த்து விட்டு அனைவரும் அசுத்தமே உருவானவர்கள் என்று முடிவு கட்டுவது மிகவும் தவறு.

கொடுத்த வேலைகளைக் கச்சிதமாக முடித்து விடும் கடின உழைப்பாளிகளான பீஹாரிகளைத்தான் நான் கண்டிருக்கிறேன்.

"கய்னி" பற்றிக் குறிப்பிட்ட நண்பர் புகையிலை போடும் தமிழ் நாட்டவரை மறந்து விட்டாரா?

★ இக் குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

காய்கறிகள் திரு ராஜூ சொல்லியிருப்பது போல் மலிவல்ல. இங்கு கோடையில் கறிகாய்கள் கிடைக்கவே கிடைக்காது. அமோக விளைச்சல் காலங்களில்கூடக் கத்திரிக்காய் கிலோ நாற்பது பைசா. எண்ணைக் கொடுக்கும் கடைகள் கிடையாது.

இந்தியாவிலேயே வாழ்க்கைப் புள்ளி (Consumer Cost of Living Index) அதிகமாக இருப்பது பீஹார் மாநிலத்தில்தான். ஒரு மாநிலத்தைப் பற்றி மேலெழுந்தவாரியான கண்ணோட்டத்தில் மதிப்பிடுவது அந்த மாநிலத்தை இழிவுபடுத்த முயல்வதைப் போன்றதாகும்.

பட்னா – 1
2–11–70

ஆர். கே. ராமன்

★ சமீபத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் பேசும் போது இந்திய ரிஷிகளின் வாக்கியத்தை உலகோர் கவனிக்க வேண்டும் என்று ஓர் அறைகூவல் விடுத்திருக்கிறார். அம்மையார் அவர்கள் இந்த அளவுக்கு நம் நாட்டிலே தோன்றிய பெரியோர்கள், ரிஷிகள், அறிஞர்கள், ஞானியர்கள் ஆகியோரிடம் மதிப்பு வைத்திருப்பது உண்மையானால் அதற்காக நாம் நிச்சயம் மகிழ்ச்சியடையலாம், பெருமையும்கூடப் படலாம்.

இந்தப் பாரத மண்ணிலே இப்படியொரு பெண் தோன்றி நாட்டையே சின்னாபின்னப் படுத்தத் தயாராய் விடுவார் என்று அறிந்து தானோ என்னவோ அன்றைக்கே, "அதிகாரம் உள்ளூற அரிக்கும்", "இரும்பு துருப் பிடிக்கும் - அந்தத் துருவே இரும்பைத் தின்னும்" என்று அவர் சுட்டிக்காட்டிய இரு பொன்மொழிகளை அவருக்காகவே நமது பெரியோர்கள் அருளிச் சென்றார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

பதவி வேட்டையில் அவர் கையாளும் தில்லுமுல்லுகளையும், அவர் கொண்டிருக்கும் கூடாத நட்பையும் நாம் காணும்போது இந்த வார்த்தைகளின் ஆழ்ந்த உண்மையை நம்மால் நன்கு உணர முடிகிறது. சர்வதேச அரசியலிலே கம்யூனிஸ்டுகளுடன் உறவாடியவர்களின் நிலையெல்லாம் இரும்பு துருப் பிடித்து அந்தத் துருவே இரும்பைத் தின்ற கதையாகத்தான் முடிந்திருக்கிறது. இதை நமது பிரதமர் காலம் கடந்து போகுமுன்பே யாவது உணர முடிந்தால் அவருக்கும் நல்லது; இந்த நாட்டுக்கும் நல்லது.

ஈரோடு
25–10–70

நரேந்திரன்


கண்ணை போல் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கல்கி தீபாவளி மலரைப் படித்து இன்புற்றேன்.

கல்கி மலரைக்காண். கனிரசம் ஏனென்பாய்
எல்லையில்லா ஆனந்தம் ஏற்றமிகு ஓவியங்கள்
முத்தான பல கதைகள் சத்தான கவிதைகள்
பத்திரமாய்க் காப்பாய் பலகாலம் கண்மலரை.

செய்யாறு.
31–10–70

மலர்வண்ணன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

